# தேவதையின் கொலுசு

ரூ-8/-


அக்டோபர் 2011

மாத நாவல்

ஆர்.மணிமாலா

எழுதிய

தீபாவளி சிறப்பிதழ்!



## பூங்காற்று புதிரானது!



**ஆர்.மணிமாலா** எழுதிய

# பூங்காற்று புதிரானது!



**1**

சந்தன ஊதுபத்தியின் மணமும், கதம்பப் பூக்களின் வாசமும் மூக்கை நிரட.. பரிமளா கவனம் சிதறாமல் டி.டி.பி பண்ணிக் கொண்டிருந்தாள். அலுவலக சுவர்களில் பதிக்கப்பட்டிருந்த கண்ணாடி, சூரியக் கதிர்களை வடிகட்டி உள்ளே அனுப்பிக் கொண்டிருந்தது.

நெரிசல் மிகுந்த பிராட்வேயின் ஜனத்திரளை அவ்வப்போது வேடிக்கை பார்த்து, கைவிரல்களை நெட்டி முறித்துக் கொண்டாள்.

அந்த அலுவலகத்தை ஒட்டி பத்திரப் பதிவு அலுவலகம் இருந்தது.

ஷாகுல் அமீது புத்திசாலித்தனமாக பக்கத்திலேயே ஒரு இடம் பார்த்து அலுவலகமாக்கி, மூன்று டைப்ரைட்டர் வைத்து, ஐந்து ஆட்களை வேலைக்குச் சேர்த்து டாக்குமென்ட் டைப் பண்ணி, அதை ரிஜிஸ்டர் பண்ணும்வரை உதவும் பணியை எடுத்துச் செய்தார்.

ஜரூராய் ஓடிக் கொண்டிருக்கிறது அவரது தொழில். நல்ல காசு புழங்குகிறது. 'மின்ட்'டில் இரண்டு மாடி வீடுகள்! தவிர, வண்ணாரப்பேட்டை, ராயபுரம் வீடுகளிலிருந்தும் வாடகையாக வரும் பணம் சேவிங்ஸ் அக்கவுன்ட்டில் ஏறிக் கொண்டிருக்கிறது.

இருபது வருடமாய் அலுவலகம் அங்கேயே இருக்கிறது. டைப்ரைட்டர் மாறி கம்ப்யூட்டர் வந்தாயிற்று. நான்கு ஆட்களும் மாறி, மாறி புதுமுகங்கள் பணிபுரிந்தாலும், பரிமளா மட்டும் மாறாத சீனியர். மற்றவர்கள் சம்பளம் போதவில்லை என்று வேறு வேலையைத் தேடிக் கொண்டு ஜம்ப் பண்ணினாலும் பரிமளா மட்டும் அந்த சேரை கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள். எதுவுமே நிரந்தமில்லை என்கிற பயம்தான்.

வாங்குகிற பதிமூன்றாயிரம் சம்பளத்தை செலவு போக மிச்சம் பிடிக்கக் கற்று வைத்திருந்தாள்.

அவரவர் பணியில் மூழ்கியிருக்க.. ரஞ்சிதம் அவள் டேபிளருகே வந்தமர்ந்தாள்.

''அக்கா.. இந்தா.. டீ எடுத்துக்க..!''

பக்கத்து டீக்கடைப் பையன் கொண்டு வந்த டீ கப்பை, தனக்கொன்றும் பரிமளாவுக்கு ஒன்றுமாக எடுத்து வந்திருந்த ரஞ்சிதம், பரிமளாவை விட நான்கு வயது சின்னவள்.. அதாவது நாற்பத்தி எட்டு வயது.

''தாங்க்ஸ் ரஞ்சி.. உக்காரு..'' என்றவளது கண்கள் முதலாளியைத் தேட, சிறு முறுவலுடன் ''பாம்.. பார்ட்டியோட ரிஜிஸ்டர் ஆஃபீஸ் போயிட்டார். அடிக்கறதை நிறுத்திட்டு குடி.. சூடு ஆறிடப் போகுது..''

அந்த அன்புக்குக் கட்டுப்பட்டு எடுத்துப் பருகிய பரிமளாவின் முகத்தில் ஒரு இளக்கம் தெரிந்தது.

''இதென்ன ரஞ்சி?''

அவள் கையிலிருந்த கவரைப் பார்த்துக் கேட்டாள்.

''டி.டி.க்கா! புதுப்படம். இப்ப உள்ள விலைவாசியில குடும்பம் மொத்தமும் தியேட்டருக்குப் போய்ப் படம் பார்க்க முடியுமா? எங்க வீட்டிலேயே அஞ்சு டிக்கெட்டாச்சே? அதான் வீட்லேயே பார்த்துடறது. வேணும்னா எடுத்துட்டுப் போக்கா.. பார்த்துட்டுக் குடு.. தனுஷ் படம்தான்!''

''அட.. வேணாம் ரஞ்சி. என் வீட்ல டி.வி.டி பிளேயர்லாம் கிடையாது. அதான் எந்த சேனலைத் திறந்தாலும் படம் ஓடுதே!''

''இன்னுமா நீங்க டி.வி.டி வாங்கலே? ஆச்சர்யமாயிருக்கே? உங்க பொண்ணுங்க உங்களை எப்படி சும்மா விட்டு வச்சிருக்காங்க?'' ஆச்சர்யம் தாளாமல் கேட்டாள்.

''என் கஷ்ட நஷ்டம் புரிஞ்சவங்க ரஞ்சி!'' என்றாள் பரிமளா பெருமையாக!

''டாடி மம்மி வீட்டில் இல்ல.. தடை போட யாருமில்ல..

மியூசிக் சேனலில் விஜய் அரைகுறை ஆடைப் பெண்களுடன் அழகாய் ஆடிக் கொண்டிருக்க.. சவிதா, காரா பூந்தியை ஸ்பூனால் அள்ளி சாப்பிட்டபடி ஹாலில் ஆடிக் கொண்டிருந்தாள். சவிதா இருபதைத் தொடப் போகும் இளம் யுவதி. சீரியலில் நடிக்குமளவு அழகானவள்.

கிரைண்டரில் வழிந்த மாவை டேபிளில் வைத்து விட்டு, கிரைண்டரைக் கழுவி மேடையில் கவிழ்த்து விட்டு வந்த ஜீவிதா தங்கையைப் பார்த்து சிரித்தாள்.

''என்ன ஜீவி சிரிக்கிறே..?''

''இல்ல.. இப்ப இந்த ஆட்டம் போடறே! அம்மா திடீர்னு இப்ப வந்தாங்கன்னா.. பாட்டே தேவையில்லை.. தன்னால ஆடுவே இல்லே..?''



## திக்கெட்டும் தீபாவளி!

தீபாவளி என்றால் பலகாரம், புதுத் துணி, பட்டாசு.. இவ்வளவுதானே தெரியும். இந்தத் திக்கெட்டும் திருநாள் பற்றிய சிறப்புத் தகவல்கள்.. இதோ.. சரவெடியாய்..!

தீபாவளிக்கு வெடி வெடிக்கும் பழக்கம் பாபர் காலத்தில் ஏற்பட்டது.



''புரியலியே..'' ஆடுவதை நிறுத்தவில்லை.

''உனக்கு பில்டிங் ஸ்ட்ராங்.. பேஸ்மெண்ட் வீக்.. இல்லே..?''

''இப்ப ஏன் ஜீவி.. அவங்களை ஞாபகப்படுத்தறே..? ஹிட்லர் வர்றவரைக்கும்தான் இந்த சுதந்திரமெல்லாம்?''

''ஏன்டி அம்மாவைப் போய் அப்படியெல்லாம் பேசறே? தப்பில்லையா?''

''பின்னே? உனக்கு எட்டும், எனக்கு நாலு வயசுமா ஆகறது? இதைச் செய்யாதே, அதைப் பார்க்காதே, இதைச் சாப்பிடாதேன்னு.. ச்சே.. நம்ம வயசுக்குரிய வாழ்க்கையையா நாம வாழறோம்?''

''அதுவும் கரெக்ட்தானே..? இப்ப உள்ள கலாச்சாரத்தை நினைச்சு பயப்படறாங்கபோல..''

''அதுக்காக.. டி.வி.யில லவ் சாங்ஸ்கூடப் பார்க்கக் கூடாதுனா எப்படி?'' கோபத்தில் முகம் சிவக்க.. பொத்தென சேரில் அமர்ந்தாள் சவிதா.

ஜீவிதா அவளையே பார்த்தபடி சமையல் மேடையில் இருந்த காய்கறி கழிவுகளை அள்ளி, வெளி வாசலில் இருந்த குப்பைக் கூடையில் போடுவதற்காக வந்தவள், தெருமுனையில் அம்மா வருவதைப் பார்த்து சட்டென உள்ளே ஓடி வந்தாள்.

''ஏய்.. சவி.. அம்மா வர்றாங்க!''

''மை காட்!'' சவிதா பொட்டென டி.வியை அணைத்தாள். சாப்பிட்டுக் கொண்டிருந்த காராபூந்தியை மறைத்து வைத்து விட்டு, அறைக்குள் சென்று புத்தகத்தை எடுத்து விரித்து வைத்துக் கொண்டாள்.

சோர்ந்து போய்.. செருப்பைக் கழற்றி விட்டு உள்ளே வந்த பரிமளாவுக்கு, ஹாலில் ஃபேன் ஓடிக் கொண்டிருப்பதைப்

பார்த்ததும் ஜிவ்வென ஏறியது கோபம்.

''ஆளில்லாத எடத்துல ஃபேனைப் போட்டது யாரு? இந்த மாசம் கரண்ட் பில் எவ்வளவுன்னு தெரியுமா?''

'ஆமா.. நானூத்து அம்பது ரூபாவை நாலாயிரம் மாதிரி பேசறது?' மனதின் நினைப்பை முகச் சுளிப்பில் காட்டியபடி வெளியில் வந்தாள் சவிதா.

''ஸாரிம்மா.. நான்தான் போட்டேன். இவ்வளவு நேரமும் இங்கேதாம்மா படிச்சிட்டிருந்தேன். ஜஸ்ட் இப்பத்தான் ஒரு நிமிஷம்கூட இருக்காது.. இப்பதான் உள்ளே போனேன்!''

''பொம்பளைப் புள்ளைங்களுக்கு கவனம் மட்டும் எப்பவும் சிதறக் கூடாது.. போ.. போய்ப் படி! ஜீவி.. கொஞ்சம் தண்ணி கொடும்மா!''

2

அடுத்த சில நிமிடங்களில் பரபரவென செயல்படத் துவங்கினாள் பரிமளா. ஜீவிதா திரட்டிக் கொடுத்த சப்பாத்தி மாவை தவாவில் போட்டு சுட்டு, காலையில் டிஃபனுக்காகச் செய்த மீதமிருந்த குருமாவை சூடு பண்ணி.. சாப்பிட அமர்ந்தாள்.

ஜீவிதா அமைதியாய் சாப்பிட, சவிதா தன் அதிருப்தியை மறைக்கப் படாத பாடுபட்டாள். கவனித்த பரிமளா எதையும் வெளிக் காட்டிக் கொள்ளவில்லை என்றாலும் வருத்தப்பட்டாள்.

'மன்னிச்சுடுங்க கண்ணுகளா.. உங்களுக்கு வாய்க்கு ருசியா, விதவிதமா சமைச்சித் தர.. நம்ம குடும்ப நிலமை வாய்ப்புத் தரல. புகுந்த வீட்லயாவது நீங்க விரும்பினது அத்தனையும் கிடைக்கும் அந்தக் கடவுள் நம்மளை கைவிட மாட்டான்.'

சவிதா ஒரு சப்பாத்தியோடு எழுந்து கொண்டாள்.

''என்ன சவிதா.. எந்திரிச்சிட்டே?''

''போதும்மா.. வயிறு ரொம்பிடுச்சு!''

ஒருவிதக் குற்ற உணர்ச்சி வாட்ட, பரிமளா எழுந்து சென்ற மகளையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

சாப்பிட்ட பின், ''காய்கறி நறுக்கி வச்சிடவாம்மா?'' என்று கேட்டாள் ஜீவிதா.



''நீ போய்ப் படு.. நான் பார்த்துக்கறேன்!''

பரிமளா மறுபடியும் சமையலறைக்குள் சென்று, மறுநாள் சமைப்பதற்கான காய்கறிகளை நறுக்கி எல்லாவற்றையும் ஃப்ரிட்ஜில் வைத்தாள். தயிருக்காக வைத்திருந்த பாலில் கொஞ்சம் எடுத்து சூடு பண்ணி, டம்ளரில் ஊற்றி சவிதாவின் அறைக்குச் சென்றாள். உள்தாழிட அனுமதி இல்லை என்பதால்.. கை வைத்ததும் திறந்து கொண்டது கதவு.

காதில் செல்ஃபோனை வைத்து அழுத்திக் கொண்டு, யாரிடமோ ஹஸ்கி வாய்ஸில் பேசிக் கொண்டிருந்த சவிதா, கதவு திறக்கப்பட்ட சப்தம் கேட்டதும்.. அணைத்து போர்வைக்குள் மறைத்துக் கொண்டாள்.

பரிமளா கவனித்து விட்டாள். ஆனாலும் காட்டிக் கொள்ளாமல், ''இந்தா பால்..'' என்று மகளிடம் நீட்டினாள்.

தன்னை சுதாரித்துக் கொண்டு எழுந்தவள், ''என்னம்மா இது.. எப்பவும் நைட்ல பால் தர மாட்டியே..!''

''சரியா சாப்பிடலே இல்ல. வயசுப்பிள்ளை.. இப்படி அரைகுறையா சாப்பிடக் கூடாது. குடி!'' கொடுத்து விட்டு வெளியேறினாள்.


தோளைக் குலுக்கி உதட்டைப் பிதுக்கிய சவிதா, பாலைக் குடித்தபடியே யோசித்தாள்.

'ஃபோனில் பேசியதை அம்மா பார்த்திருப்பாங்களா?'

குழப்பத்துடனே வேலையில் ஈடுபட்டாள் பரிமளா. பாத்திரம் தேய்த்து, சமையல் மேடையை சுத்தம் செய்து விட்டு, பிசுபிசுத்த கழுத்தையும் முகத்தையும் சோப்புப் போட்டுக் கழுவினாள். பீரோ கண்ணாடி முன் நின்று துவாலையால் முகத்தைத் துடைத்தவள், தன்னையே சிறிது நேரம் பார்த்தாள்.

ஐம்பதைத் தாண்டிய உருவம், இருபத்தியிரண்டு வருடங்களாய்ப் பொட்டு வைக்கத் தடை செய்திருந்த நெற்றி, கழுத்தில் மெல்லிய செயின், காதில் சின்ன கம்பல், நிரந்தரமாய்க் கவலைகளைத் தேக்கிய முகம்.

ஆண் இல்லாத குடும்பத்தைக் காப்பாற்ற அவள் போராடிய போராட்டம் லேசுப்பட்டதல்ல. வாழ்க்கைக்கு சுகங்களையும், வாய்க்கு சுவைகளையும் காட்டாமல், சிறு ரவையைச் சுமந்து சேமித்து வைத்த எறும்பைப்போல, தன் பிள்ளைகளுக்காக.. இன்னமும் சுமந்து.. சேமித்து..



தேய்ந்து கொண்டிருக்கிறாள்.

ஜீவிதா படித்து முடித்து விட்டு, தாம்பரத்தில் பணிபுரிந்து கொண்டிருக்கிறாள். வயது இருபத்தி நாலு. அவள் வருமானம் அப்படியே அவள் அக்கவுண்ட்டில் பத்திரப்படுத்தப்படுகிறது.

பரிமளா.. பிராட்வேயில் பணியை முடித்து விட்டு, திருவள்ளூரில் ஒரு இடத்தில் பார்ட் டைம் வேலை பார்த்து விட்டு, வீடு திரும்ப ஒன்பது மணியாகி விடும். அவளுக்கு உழைப்பதற்கு இருபத்தி நாலு மணி நேரம் போதவில்லை.

புதிதாய் முளைத்த கவலை அவளை வாட்டத் தொடங்கியது.

'சவிதா இந்நேரத்தில் யாரிடம் பேசிக் கொண்டிருக்கிறாள்? என்னைப் பார்த்ததும் ஏன் மறைக்கணும், ஒருவேளை.. அவள்..'

'இல்லை.. வேண்டாம்! கடவுளே.. யுகேந்திரன் கொடுத்த அடியைப் போல்.. இவளையும் கொடுக்க வைத்து விடாதே! அதைத் தாங்கிக் கொள்ளக் கூடிய சக்தி எனக்கில்லை.'

தவிப்பும் குழப்பமும் நெருங்க.. அதிகமாய் வியர்த்தது. படுத்தவளுக்கு உறக்கம் வரவில்லை.

மிகச் சிறிய ஒட்டு வீடுதான் அது! இரண்டு அறைகள், சின்னதான ஹால், அதிலேயே ஒரு மூலையில் சுவற்றில் கதவு பதித்து பூஜை அலமாரி, பாத்ரூம், கிச்சன்!

வீட்டின் முன்புறம் கொஞ்சம் இடம் இருந்தது. பரிமளா அதை வீணாக்காமல் வெந்தயக்கீரை, பசலைக்கீரை, அரைக்கீரை,

தக்காளி, வெங்காயம், இஞ்சி, மிளகாய், கொத்துமல்லி, கறிவேப்பிலை என்று சமையலுக்குத் தேவையானதை வளர்த்தாள். சுவரோரம் அவரைக்காயும் பாகற்காயும் ஓடி, செம்பருத்திச் செடியையும் அரவணைத்துக் கொண்டிருந்தது. இடது பக்க ஜன்னலையொட்டி கஸ்தூரிச் செடி.. நிறைய பூக்களுடன் வாட்டசாட்டமாய் நின்றிருந்தது.

பரிமளாவின் மூத்த மகன்தான் யுகேந்திரன். இப்போது அவன் இவர்களோடு இல்லை. தன் மனைவி, குழந்தைகளுடன் எங்கே இருக்கிறான் என்பதும் தெரியாது. அதைத் தெரிந்து கொள்ள பரிமளா நினைத்ததும் இல்லை. மூன்று வருடத்துக்கு முன்புதான்.. அம்மாவைத் துடிக்க வைத்து, அவள் நம்பிக்கையில் மண் அள்ளிப் போட்டு, தான் காதலித்த பெண்ணைப் பதிவுத் திருமணம் செய்து கொண்டு போய் விட்டான்.

இருபத்தி நான்கு வயதுவரை அவனை நன்கு படிக்க வைத்து.. வேலைக்குச் சென்றதும் தன் சுமையில் பங்கு போட்டுக் கொள்வான் என்று வெகுவாய் நம்பிக்கையோடிருந்தாள். ஆனால் வேலை கிடைத்து முதல் மாதம் சம்பளம் வாங்கிய கையோடு, தன் இணையோடு பறந்து விட்டான். அவன் செய்கை அவளுக்கு மரண அடியாய் அமைந்தது.

வயதாகியிருந்த ஃபேனின் சப்தம் கடக், கடக் என சப்தம் எழுப்பியது. இரவின் நிசப்தத்தில் ஃபேன் சப்தத்தை மீறி.. 'களுக்' என சிரிக்கும் சப்தம்போல் கேட்டது.

நிலைகொள்ளவில்லை பரிமளாவுக்கு. முதலில் ஜீவிதாவின் அறையைத் திறந்தாள். ஒரு கையை வயிற்றின் மேலும், மறு கையை நெற்றியின் மேலும் வைத்தபடி நிச்சயமாய் உறங்கிக் கொண்டிருந்தாள்.

மெல்ல நடந்து.. அடுத்த அறைக்குச் சென்றாள். மெல்ல.. கதவைத் திறந்தாள். சவிதா இவளுக்கு முதுகைக் காட்டியபடி ஒருக்களித்துப் படுத்திருந்தாள். முணுமுணுப்பாய்ப் பேச்சு சப்தம் கேட்டது.

மனதில் பாரம் ஏற.. தன் இருப்பிடத்துக்கு வந்தாள். வெகு நேரம் பாயில் அமர்ந்தபடியே யோசித்தாள்.

ஹால் கடிகாரம் மண்டையில் அடிப்பதுபோல் 'ணங்'கென ஒருமுறை அடித்தது. நிமிர்ந்து பார்த்தாள்.

பதினொன்றரை!

கடிகார சப்தத்தில் அரண்ட பல்லியொன்று சுவற்று



### திக்கெட்டும் தீபாவளி!

அக்பர், தீபாவளி பண்டிகையில் கலந்து கொண்டதாக 'அயின் - இ அக்பரி' (அக்பரின் ராஜாங்கம்) நூல் குறிப்பிடுகிறது.

மூலைக்குச் சென்று நின்றது.

'இவ்வளவு நேரமாக யாரிடம் பேசிக் கொண்டிருக்கிறாள்?'

**ஜீ**விதா செம்பருத்தியையும் கஸ்தூரியையும் பறித்து வந்து சாமி படங்களுக்கு வைத்தாள். சவிதா பாத்ரூமிலிருந்து வெளிப்பட்டாள்.

''ஜீவி..'' என்றாள் மெல்லிய குரலில்.

''என்ன?''

''ஹிட்லர் எங்கே?''

''உதைபடப் போறே? அம்மா காதிலே விழப் போகுது!''

சுற்றுமுற்றும் பயத்துடன் பார்த்தபடி சொன்னாள்.

''என்னாச்சு.. இன்னும் டீ கூடத் தரலே?''

''சவிதா.. இங்கே வா!'' கிச்சனில் இருந்து அம்மாவின் குரல்.

''இதோ.. வர்றேன்மா!''

'அம்மா காதில் விழுந்திருக்குமோ?'

வாணலியில் எதையோ வதக்கிக் கொண்டிருந்த பரிமளா, ''டீ எடுத்துட்டுப் போ.. ஜீவிதாகிட்டேயும் குடுத்துடு!'' என்றாள் முகத்தைத் திருப்பாமல்.

''சரிம்மா!''

தம்ளர்களுடன் ஜீவிதாவிடம் வந்தாள்.

''இந்தா சுடுதண்ணி.. இதிலே ஒரு லெமனைப் பிழிஞ்சு சாப்பிட்டா.. இடுப்புல டயரே விழாதாம்!''

''கிண்டலா?''

''பின்னே.. இதுக்குப் பேரு டீயா?''

கேலி பேசிய தங்கையை சிறு கவலையுடன் பார்த்தாள் ஜீவிதா.

**3**

"**ஜீ**விதா.. நான் பூ போட்டுக்கறேன்.. ஆஃபீஸ்க்கு நேரமாகுது பார்.. சாப்பிட வா.. அவ எங்கே?"

இட்லி அடங்கிய பாத்திரமும் தட்டும் கீழே வைத்து அழைத்தாள் பரிமளா.

"ட்ரஸ் பண்ணிட்டிருக்காம்மா.. கூப்பிடறேன்.. சவி.."

"வந்துட்டேன்!"

வந்தமர.. இருவருக்கும் தட்டில் வைத்துப் பரிமாறினாள். எப்போதும் தானும் கூடச் சேர்ந்து சாப்பிடுவாள். இன்றைக்கு தங்கள் இருவருக்கு மட்டுமே பரிமாறுவதைப் பார்த்து ஆச்சர்யமாய்க் கேட்டாள் ஜீவிதா.

"சாப்பிடலையாம்மா?"

"பசிக்கலே"

எழுந்து சென்று இருவருக்கும் மதிய உணவு அடைத்த டிஃபன் பாக்ஸ், வாட்டர் பாட்டில் எல்லாம் கொண்டு வந்து வைத்தாள்.

"சாம்பாரும் கொத்தவரங்காய்ப் பொரியலும் வச்சிருக்கேன்!"

"சரிம்மா"

அம்மாவின் லஞ்ச் பேக் மேஜையில் தயாராய் இருக்கும். இன்று அது மிஸ்ஸிங்! ஜீவிதா அம்மாவின் முகத்தை கவனிக்காமல் இல்லை. வழக்கத்தை விட யோசனையும் குழப்பமும் சூழ்ந்திருந்தது.

"என்னாச்சு?"

ஏழரை மணிக்குப் புறப்பட்டால்தான்.. டிரெய்னைப் பிடிக்க முடியும். சவிதா கல்லூரிக்கும் ஜீவிதா ஆஃபீஸ்க்கும் போக சரியாய் இருக்கும். அவர்கள் புறப்பட்டு அரை மணி நேரம் கழித்துப் புறப்படுவாள் பரிமளா. ட்ரெய்னோ, பஸ்ஸோ.. எது கிடைக்கிறதோ அதில் ஏறி, சரியான நேரத்துக்கு அலுவலகம் சென்று விடுவாள். இன்னும் தயாராகாமல் இருந்த அம்மாவிடம் வந்தாள்.

"போய்ட்டு வர்றேம்மா!"

"போய் வா!"

"ஆஃபீஸ்க்குப் போகலையாம்மா?"





**திக்கெட்டும் தீபாவளி!**

தீபாவளி அன்று சூரிய கிரகணம் ஏற்படுவது அரிதானது. 1995ஆம் ஆண்டு அக்டோபர் 24 அன்று, தீபாவளி அதே நாளில் சூரிய கிரகணம் ஏற்பட்டது. அதுபோல் 257 ஆண்டுகளுக்கு முன்பு, 1762ஆம் ஆண்டு அக்டோபர் 17ம் தேதி வட இந்தியாவில் தீபாவளி அன்று சூரிய கிரகணம் ஏற்பட்டது.

"போறேனே..!"

"அப்ப லஞ்ச் எடுத்துக்கலே?!"

"நேரமாச்சில்லே உனக்கு? கிளம்பு!"

"உடம்புக்கு முடியலியாம்மா?"

"டிரெய்னை மிஸ் பண்ணிடப் போறே.. கிளம்பு ஜீவி!" குரலில் அழுத்தம். மிரண்டு போனாள்.

"சரிம்மா!"

"அம்மா வர்றேன்!" சவிதா கையசைக்க..

"ம்.." என்றாள் சிறு தலையசைப்புடன்.

இருவரும் புறப்பட்டனர்.

அலுவலகத்துக்கு ஒரு மணி நேரம் பர்மிஷன் கேட்டு இருந்ததால் ஆயாசமாக சேரில் அமர்ந்தாள். கண்கள் கலங்கின.

'ஏதாவது நடந்திருக்குமோ?'

இருக்க இருக்க மனசு பாரமாக.. ஜீவிதா பாதியில் விட்டுப் போயிருந்த சாமி படங்களுக்குப் பூக்களை எடுத்து வைக்க ஆரம்பித்தாள். வழக்கமாய்.. சில பாடல்களைப் பாடி பூஜை செய்வாள். ஆனால் இன்று பாடக் கூடிய மனநிலை இல்லை. சஞ்சலமும் பயமும் அவளை இம்சித்தது. ஆஞ்சநேயர் துதி மட்டும் சொன்னாள்.

"ஆஞ்ஜநா கர்ப்ப ஸம்பூதம் குமாரம் ப்ரஹமசாரிணம்
துஷ்ட க்ரஹ வினாவசம் தம் ஹனுமந்த முபாஸ்மஹே!
புத்திர் பலம் யசோ தைர்யம் நிர்பயத்து மரோகதா
அஜாட்யம் வாக்படுத்தும்ச ஹமானுத் ஸ்மரணாத் பவேத்!"

பரிமளாவின் கன்னங்களில் கண்ணீர் உருண்டு வந்தது.





'ப்ளஸன்ட் காஃபி டே!'

உள்ளே இன்டீரியரும் இதமான குளிரும் உயர் தர ஃபர்னிச்சர்களும் ரசிக்க வைத்தன. டேபிள்கள் நிறைந்திருந்தன. அதில் நடுத்தர வயதினரையோ அதற்கு மேற்பட்டவரையோ பார்க்க முடியவில்லை.

எல்லாருமே.. யுவன், யுவதிகள்.

பெண்கள் நடிகைகளை மிஞ்சும் அளவில் உடைகளை அணிந்திருந்தனர். ஸ்லீவ்லெஸ் டைட் டாப்ஸ், ஜீன்ஸ் அல்லது ஸ்கர்ட் அல்லது சல்வார்.. என அணிந்திருந்த உடையில் இளமை ததும்ப.. சிரித்து சிரித்துப் பேசிக் கொண்டிருந்தனர். யாரும் தனித்து வரவில்லை.. பெண்கள் தோழிகளுடனும் வரவில்லை. பாய் ஃப்ரெண்ட் பார்த்து ரசிப்பதை பெருமையும் சிணுங்கலுமாய் ஏற்றுக் கொண்டனர்.

ஒரு ஓரமாய் இருந்த டேபிளில் சவிதாவும் மித்ரனும் அமர்ந்திருந்தனர். சல்வாரின் மேல், காலையில் அணிந்து வந்திருந்த துப்பட்டா, இப்போது அவள் பேகில்! கச்சிதமான உடல்வாகுடன், இளமைத் துள்ளலுடன் இருந்த தன் மனம் கவர்ந்தவளை மயக்கத்துடன் பார்த்தான் மித்ரன்.

வயது இருபத்தாறு. நல்ல வேலையில், கை நிறைய சம்பளத்துடன், நிஜமான காதலுடன் இருப்பவன். பெற்றோர் இல்லை. மாமாவின் அரவணைப்பில் இருப்பவன். பெற்றோர் விட்டுப்போன வீட்டில் மாதா மாதம் கணிசமாய் வாடகைப் பணம் வருகிறது.

''இப்படி பக்கத்துல வந்து உக்காரு மித்ரு..''

''ம்ஹூம்.. உன்னை எதிரே உக்கார வச்சு இப்படி பார்க்கறப்ப.. எப்படி இருக்கே தெரியுமா?'' என்றான்

அர்த்தம் பொதிந்த பார்வையுடன்.

"ச்சீ.." என்றாள் கூச்சத்துடன்.

"உனக்கு ஜீன்ஸும் ஸ்லீவ்லெஸ் ஷர்ட்டும் போட்டா எப்படி இருக்கும் தெரியுமா? அழகிடி.. நீ!"

"போட்றதுக்கு எனக்கும் ஆசைதான்! ஆனா.. எங்கம்மா.."

"அவங்களைப் பத்தி இப்ப எதுக்கு? கல்யாணத்துக்குப் பிறகு.. நீ நான் வாங்கித் தர்ற டிரஸ்ஸஸ் மட்டும்தான் போட்டுக்கணும். விதவிதமான மாடர்ன் ட்ரஸ்ல உன்னை அழகு பார்க்கணும்."

சவிதா அவன் பேச்சில் கிறங்கி.. எழுந்து பக்கத்தில் வந்தமர்ந்தாள். அவனோடு நெருக்கமாய்.. தன் உடல் பதிய அமர்ந்து தோளில் சாய்ந்து கொண்டாள்.

"எப்ப அந்த நாள் வரும் மித்ரு? படிப்புலகூட கவனம் போகலே.. எப்பவும் உன் ஞாபகமாகவே இருக்கு."

"நான் இப்பக்கூட ரெடி. என் ஸைட்ல எந்தப் பிரச்னையும் இல்லே. தாலியக் கட்டிட்டு குடும்பம் நடத்த வேண்டியதுதான்!"

"என் வீட்ல இதைப் பத்தி எப்படி பேசறதுன்னுதான் புரியலே. என் அம்மா ஒரு ஹிட்லர்!"

"ப்ச்.. அவங்களைப் பத்தி இப்பப் பேசி லவ்லி மூடைக் கெடுக்காதே! அவங்களைப் பத்திதான் நிறைய சொல்லிட்டியே! வர்றியா.. பிக்சர் போலாம்!"

"என்ன விளையாடறியா? க்ளாஸை கட் அடிச்சிட்டு வந்திருக்கேன். படத்துக்குப் போய் எப்ப வீட்டுக்குப் போறதாம்?" மறுக்க மனமின்றிச் சொன்னாள்.

"பாதியிலேயே வந்துடலாம்!" அவன் மூச்சுக் காற்று சூடாய் அவள் கன்னத்தை சிவக்க வைத்தது.

"ம்ஹும்.. அன்னைக்கும் அப்படித்தான்.. தியேட்டர்ல சும்மாயில்லாம.."

"பின்னே.. படம் பார்க்கவா போறோம்?"

"சீ! அன்னிக்கு அப்படித்தான்..! அம்மாகிட்ட உதட்டுல எறும்பு கடிச்சிடுச்சுன்னு சொல்லி சமாளிக்கறதுக்குள்ள.. இதயமே வாய்வழியா வந்துடும்போல இருந்துச்சு தெரியுமா?"



**திக்கெட்டும் தீபாவளி!**

ஸ்ரீராமர் வனவாசம் முடித்து அயோத்திக்கு வந்தபோது, தீபங்கள் ஏற்றி அவரை வரவேற்று மகிழ்ந்தனர் மக்கள். அதுவே தீபாவளி ஆயிற்று.



"சரி.. இன்னைக்கு வீங்க வைக்க மாட்டேன். ஒக்கேவா?"

"ப்ராமிஸ்?"

"ப்ராமிஸ்!" என்றவன், எதிர்பார்க்காத தருணத்தில் அவள் கழுத்தில் இதழ்களை ஒற்றி எடுத்தான்.

"படவா!" செல்லமாய்க் கத்தினாள்.. அவனுக்கு மட்டும் கேட்கும்படி.

**4**

இரவு சாப்பிடும்போது ஜீவிதா கவனித்தாள். அம்மா தனக்குத் தட்டு வைத்துக் கொள்ளவில்லை. முகம் வெகுவாய் சோர்ந்திருந்தது. சவிதாவும் அம்மா சாப்பிடாததை அப்போதுதான் உணர்ந்தாள்.

"அம்மா.. ஏம்மா ஒரு மாதிரியா இருக்கே?" ஜீவிதா கவலையுடன் கேட்டாள்.

"ஒண்ணுமில்லே!"

"இல்லேம்மா.. ஏதோ விஷயம் இருக்கு. உனக்குத் தட்டு வச்சுக்கலையா?"

"வேணாம்.. சாப்பிடப் பிடிக்கலே!"

"காலையிலேயும் சாப்பிடலே. லஞ்சும் எடுத்துட்டுப் போகலே.. இப்பவும் சாப்பிடலேன்னா? எங்களுக்கும் சாப்பாடு வேண்டாம்"

"......?!"

"சொல்லும்மா.. என்ன பிரச்னைன்னு சொன்னாத்தானே தெரியும்?"

பரிமளா அவர்களை ஏறிட்டாள்.

"எனக்கு ஒரு உண்மை தெரிஞ்சாகணும்!"

இரண்டு பெண்களும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். சவிதா கண்களில் சின்னதாய் மிரட்சி.

''சொல்லுங்கம்மா!'' என்றாள் ஜீவிதா.

பரிமளா சவிதாவை நேருக்கு நேர் பார்த்தாள்.

''எனக்குத் தெரியாம வேறு சொந்தம் உனக்கு இருக்காங்களா..? ராத்திரி முழுக்கப் பேச..?''

நேரடியாக வந்து விழுந்த கேள்வியை எதிர்கொள்ள சற்று நேரம் பிடித்தாலும் சமாளித்தாள்.

''அப்படியெல்லாம் இல்லையே'' என்று சொன்னால் சந்தேகம் அதிகரிக்கும். அம்மா நன்றாக கவனித்திருக்கிறாள். பதறியவள்போல் பாசாங்கு செய்தவள், ''அம்மா.. அது என் க்ளாஸ்மேட் வந்தனாம்மா!''

''அதெப்படி! தினசரி காலேஜ்ல பார்த்துக்கறீங்க? அங்கே பேசாததையா நடுநிசியில பேசுவீங்க? அப்படிப் பேச என்ன இருக்கு?''

''தப்புதாம்மா! அவளோட சர்க்கிள் பெரிசும்மா. இன்ட்ரஸ்ட்டிங்கா பேசுவா. நிறைய ஜோக்ஸ் சொல்லுவா. அவ ஃப்ரண்ட்ஸ்களைப் பத்திப் பேசுவா. அவகிட்டே பேசினா நேரம் போறதே தெரியாதும்மா! இனி பேச மாட்டேம்மா.. ஸாரிம்மா!''

ஏனோ அவள் பேச்சில் முழு நம்பிக்கை வரவில்லை.பரிமளா தன் கையை அவள் முன் நீட்டினாள்.

''நீ சொல்றதெல்லாம் உண்மைனு என் மேல சத்தியம் பண்ணு!''

யோசிக்கவே இல்லை. பட்டென கையில் அடித்தாள்.

''சத்தியமாம்மா!''

அதன்பிறகுதான் பரிமளா ரிலாக்ஸ் ஆனாள்.

''நான் உன்னை நம்பறேன் சவிதா! உங்களையெல்லாம் ஒழுங்கா வளர்த்துக் கரை சேர்க்கணும்ங்கிற பொறுப்பு அம்மாவுக்கு நிறையவே இருக்கு. உங்ககிட்ட கொஞ்சம் அதிகமாகவே கடுமையா நடந்துக்கறேன். வேற வழியில்லேம்மா! அந்தப் பொண்ணு பேரென்ன சொன்னே? வசுமதியா?''

''வந்தனா!''

''அ.. வந்தனா.. அவகிட்டேகூட அதிகமா பேச



என்ன இருக்கு? பாடம் சம்பந்தமா பேசினா.. அதிலே ஒரு அர்த்தமிருக்கு. ஜோக்கு, அது இதுன்னு பேசற வாய்.. ஒரு கட்டத்துல தேவையில்லாத விஷயங்களைப் பேசும். மத்தவங்களோட தப்பான நடவடிக்கையைப் பத்திப் பேசும். அந்தத் தப்பை நாம செஞ்சு பார்த்தா என்னன்னு தைரியம் வரும். வேணாம் சவி! நீ சின்னப் பொண்ணு. இன்னும் பக்குவம் வரலே! யார் பேசினாலும் ஒண்ணு ரெண்டு வார்த்தையோடு முடிச்சிடு. சரியா?''

சரியெனத் தலையாட்டினாள்.

''போன வருஷம் அவ பர்த்டேக்குனு ஆசையா உன் தங்கச்சிக்கு செல்ஃபோன் வாங்கி ப்ரசென்ட் பண்ணினே! அப்பவே வேணாம்னேன். இப்ப பாத்தியா? சரி.. போய் எனக்கும் தட்டு எடுத்துட்டு வா.. பசிக்குது!''

ஜீவிதா எழுந்து சென்றாள். சவிதாவைத் திரும்பி ஒருவித பயத்துடன் பார்த்தாள்.

**வெ**ளிவாசலில் நின்றிருந்த முருங்கை மரத்தில், கொம்பில் தட்டி காய்களைப் பறித்தாள் பரிமளா. வஞ்சனையில்லாமல் காய்கள் கொத்துக் கொத்தாய்த் தொங்கின.

ஜீவிதா கீழே விழுந்த காய்களை பொறுக்கித் தனியே வைத்தாள். கிட்டத்தட்ட அறுபது, எழுபது காய்கள் இருக்கும்.

''அதையெல்லாம் ஒரு சணல் போட்டுக் கட்டு ஜீவி. உடைஞ்சத வீட்டு சமையலுக்கு எடுத்து வை. ஆஃபீஸ் போறப்ப.. மார்க்கெட்ல குடுத்துட்டுப் போறேன்.''

ஜீவிதா சொன்னதைச் செய்தாள்.

பரிமளா இப்படித்தான். கூச்சம் பார்க்காமல் காய்களை விற்றுக் காசாக்கி விடுவாள். பெண்கள் இருவருக்கும் இதில் உடன்பாடில்லை. அக்கம் பக்கத்தினர் இது குறித்துக் காதுபடவே கிண்டல் செய்வதுண்டு.

''இதில் என்ன பெரிதாய்ப் பணம் வந்துவிடப் போகிறது? அக்கம் பக்கத்து வீடுகளுக்கு ஆளுக்கு ரெண்டு காய்களை கொடுத்தால்தான் என்ன? மானம் போகிறது?'' என்று சவிதா கவலையாய்ப் புலம்புவாள்.

'இந்த விஷயம் மித்ரனுக்குத் தெரிந்தால் எவ்வளவு அசிங்கம்?'

ஆனால், பரிமளா எதைப் பற்றியும் கவலைப்பட்டதில்லை. உள்ளே வந்த அம்மாவின் அருகில் வந்தாள் ஜீவிதா.

''அம்மா!''

''........?!''

''வர்ற ஞாயிற்றுக்கிழமை.. அப்பாவோட திதிம்மா!''

முகம் மாறியது பரிமளாவுக்கு. உள்ளுக்குள்ளே.. கரை புரண்டது எண்ணவோட்டம்.

''நல்லது.. ஞாபகப்படுத்தினே! ஒண்ணு பண்ணு ஜீவி!''

''சொல்லும்மா!''

''உன் ஆஃபீஸ் பக்கத்துலதானே ரெடிமேட் ஷாப் இருக்கு. பணம் தர்றேன். பேண்ட், ஷர்ட் எடுத்துட்டு வர்றியா?''

''பணம் வேணாம்மா.. என்கிட்ட இருக்கு!''

பரிமளா செய்கிற தர்ம காரியம் ஒன்று உண்டென்றால் இது மட்டும்தான். இறந்து போன கணவனுக்காக, துணிமணி வைத்துப் படையலிட்டு, யாராவது பிச்சைக்காரனுக்கோ, கூலித் தொழிலாளிக்கோ கொடுத்து விடுவாள்.

ஜீவிதாவும் சவிதாவும் அம்மாவிடம் சொல்லி விட்டுப் புறப்பட்டனர். ஸ்டேஷன் நோக்கி நடந்தனர்.

''துணிகளுக்கு சாயம் போடற இடம் எதாவது தெரியுமா ஜீவி?''

''ஏன் கேக்கறே?''

''எல்லா டிரஸ்ஸும் கலர் மாறி 'ஙே'ன்னு முழிக்குது. காலேஜ்ல பசங்க கிண்டல் பண்றாங்க. பர்த் டேக்கு ஒண்ணு, தீபாவளிக்கு ஒண்ணுன்னு வருஷத்துக்கு ரெண்டு செட்.. எப்படி போதும்? செருப்பைப் பார், எத்தனை முறை தைச்சிட்டேன் தெரியுமா?''

ஜீவிதா தங்கையை ஏறிட்டாள்.

''அதென்ன சவி.. பட்டுனு சத்தியம் பண்ணிட்டே?''

''வேற வழி? படிப்பு முடியறவரைக்கும் உன் முசுடு அம்மாவோட சப்போர்ட் தேவைப்படுதே! எப்படா இந்த நரகத்தை விட்டுப் போவோம்னு இருக்கு. நல்ல சாப்பாடு இல்லே. டி.வி.யில காமெடி தவிர, எந்த சேனலையும் பார்க்கக் கூடாது. எந்த ஃப்ரெண்ட்ஸும் வீட்டுக்கு வரக் கூடாது. என்னக்கா



### திக்கெட்டும் தீபாவளி!

மகாபலி சக்கரவர்த்தி தீபாவளி அன்றுதான் அரியணை ஏறியதாக வாமன புராணம் கூறுகிறது.



அநியாயம்? வீடா இது? பாவம் நம்ம அப்பா.. இவங்க தொல்லை தாங்காமத்தான் சீக்கிரம் மேல போய்ச் சேர்ந்துட்டார் போல..!''

''அப்ப.. நைட்டுப் பேசினது மித்ரன்கூடத்தானே?''

''ம்..''

''எப்படி அவ்ளோ தைரியமாய் அம்மா மேலே சத்தியம் பண்ணிட்டே?'' கண்கள் விரியக் கேட்டாள்.

''யாருக்காகவும் என் காதலை சாகடிக்க விருப்பமில்லே. சத்தியம் பண்ணலேன்னா என்னாகியிருக்கும்னு நீயே சொல்லு!''

''........?!''

''மித்ரனுக்காக எவ்வளவு பொய் வேணாலும் பேசுவேன். அதுதான் நிஜமான காதல்! நான் உன்னை மாதிரி இல்லேக்கா!''

திடுக்கெனத் திரும்பி அவளைப் பார்த்தாள்.

''நீதான் அம்மாவுக்கு பயந்து லவ்வைப் பாதியிலேயே கட் பண்ணிட்டே! நான் உன் அளவுக்கு முட்டாள் இல்லே!''

ஜீவிதாவுக்குள் பழசு எட்டிப் பார்க்க.. உதடு துடிக்க.. கண்கள் சூடேறியது. அழ முயன்ற மனசைக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

''அம்மா நமக்காக வாழ்றவங்க சவி! அப்பா இல்லாத குடும்பத்தைத் தனியொரு மனுஷி தாங்கறது சாதாரண விஷயமில்லை. அண்ணனை மலைபோல நம்பியிருந்தாங்க. அவனும் ஏமாத்திட்டுப் போய்ட்டான். காதலிக்கறதால அம்மாவை இழக்கணும்னா.. அந்தக் காதல் எதுக்கு?''

''எப்படியும் ஒரு ஆம்பளையத்தானே கல்யாணம் பண்ணி வைக்கப் போறாங்க? அது நாம பார்த்துப் பழகிய ஆணா இருந்தா என்ன? நமக்கு ரெட்டிப்பு சந்தோஷம்தானே? அதை ஏன் அம்மா ஏத்துக்கக் கூடாது?''

''பெரியவங்க.. அவ்ளோ ஈஸியா கன்வின்ஸ் ஆக

மாட்டாங்க. என்ன, ஏன், எதுக்குன்னு ஆராயறதை விட்டுட்டு அம்மா சந்தோஷத்துக்காக இறங்கி வர்றதுல என்ன தப்பிருக்கு?''

''ஒக்கே.. இப்ப அம்மா உனக்கு அலையன்ஸ் பார்த்துட்டிருக்காங்க. நீ லவ் பண்ணின பிரகாஷை விட எல்லா விதத்திலும் ஒரு ஸ்டெப் கீழேதான் மாப்பிள்ளை பார்ப்பாங்க. ஏன்னா பட்ஜெட்டுக்குள்ள முடிக்கப் பார்ப்பாங்க. அதெல்லாம் விட, உன்னால பிரகாஷை மறந்துட்டு சந்தோஷமா வாழ முடியுமா?''

''முடியும்! எல்லாக் காதலும் ஜெயிச்சிடறதில்லே. தோத்தவங்க வேற பார்ட்னரை கல்யாணம் பண்ணிக்கிட்டு குழந்தைகளோட சந்தோஷமா வாழறதில்லையா? எல்லாரும் காதலிச்சவங்களையே கல்யாணம் பண்ணிக்கறதில்லை சவி!''

''ஆனா, நான் பண்ணிப்பேன்! மாமனார், மாமியார், நாத்தனார்னு எந்தப் பிடுங்கலும் இல்லாத வாழ்க்கை என்னோடது! மித்ரன் என் மேல ரொம்ப நேசம் வச்சிருக்கார். இப்படியொரு வாழ்க்கை கிடைக்க.. எந்த முடிவையும் எடுப்பேன்!'' என்றாள் அழுத்தம் திருத்தமாக.

பெருமூச்சு விட்டாள் ஜீவிதா.

## 5

ஒரு வீட்டின் முன் பைக் நிற்க.. மித்ரனின் பின்னால் அட்டைபோல் ஒட்டி வந்த சவிதா இறங்கினாள்.

மூன்று மாடி வீடு!

''வா.. சவி!''

சவிதா, அந்த வீட்டை ஆசையுடன் பார்த்தபடி படியேறினாள். ஒவ்வொரு தளத்திலும் இரண்டாய்ப் பிரிக்கப்பட்டு வாடகை விடப்பட்டிருந்தது. மித்ரனுக்காக அவன் பெற்றோர் விட்டுப் போன சொத்து. மூன்றாவது மாடியில்தான் மித்ரன் இருந்தான்.

''உள்ளே வா!''

கவனமாய் வலது காலைப் பதித்து உள்ளே வந்தாள்.

''எப்படி இருக்கு உன் வீடு?'' காதலாய்க் கேட்டான் மித்ரன்.



**திக்கெட்டும் தீபாவளி!**

ராஜபுத்திரர்கள், தீபாவளியன்று ஸ்ரீராமர் பட்டாபிஷேகத்தைக் கொண்டாடி மகிழ்கிறார்கள்.

இரண்டு பெட் ரூம், வரவேற்பறை, டைனிங் ஹால், பாத்ரூம், பூஜையறை, விஸ்தாரமான கிச்சன் என்று அமர்க்களமாய் இருந்தது. சோஃபா செட், டீப்பாய், கட்டில், திரைச்சீலை.. என பக்காவாக ஒரு பெண் மெய்ன்டெய்ன் பண்ணும் வீடுபோல் பளிச்சென்று இருந்ததில்.. மித்ரனின் பொறுப்புணர்ச்சி தெரிந்தது.

''ரொம்ப சூப்பர் மித்ரு!''

''இங்கே எப்ப வரப் போற.. நிரந்தரமா?'' ஏக்கத்துடன் கேட்டான்.

''இப்பவே.. இங்கேயே செட்டிலாய்டணும்ங்கிற ஆசை ஏகத்துக்கும் இருக்குப்பா! ஜீவிதாவுக்கு அலையன்ஸ் செட்டாகிற மாதிரி இருக்கு. எப்படியும் மூணு மாசத்துல கல்யாணம் முடிஞ்சிடும்.''

''அப்ப.. உடனே உனக்கும் ஏற்பாடு பண்ணுவாங்களா? நான் உங்க வீட்டுக்கு வந்து இப்பவே முறைப்படி பேசிடவா?''

''நான்தான் சொன்னேனே மித்ரு! அம்மா ஒரு டைப்! வாழ்ந்த நாள்ல எங்கப்பாவையாவது லவ் பண்ணாங்களானு சந்தேகமாயிருக்கு. காதல் மேல அப்படியொரு வெறுப்பு. அவங்க பொண்ணுங்களுக்குக் காதல் மட்டும் வந்துடக் கூடாதுங்கற பயம். நீ வந்து பொண்ணு கேட்டா, என்னை வீட்லயே சிறை வச்சிடுவாங்க. படிப்பு முடிய ஆறு மாசம் இருக்கு. அதுக்கப்புறம் வேலைக்குப் போய் எனக்குனு சம்பாதிக்கணும். அம்மாவும் ஜீவிதா கல்யாணத்துக்குப் பிறகு எனக்குனு சேமிப்பாங்க. இதெல்லாம் முடிஞ்சு ஒரு ஷேப்புக்கு வர மூணு வருஷம் ஆகும் மித்ரு!''

''மூணு வருஷமா? அதெல்லாம் முடியாது. மூணு வருஷம் கழிச்சு, நான் ரெண்டு குழந்தைக்கு அப்பாவா இருக்கணும்னு ப்ளான் பண்ணியிருக்கேன்.''

''ச்சீ!'' முகம் சிவந்தாள்.

''சீரியஸாதான் சொல்றேன். இத்தனை வருஷமா அம்மா, அப்பாவோட பாசம் கிடைக்காமலேயே வளர்ந்துட்டேன். மாமா வீட்ல ஒரு பேயிங் கெஸ்ட் மாதிரிதான் இருந்தேன்.





எனக்கு கிடைக்காத அத்தனை அன்பும் என் வொய்ஃப்கிட்டேருந்து கிடைக்கனும்னு ஆசைப்படறேன். நீ எனக்கு நீயாகவே கிடைச்சா போதும் சவி. உங்கம்மாவுக்கு எந்த சிரமமும் வேண்டாம். எங்கம்மாவோட நகையெல்லாம் லாக்கர்ல பத்திரமா இருக்கு. அதெல்லாம் உனக்குத்தானே? நானே உங்கம்மாகிட்டே பேசறேனே! அவங்க விருப்பப்பட்டா.. நாமெல்லாரும் மொத்தமா இந்த வீட்ல இருக்கலாம்!''

''மித்ரு..'' உணர்ச்சிவசப்பட்டவளாய் அவன் கையை எடுத்து இரு கரங்களுக்குள் பொத்திக் கொண்டாள்.

''ஐ'ம் ஸோ லக்கி மித்ரு! கல்யாணமே ஒரு பிஸினஸா போய்ட்ட இந்த காலத்துல உங்களை மாதிரி ஒருத்தர் கிடைக்கறது அபூர்வம். எங்கம்மாவை விடுங்க. அவங்க கல்லு. கரைக்க முடியாது. அக்கா கல்யாணம் முடிஞ்சதும் நம்ம கல்யாணம். படிப்பு முடியறவரைக்கும் அங்கே இருக்கேன். முடிஞ்சதும் இங்கே வந்துடறேன்!''

''நிஜமா?''

''சத்தியமா!''

''சத்தியத்தை இப்படியா பண்ணுவாங்க?''

''பின்னே?''

''அப்படியே இறுக்கக் கட்டிப் பிடிச்சி, நெத்தியில, கண்ல, கன்னத்துல, மூக்குல எல்லாம் கிஸ் பண்ணிச் சொல்லனும். விருப்பமிருந்தா.. லிப்ஸ்ல கூட..''

''ராஸ்கல்.. இவ்ளோ ஆசையிருக்கா?''

''இதைவிடப் பெரிய ஆசையெல்லாம் இருக்கு.! ஒரு சின்ன ட்ரையல் பார்க்கலாமா?''

''ம்ஹூம்..'' வேண்டாம் என்று உதடு சொல்லியதே தவிர.. அவனை நெருங்கினாள்.

''வேணாமா?'' மெல்ல அணைத்தான்.

''ம்..''

''ம்ன்னா? வேணுமா?''

அடுத்த கணங்கள் இளமையின் வேகத்தில் அணைத்துக் கொண்டாலும், சவிதா அணை மீறிப் போக விடவில்லை.

''நீ பார்த்த பார்வைக்கொரு நன்றி.. நம்மை சேர்த்த இரவுக்கொரு நன்றி..''

வேலை முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த பரிமளா வாசலில் செருப்பைக் கழட்டும்போது, ஹாலில் சவிதா மெய்மறந்து டிவியில் பாடல் காட்சியை ரசித்துக் கொண்டிருந்ததைப் பார்த்துத் துணுக்குற்றாள். சில கணங்கள் யோசித்த பரிமளா மெல்ல நடந்து ஜன்னலோரமாய் மேலே சென்ற கேபிள் ஒயரை ஒரு கம்பால் சுற்றி அறுத்தாள்.

தன் மீதிருக்கும் பயம் போய் விடக் கூடாதென்று செருப்பை மாட்டிக் கொண்டு வெளியில் சென்று இரண்டு நிமிடம் கழித்து, செருப்பு சப்தம் கேட்கும்படி நடந்து வந்தாள்.

டிவி அணைக்கப்பட்டிருந்தது. அம்மாவின் நடவடிக்கை அனைத்தையும் கிச்சன் ஜன்னல் வழியே ஜீவிதா பார்த்துக் கொண்டுதான் இருந்தாள். அவளால் அந்தச் செயலை ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

'டி.வியில் பாட்டுக் கேட்பதால் மட்டுமே காதல் வந்து விடுமா அம்மா? காதல் வர, காரணமே தேவையில்லையே!'

உள்ளே வந்த பரிமளா மகளிடம், ''சமைச்சிட்டியாம்மா?'' என்றாள்.

''ஆச்சும்மா.. ரசமும் கேரட் பொரியலும் பண்ணிட்டேன்!''

''பசிக்குது. எல்லாம் எடுத்து வை! கசகசங்குது. ஒரு குளியல் போட்டுட்டு வந்துடறேன்.''

பாத்ரூமுக்குள் புகுந்து கொள்ள.. சவிதா ஜீவிதாவிடம் வந்தாள்.

''நல்லவேளை ஜீவி..! அம்மா வர்றதுக்குள்ள டி.வியில கரன்ட் போய்டுச்சு. இல்லேன்னா வசமா மாட்டியிருப்பேன்!''

''டிவியில கரன்ட் போகல மேடம். கேபிள் ஒயர் அறுந்து போச்சு!''

''அச்சச்சோ.. எப்படி? பூனை கீனை மேலே ஏறுச்சா?''

''பூனையில்ல.. அறுத்தது அம்மா..!''

''ஏய்.. என்ன சொல்றே ஜீவி?''

''நீ டிவி பார்த்துட்டிருந்ததை அவங்க பார்த்துட்டாங்க. அதுக்கப்புறம்தான் ஆக்ஷன்ல எறங்குனாங்க. சொன்னா கேட்டாத்தானே? படிக்காம எந்நேரமும் டி.வியே பார்த்துட்டிருக்கே!''



**திக்கெட்டும் தீபாவளி!**

வங்காளத்தில் தீபாவளியன்று காளி பூஜை செய்கிறார்கள்.



சவிதா பதிலேதும் கூறாமல் யோசனையுடன் நகர்ந்தாள். அவளுக்கு அம்மா மீதான வெறுப்பு அதிகமானது.

அன்று அலுவலகத்தில் முக்கியமான வேலையென்று ஜீவிதா ஆறு மணிக்கே புறப்பட்டு விட, இரவில் கரன்ட் இல்லாததால்.. வழக்கமாய் நறுக்கி வைக்கும் காய்கறியை நறுக்க முடியாமல் போனது.

கூடுதலாய் அந்த வேலையும் சேர்ந்து கொள்ள.. பரிமளா பரபரவென இயங்கிக் கொண்டிருந்தாள். பருப்பு ஒரு ஸ்டவ்விலும் சாதம் ஒரு ஸ்டவ்விலும் வெந்து கொண்டிருக்க, வேக வேகமாய் நறுக்கினாள். அந்த வேகத்தில் கத்தி அவள் கையைப் பதம் பார்க்க, ஆள்காட்டி விரலிலும் நடுவிரலிலும் காயம் பட்டு ரத்தம் கொட்டியது.

ஹாலிலிருந்து அதைப் பார்த்த சவிதாவுக்கு ஒரு கணம் மனசு துடிக்கவே செய்தது. அடுத்த கணமே, தன் எல்லா சந்தோஷங்களுக்கும் குறுக்கே நிற்பவர் என்ற எண்ணம் தலைதூக்க.. சட்டென அறைக்குள் புகுந்தாள். முதல் உதவிப் பெட்டியைத் திறந்து பாண்ட்–எய்டை எடுத்து தன் இடது கட்டை விரலில் போட்டுக் கொண்டாள்.

''சவிதா.. சவிதா!'' பரிமளா வலியுடன் அழைத்தாள்.

''வர்றேம்மா! ஐயோ.. என்னாச்சும்மா?''

''கத்தியிலே வெட்டிக்கிட்டேன். சீக்கிரம் ஒரு பாண்ட் – எய்டும் காட்டனும் எடுத்துட்டு வா. என் கையில போட்டுட்டு.. இந்தக் காய்கறியை கொஞ்சம் நறுக்கி வச்சிடு!''

''வாட் எ கோ இன்ஸிடன்ட்ம்மா! ஜஸ்ட் இப்பத்தான் குளிக்கும்போது, பாத்ரூம் கதவோட தகரம் என் விரலை அறுத்து..''

''ஐயோ.. சொல்லவே இல்லையே!'' பதறினாள் பரிமளா.

''பார்த்தியா.. இப்படி பதறுவேன்னுதான்.. நானே பாண்ட் – எய்ட் போட்டுக்கிட்டேன்!''

''வலிக்குதா?''

பெற்றவளாயிற்றே! தன் வலியிலும், மகளின் வேதனை

மனசை அறுத்தது.

''பரவாயில்லேம்மா..''

''சரி.. பாண்ட் - எய்ட் போட்டுட்டு நீ ரெடியாகு.. நானே பார்த்துக்கறேன்!''

சிரமப்பட்டு வேலையில் ஈடுபட்டாள்.

**6**

**ஞா**யிறு! மூவரும் வீட்டில் இருந்தனர்!

பரிமளா சமைத்துக் கொண்டிருக்க.. பெரிய வாழை இலையில் ஒவ்வொன்றாய்ப் படையல் போட்டுக் கொண்டிருந்தாள் ஜீவிதா.

அருகே அமர்ந்திருந்த சவிதா.. அங்கு வைக்கப்பட்டிருந்த தன் தந்தையின் ஃபோட்டோவையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

மிக இள வயதுப் புகைப்படம். அதிகபட்சம் அந்த ஃபோட்டோ எடுக்கும்போது இருபது வயதுக்குள் இருக்கலாம்.

நேர்த்தியான முகம், குறும்புச் சிரிப்பு. அந்த முகத்தில் தன் சாயலைத் தேடினாள். கிட்டத்தட்ட ஜீவிதாவுக்கும் சவிதாவுக்கும் முக அமைப்பு ஒரே சாயலில்தான் இருந்தது. பெண்கள் இருவருமே அம்மாவைக் கொண்டில்லை. அப்பா மாதிரியும் இல்லாதது வருத்தமாகவே இருந்தது.

ஸ்வீட், பழங்கள், இரண்டு வகை பொரியல், கூட்டு, அப்பளம், பாயசம், வடை என இலை நிரம்பியது. பரிமளா இறுகிய முகத்துடன் கற்பூரம் ஏற்றி ஆராதனை காட்ட, அடுத்துப் பெண்களும் கற்பூரம் ஏற்றினர்.

காக்காவுக்கு சாப்பாட்டை வைத்து விட்டு வந்த ஜீவிதா, ஃபோட்டோவின் அருகில் அமர்ந்து கண் கலங்கிக் கொண்டிருந்த தங்கையைப் பார்த்து வியந்தாள்.

''சவி.. ஏன் அழறே?''

அந்தக் கேள்விக்கு சுவரோரமாய் அமர்ந்து பழைய நினைவுகளில் மூழ்கியிருந்த பரிமளாவும் திரும்பிப் பார்த்தாள்.

''நாம என்ன பாவம் செஞ்சோம்? அவ்ளோ சீக்கிரத்துல அப்பா ஏன் சாகணும்?''

''........?!''



**திக்கெட்டும் தீபாவளி!**

தீபாவளியை இந்துக்கள் மட்டுமின்றி ஜைனர்கள், பௌத்தர்கள், சீக்கியர்களும் கொண்டாடுகிறார்கள்.



''அப்பாவைப் பார்க்கணும்போலிருக்கு. நரையோட, தொப்பையோட.. பார்க்கணும்னு ஆசையாயிருக்கு. அம்மா.. அப்பாவைப் பத்தி என்ன கேட்டாலும் ஏன் எதுவுமே சொல்ல மாட்டேங்கிறே? இப்பவாவது சொல்லேன்.. அவர் உம்மேல ரொம்பப் பாசமாயிருப்பாரா?''

பரிமளா திணறினாள்.

''ம்.. ரொம்பவே பாசமாயிருந்தார்.''

''என்னை எப்படியெல்லாம் கொஞ்சுவார்?''

''செல்லக் குட்டின்னு..''

''ஜீவியோட பர்த் டேயை கிராண்டா கொண்டாடினீங்களா?''

''இதெல்லாமா கேப்பே?'' சலித்துக் கொண்டாள்.

''அப்பாதான் இல்லே. அப்பாவோட ரிலேட்டிவ்ஸ்கூட யாருமே இல்லையா? அவங்கள்லாம் எங்கே இருக்காங்க? ஏன் யாருமே நம்ம வீட்டுக்கு வர மாட்டேங்கிறாங்க?''

''போதும் நிறுத்தறியா?'' அழுகையுடன் கத்தினாள் பரிமளா. அந்த அதட்டலில் இருவருமே அரண்டு போயினர்.

அன்றிரவு.. திடீரென நினைத்துக் கொண்டாற்போல் கேட்டாள் சவிதா.

''ஜீவி.. ரொம்ப நாளா ஒரு டவுட்!''

''அம்மா, ரிஜிஸ்டர் ஆஃபீஸ்ல அஞ்சரை மணிக்குக் கிளம்பி, திருவள்ளூர்ல ஏதோ பார்ட் டைமா வேலை செய்யறாங்களே! எந்த ஆஃபீஸ்ல?''

உதட்டைப் பிதுக்கினாள்.

''தெரியாது!''

''எட்டு, எட்டரைவரைக்கும் அப்படி என்னதான் வேலை செய்றாங்க?''

''தெரியாதுனு சொல்றேன்ல?''

''டபுள் சம்பளம் வருது.. அப்புறமும் ஏன் இவ்வளவு சிக்கனம்?''

''புரிஞ்சு பேசறியா? புரியாத மாதிரி நடிக்கிறியா? இந்த வீட்டைத் தவிர சொத்துனு சொல்லிக்க ஏதுமில்லே நமக்கு. நம்ம கல்யாணத்துக்காகத்தான் இப்படி ஓயாம உழைக்கிறாங்க.''

''எனக்கொண்ணும் செலவாகப் போறதில்லை.''

''என்ன சொல்றே?'' கண்கள் சுருங்கக் கேட்டாள்.

''அவங்க எனக்காக உழைச்சு முழுசா சேர்க்கறவரைக்கும் மித்ரனால காத்திருக்க முடியாது''

''எனக்கு பயமாயிருக்கு சவி. அம்மா பாவம்!''

''ஜீவி.. எனக்கொரு சத்தியம் பண்ணிக் குடு!''

''எதுக்கு?''

''உன்னை நினைச்சாதான் பயமாயிருக்கு. என் காதலைப் பத்தி அம்மாகிட்ட சொல்லிடுவியோன்னு!''

''காதலை தப்புன்னு சொல்ற முட்டாள் இல்லே நான். ஆனா, அம்மாவோட மனசை நல்லாப் புரிஞ்சதால.. நொந்துப் போயிருக்கிற அவங்களை காதல்ங்கிற பேரால.. ரணத்தைக் கீறி ரத்தம் வடிய வைக்க எனக்கு தைரியமில்லே. கண்டிப்பா உன்னைக் காட்டிக் குடுக்க மாட்டேன். ஆனா யோசிச்சு முடிவெடு சவி!''

''உன் கல்யாணம் முடியட்டும்.. பார்க்கலாம்!''

''பரிமளா.. பூஜையறையில காமாட்சி விளக்கை அணைச்சிடும்மா!'

''சரிங்க!''

சமையல்கட்டில் குருமாவுக்குத் தாளித்து விட்டு, சப்பாத்தி மாவைத் திரட்டிக் கொண்டிருந்தவள்.. கையைக் கழுவிக் கொண்டு பூஜையறைக்குச் சென்றாள். எரிந்து கொண்டிருந்த விளக்கை, பூவால் அணைத்தாள்.

அடுத்த இருபது நிமிடத்தில் சமையல் வேலையை முடித்து விட்டு, மேடையை சுத்தம் செய்து விட்டு, ஹாட்பேகில் வைத்து மேஜை மேல் வைத்தாள்.



''எல்லாம் எடுத்து வச்சிட்டேன்.. சாப்ட்ருங்க, நைட்டுக்குப் போட்டுக்கற மாத்திரைகளை இந்த கவர்ல எடுத்து வச்சிருக்கேன். ஃப்ளாஸ்க்ல பால் வச்சிருக்கேன்.''

சிரித்தார் அவர்.

''தெனமும் நீ செய்ற விஷயம்தானே? சொல்லணுமா?'' என்றவருக்கு எழுபது வயதிருக்கும். கட்டிலில் படுத்திருந்தார். தலைக்கு மேல் ஒரு ஃபோட்டோ! அவர் தன் மனைவியுடன் நடுத்தர வயதில் எடுத்துக்கொண்டது. லட்சணமாய் சிரித்துக் கொண்டிருந்தாள் மனைவி.

ஹாலில் தனியே அவர் மனைவி வீற்றிருந்த ஃபோட்டோவுக்கு அணையா விளக்கும் சந்தன மாலையும்!

''கிளம்பறேங்க..''

''சரி.. சின்னவளுக்கு வர்ற புதன்கிழமை பிறந்த நாள்னு சொன்னேயில்லே?''

''ஆமாங்க!''

''இந்தா.. இந்தப் பணத்துல ஏதாவது வாங்கிக் குடு!''

''ஐயோ.. அதெல்லாம் வேணாங்க!''

''ஏன் அலர்றே? நான்தானே தர்றேன்! அவளை இங்கே ஒருநாள் கூட்டிட்டு வாயேன்!''

''இல்லீங்க.. நான் இங்கே வந்து போற விஷயம் அவளுக்குத் தெரியாது!''

''ஏன் மறைக்கணும்? பிள்ளைங்க உன்னைப் பத்திப் புரிஞ்சுக்கணும்னா.. அவங்ககிட்டே நீ ஒப்பனா இருக்கணும்!''

''அதுக்கு ஒரு காலம் நேரம் வரணும்!''

''சரி.. இதைப் பிடி!''

''இல்லை.. தப்பா எடுத்துக்காதீங்க.. வேணாம்!''

''பிடிம்மா..'' அவரும் பிடிவாதமாய் கை நீட்டியபடியே இருக்க.. வேறு வழியின்றி சங்கடத்துடன் வாங்கிக் கொண்டாள்.

ஸ்டேஷன் வந்தவள், அரக்கோணம் செல்லும் ரயில் நின்றிருப்பதைப் பார்த்து ஓடிச் சென்று ஏறிக் கொண்டாள்.

வசவசவென்று கூட்டம்! கண் தெரியாத இருவர்..

புல்லாங்குழல் இசைத்து யாசித்துக் கொண்டிருந்தனர். பரிமளா, தன் கைப்பையிலிருந்து ஒரு ரூபாய் நாணயத்தை எடுத்துக் கையில் திணித்தாள்.

எல்லோர் முகங்களிலும் சோர்வு ஒட்டியிருந்தது. வேர்க்கடலையோ, பழமோ விற்றுத் தீர்ந்து வெறும் கூடையுடன் படிக்கட்டோரம் அமர்ந்திருந்த பெண்மணி.பூ விற்று பணத்தை எண்ணிக் கொண்டிருந்த பாட்டி.. மறுநாள் சமைப்பதற்கான கீரையை மடியில் வைத்து ஆய்ந்து கொண்டிருந்த அலுவலகம் செல்லும் பெண்மணி..

''வேற வீடு இருந்தா சொல்லச் சொன்னேனே! ஒரேயடியா ஹவுஸ் ஓனர் ஆயிரம் ரூபா வாடகை ஏத்தறார். சமாளிக்க முடியல, இப்ப இருக்கறதை விடச் சின்னதா இருந்தாக்கூட பரவாயில்லேக்கா!'' தன் அத்தியாவசியக் கவலையைப் பகிர்ந்து கொண்ட பெண்..

பரிமளா பெருமூச்சு விட்டாள்.

நல்லவேளை! எத்தனையோ கஷ்டங்களுக்கு நடுவே, சொந்தமா ஒரு வீடு வாங்கினது எவ்வளவோ நல்லதாப் போச்சு! இல்லேன்னா சமாளிச்சே இருக்க முடியாதே!

கணவன் இன்றி, சிறு குழந்தைகளை வைத்துக் கொண்டு அல்லல்பட்ட பரிமளா, அப்போது தான் பார்த்து வந்த போஸ்ட் ஆஃபீஸ் கிளார்க் வேலையை வி.ஆர்.எஸ் எழுதிக் கொடுத்து, வந்த பணத்தில் சமயோசிதமாக இந்த வீட்டை வாங்கிப் போட்டாள்.

7

குளித்து விட்டு நைட்டியுடன் பாத்ரூமிலிருந்து வெளிப்பட்ட சவிதா, அம்மா அவளை எதிர்பார்த்து காத்திருப்பதைப் போல் நிற்பதைப் பார்த்து, ''என்னம்மா?'' என்றாள்.

''இங்கே வா!''

வந்தாள்.

அவளைக் கட்டியணைத்து கன்னத்தில் முத்தமிட்டவள் நெகிழ்ச்சியுடன், ''தீர்க்காயுசா, நோய் நொடியில்லாம நல்ல வாழ்க்கை வாழணும். உன் ஆசையெல்லாம் தீர்த்து வைக்கிற புகுந்த வீடு அமையணும். இந்தா.. இது என்னோட பிறந்த நாள் பரிசு. இதை உடுத்திக்கிட்டு காலேஜுக்குப் போ!''



## திக்கெட்டும் தீபாவளி!

ஜைனர்கள் தீபாவளியை மகாவீரர் மோட்சம் அடைந்த நாளாகக் கொண்டாடுகிறார்கள்.

என்றாள்.

சந்தோஷம் மின்ன, ''தாங்க்ஸ்மா!'' என்றபடி வாங்கிக் கொண்டாள். பரிமளாவுக்கு சின்ன ஏமாற்றம். தாங்க்ஸ் சொல்லி கன்னத்தில் முத்தமிடுவாள் என்று எதிர்பார்த்தாள்.

பாக்ஸைப் பிரித்தவள், ''என்னம்மா இது.. புடவையா? சுடிதார் எடுத்திருக்கலாமே!''

''விலையைப் பார்.. ஆயிரம் ரூபா! டிஸைனர் சேலை. உனக்குப் பொருத்தமான கலர். தவிர, எப்பவும் சுடிதாரே போட்டுட்டு இருக்க முடியுமா? கல்யாணத்துக்குப் பிறகு சேலையும் கட்டணுமில்லையா? இதோ.. ஜீவிதாவுக்குப் பேசி முடிச்சாச்சு. கல்யாணத்துக்கு ரெண்டரை மாசம்தான் இருக்கு. அவளுக்குப் பிறகு, ரெண்டு மூணு வருஷத்துல உனக்கும் முடிக்கணுமில்லையா?''

''போம்மா.. இப்ப எனக்கென்ன அவசரம்?'' கிண்டலாய் சொல்லிக் கொண்டே உள்ளே போனாள்.

'இப்ப என்ன சொன்னேன்?' பரிமளா குழப்பமாய்ப் பார்த்தாள்.

''மெனி மெனி ஹாப்பி ரிடர்ன்ஸ் ஆஃப் த டே மை டியர் கன்னுக்குட்டி.. இச்.. இச்.. இச்!'' செல்ஃபோன் வழியே எச்சில் வழியாத குறையாய் முத்தம் கொடுத்தான் மித்ரன்.

''யூ.. நாட்டி! பத்தாவது முறையா விஷ் பண்றே!'' வெட்கமும் பரவசமுமாய்ச் சொன்னாள்.

''என் வீட்டு மகாராணிக்கு இன்னைக்கு பூரா விஷ் பண்ணிட்டே இருப்பேன்!''

''வெல்கம்! மகாராணிக்கு இந்த மகாராஜா தரப் போகும் பரிசென்னவோ?''

''அம்மணி.. தாங்கள் எம் இல்லத்துக்கு வருகை தர வேண்டும். பிறந்த நாள் உடையாக ஜீன்ஸ் என்கிற குழாயும் மேல் சட்டையும் வாங்கி வைத்திருக்கிறேன். அதை அணிந்து கேக் வெட்ட தங்கள் அனுமதி வேண்டும்!''

''அப்படியே ஆகட்டும். அதேசமயம் பழந்தமிழை முழுமையாகக் கற்றிட ஆணையிடுகிறேன்!''

''சவிதா என்கிற பைந்தமிழை சுவைத்த பின் பழந்தமிழ் தன்னாலே தலைக்கேறும் மகாராணி! தவிர, சிறு கோரிக்கை..''

''என்ன?'' என்றாள். உதட்டுக்குள் சிரிப்பை மென்று.

''அந்த உடைகளை நானே அணிவிக்க உத்தரவிடுங்கள் மகாராணி!''

''திஸ் இஸ் டு மச்..''

''ஷார்ப்பா ஒரு மணிக்கு வீட்டுக்கு வந்துடு சவிதா!''

''பயமாயிருக்கு!''

''எதுக்கு?''

''உன் வேகம், பேச்சு.. எல்லாமே!''

''காதல்னா இதுகூட இல்லாமலா? ஸ்பீட் பிரேக்கர் போட்றலாம். வந்துடு.. கொண்டாடிடுவோம்!''

அவன் வார்த்தையின் அர்த்தம்.. அவள் இளம் உள்ளத்தைக் கிளுகிளுப்பாக்கியது.

''**எ**ன்னக்கா.. எங்கே கிளம்பறே?''

பேகை எடுத்துக் கொண்டு புறப்பட்ட பரிமளாவை ஆச்சர்யமாய்க் கேட்டாள் ரஞ்சிதம்..

''நமக்கு லஞ்ச் அவர் வர இன்னும் டைமிருக்கே?''

''சவிதாவுக்கு இன்னைக்கு பர்த் டே! பாவம் குழந்தை.. காலையில உப்புமா சாப்பிடறப்ப, முகமே சரியில்ல! அதான், பக்கத்து ஹோட்டல்ல பிரியாணி வாங்கி.. காலேஜ்ல போய்க் குடுத்துட்டு வரலாம்னு கிளம்பிட்டேன். நான் வந்து சாப்பிட்டுக்கறேன். ஸார்கிட்ட சொல்லி ட்டேன்!''

ரஞ்சிதம் சில கணங்கள் அவளையே பார்த்தாள்.

''உன் ரெண்டு பொண்ணுங்களும் ரொம்ப குடுத்து வச்சிருக்கணும்க்கா! ஒரு தாய்ங்கற இலக்கணத்துக்கு வாழும் உதாரணமே நீதான்!''

''இதுல என்ன இருக்கு ரஞ்சி? காகம் இரை தேடிக்



கொண்டு வந்து தன் குஞ்சுகளுக்கு ஊட்டலையா?''

''காகத்துக்கு.. வாழ்க்கையில சோதனைகள்னு ஏதுமில்லையே? சரி.. நீ கிளம்பு!''

அடுத்த அரை மணி நேரத்தில் பிரியாணி பொட்டலத்துடன் சவிதா படிக்கும் கல்லூரி வாசலில் ஆட்டோவிலிருந்து இறங்கினாள். சரியாய்.. அதே நேரம் சவிதாவும் வெளி 'கேட்'டுக்கு வந்தாள்.

அவளால் தன் கண்களையே நம்ப முடியவில்லை. 'ஆட்டோவிலிருந்து இறங்குவது அம்மாவா? மை காட்!' பதைபதைத்தவள். தன் பேக்கை செடியோரம் மறைவாய் வைத்து விட்டு. பரிமளாவின் அருகே ஓடி வந்தாள்.

''அம்மா..!''

''நீ எப்படி இங்கே?''

''உள்ளேருந்து பார்த்துட்டுதாம்மா ஓடி வர்றேன். நீ எங்கம்மா இங்கே..?''

''இந்தா.. மிலிட்டரி ஹோட்டல் பிரியாணி! பிறந்த நாளும் அதுவுமா காரக் குழம்பும் கேரட் பொரியலும் குடுத்தனுப்பிட்டோமேனு மனசுக்கு சங்கடமா இருந்துச்சு. அதான்.. வாங்கிட்டு வந்தேன். நல்லவேளை..! லஞ்ச் அவர் இப்பதானே ஆரம்பிச்சது. போய்.. சூடா சாப்பிடு.. போ!''

நூறு ரூபாய் பிரியாணிக்கு நூத்தம்பது ரூபாய் ஆட்டோவுக்கு செலவு பண்ணி கொண்டு வந்து கொடுத்த அம்மாவை சற்றே நெகிழ்ச்சியுடன் பார்த்தாள்.

''தாங்க்ஸ்ம்மா!''

''சூடு ஆறுறதுக்குள்ள போய் சாப்பிடு.. வரட்டுமா?'' அவள் தலையைக் கோதி விட்டுப் புறப்பட்டாள்.

உள்ளே வந்த சவிதாவுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை.

அங்கே மித்ரன் அவள் பிறந்த நாளைக் கொண்டாட பெரிய ஏற்பாடே பண்ணியிருக்கிறான். விதவிதமான அயிட்டங்களை ஓட்டலிலிருந்து வரவழைத்திருக்கிறான். அவனோடுதான் லஞ்ச் என்பது முன்பே முடிவான விஷயம்.

''இதையென்ன செய்ய?'' பிரியாணி பொட்டலத்தைக் கவலையுடன் பார்த்தாள்.

''இன்னுமா கிளம்பலே? போடி.. போய் நல்லா என்ஜாய்



பண்ணு!'' அவள் காதலறிந்த வகுப்புத் தோழி மார்கரெட் உசுப்பி விட, தெளிவானாள்.

''இந்தா.. இதை நீ சாப்பிடு!''

''என்னது?''

''பிரியாணி! என் பர்த்டே ட்ரீட். ஓக்கே? பை!'' கையில் திணித்து விட்டு, வேகமாய் பேகை எடுத்துக் கொண்டு சென்றாள்.

மார்க்கரெட் ஆச்சர்யம் விலகாமல் உள்ளே சென்றாள்.

''நிஜமாவா சொல்றே? அம்மா பிரியாணி வாங்கிட்டு வந்தாங்களா? அதுவும் காலேஜுக்கு?'' ஜீவிதா நம்ப முடியாமல் கேட்டாள்.

''அதுவும் பஸ்லகூட இல்லே! ஆட்டோவுல''

''அம்மாவுக்குத்தான் உன்மேல எவ்ளோ பாசம்? சாப்பிட்டியா? நல்லாயிருந்துச்சா?''

''ப்ச்.. சாப்பிடலே ஜீவி! மித்ரன் என் பர்த் டேக்காக ட்ரீட் தரக் கூப்பிட்டிருந்தார். அதனால ஃப்ரண்ட்கிட்டே குடுத்துட்டேன்''

''தப்பில்லையா சவி? அம்மா.. அவ்வளவு ஆசையா, அவ்ளோ தூரம் ஆட்டோவுல வந்து குடுத்தது.. வேற யாரோ சாப்பிடவா?''

''நான் என்ன பண்ண முடியும்? பர்த் டேயும் அதுவுமா மித்ரனும் சங்கடப்படக் கூடாதில்லையா?''

''மித்ரன்தான் உன் சாய்ஸ்னு முடிவே பண்ணிட்டியா?''

''பின்னே?''

''அம்மாவுக்காக கன்சிடர் பண்ணக் கூடாதா?''

''உன்னை மாதிரி தியாகியாக

விரும்பலே. மித்ரன் மூலமா ஒரு நல்ல வாழ்க்கை கிடைக்குது. வளர்த்துட்டாங்கன்ற ஒரே காரணத்துக்காக அவனை, என் காதலை இழக்க முடியாது.

தெரியாமத்தான் கேக்கறேன்.. நீ லவ் பண்ணின பிரகாஷை விட, அம்மா உனக்காகப் பார்த்திருக்கிற குணாளன் எந்த வகையில பெட்டர் சாய்ஸ்? சொந்தமா எலக்ட்ரிகல் ஷாப் வச்சிருக்கார். இருக்கற ஒத்தை வீட்டுக்கு அஞ்சு பேர் பங்கு. மிஞ்சிப் போனா உங்க ஷேர் ஒரு ரூம் வருமா? இதுக்கா.. இப்படிப்பட்ட வாழ்க்கைக்கா பிரகாஷைக் கைவிட்டே?''

''வசதி, அழகு, படிப்பு.. இதெல்லாத்தையும் விட, தான் பெத்த பிள்ளைகள்ல ஒருத்திக்காவது, தன் இஷ்டப்படி கல்யாணம் பண்ணிப் பார்க்கணும்னு பெத்தவ ஆசைப்படறது தப்பா? அம்மாவை நானும் துள்ளத் துடிக்க வைக்க விரும்பலே? அம்மா வர்ற நேரமாச்சு.. புக்கை எடுத்துப் படி!'' சற்றுக் கோபமாகவே சொன்னாள் ஜீவிதா!

**8**

**பா**த்ரூமில் குளித்து விட்டு உடை மாற்றும்போது தலை கிறுகிறுவென சுற்றியது. மயக்கம் வருவதுபோலிருக்க, குளியலறை சுவற்றின் மீதே சாய்ந்து கொண்டாள் பரிமளா.

லோ ப்ரஷர்! அடிக்கடி வருவதுதான். ஆனால் மருத்துவமனை செல்ல பயந்தாள். தலைவலி என்று போனாலே கால்வரை ஸ்கேன் எடுக்கச் சொல்லி பணம் பிடுங்கும் டாக்டர்கள் பெருகி விட்டதால்.. எதற்காகவும் செலவு பண்ணக் கூடிய நிலையில் இல்லாததால்.. ஒரு டீயோ, காஃபியோ குடித்து விட்டு, மெடிக்கல் ஷாப்பில் மாத்திரை வாங்கிப் போட்டுக் கொண்டு, தற்காலிக நிவாரணம் தேடிக் கொள்வாள்.

'ஏற்கெனவே வாங்கிய மாத்திரையில் ஒன்று மிச்சமிருக்குமே! போட்டுக்கணும்'

யோசித்தபடி சுதாரித்துக் கொண்டு உள்ளாடை அணிய.. அதன் பட்டை அறுந்தது.

''ப்ச்.. இது வேற''

ஏற்கெனவே பலமுறை அறுந்ததுதான்! தைத்துத் தைத்து நைந்து போயிருந்ததை ஒரு பின் வைத்துக் கட்டினாள்.



**திக்கெட்டும் தீபாவளி!**

மஹாராஷ்டிராவில் தீபாவளிக்கு வேறு பெயர்! 'தாம்பூலம் போடும் திருநாள்' என்கிறார்கள் இவர்கள் தீபாவளியை!



''ஏம்மா முகமெல்லாம் டல்லாயிருக்கு? உடம்புக்கு முடியலியா?'' பரிமாறிய அம்மாவைப் பார்த்து அக்கறையுடன், கவலையுடன் வினவினாள் ஜீவிதா.

''இல்லேம்மா! சரியா தூக்கமில்லே. உன் கல்யாணத்தை நல்லபடியா நடத்தி முடிக்கிறவரை தூக்கம் ஏது? கோவில்ல வச்சு கல்யாணம். ஈவ்னிங் மண்டபத்துல ரிசப்ஷன். ஏம்மா.. அம்மா சிம்பிளா கல்யாணம் பண்றாங்கன்னு வருத்தம் ஏதுமில்லையே!''

''உன் உழைப்பை மட்டுமே மூலதனமா வச்சு நீ பண்ற இந்தக் கல்யாணம் மட்டும் என்ன சாதாரணமா? இதுவே எவ்வளவு செலவாகும்னு எனக்கும் தெரியும்மா'' என்ற மகளை நேசத்துடன் பார்த்தவள்,

''அப்புறம் ஜீவி.. உனக்குக் கல் வச்ச நெக்லஸ் வேணுமா? இல்ல.. ஆர்டினரி டிஸைனே போதுமா? நகைக் கடையில மாசா மாசம் பணம் கட்டிட்டு வந்தேன். அது முதிர்வடைஞ்சிடுச்சு. இன்னைக்கு நகை வாங்கப் போறேன்!''

''எவ்ளோ? ஒரு அஞ்சு பவுன் வருமா?'' சவிதா கேட்டாள்.

''இல்லடா, ரெண்டரை பவுன் வரும்!''

''அம்மா.. உனக்கு எது பிடிச்சிருக்கோ அதை வாங்கும்மா. எல்லாமே உன்னோட சாய்ஸ்தான்'' என்றாள் ஜீவிதா.

சிரித்தபடி நகர்ந்தாள் பரிமளா.

''இதென்ன அநியாயம்? மாப்பிள்ளையைதான் அவங்களோட இஷ்டத்துக்கு செலக்ட் பண்ணாங்க. நகையைக் கூடவா? ஏன் அதை உன்னைக் கூட்டிட்டுப் போய் வாங்கினாதான் என்ன?'' என்றாள் மெல்லிய குரலில், சற்றே கோபமாக சவிதா.

''சும்மாயிருடி.. அம்மா காதுல விழப் போகுது! அன்போட, அக்கறையோட, நமக்காக எதையும் செய்யற ஒரே ஆத்மா அவங்கதான்! அம்மா எதை வாங்கினாலும் அழகாதான் இருக்கும். ஏன்னா ஐ லவ் அம்மா!''

''சரியான லூஸு.. உங்கிட்டப் போய் சொன்னேனே!''

உதட்டை சுழித்தபடி எழுந்து கொண்டாள்.

''இவ்வளவு கூட்டத்துக்கு மத்தியில என்னன்னு செலக்ட் பண்றது? அதுக்குத்தான் சொன்னேன்.. அரக்கோணத்துலேயே எடுத்துக்கலாம்னு!'' தி.நகரில் பிரம்மாண்டமான ஜவுளிக் கடையில் ஜனத் திரள்களுக்கு மத்தியில் நீந்திக் கொண்டே சென்றனர் மூவரும்.

நெருங்கி வரும் ஜீவிதாவின் திருமணத்துக்காக ஜவுளி எடுக்க வந்திருந்தனர்.

''ஏம்மா.. எல்லாரும் கல்யாணத்துக்குப் பட்டுப் புடவை எடுக்க காஞ்சிபுரம் போவாங்க. அட்லீஸ்ட் நாம தி.நகருக்காவது வந்து எடுக்க வேணாமா? அரக்கோணத்துல டிசைன்ஸ் குறைச்சல்மா! ஜீவிதாவுக்கு இன்னும் சிந்தடிக் சாரீஸ், பெட்டிகோட், அது இதுன்னு வாங்க ஏத்த இடம் இதுதாம்மா!'' என்றாள் சவிதா.

பரிமளாவுக்கு, புடவைகளின் மேல் கவனம் செலுத்த முடியவில்லை. இதயம் படக் படக்கெனத் துடிக்க.. சுற்றிலும் பார்வையை செலுத்தியபடி படபடப்பாய் இருந்தாள். செலக்ஷனை அவர்களிடமே விட்டு விட்டாள். பட்ஜெட் எவ்வளவு என்று தெரிந்திருந்ததால், அந்த அமவுண்ட்டுக்குள் செலக்ட் பண்ணி முடித்து விட்டாள் ஜீவிதா.

பழகின அந்த ஏரியாவில், தான் வாழ்ந்த வாழ்க்கை எல்லாம் நினைவுச் சுழலில் சுழல.. தடுமாறினாள் பரிமளா. திருமணமாகி வாழ்ந்தது, வாழ்ந்து முடித்ததெல்லாம் அதே மாம்பலத்தில்தான்!

ஜவுளிகளுக்குப் பணம் செலுத்தி விட்டு வாசலுக்கு வந்தவளை, பின்னாலிருந்து ஒரு ஆச்சர்யக் குரல் தாக்கியது.

''பரிமளா.. பரிமளா!''

சட்டென திரும்பிப் பார்த்தவள்.. பேயடித்தவள் போல் மிரண்டாள்.

சற்று தூரத்தில் ஜவுளியைப் பார்த்துக் கொண்டிருந்த.. அறுபது வயதுள்ள ஒரு பெண்மணி இவளைப் பார்த்து அழைத்துக் கொண்டே நடந்து வர.. சுதாரித்துக் கொண்ட பரிமளா, இரு பெண்களையும் இழுத்துக் கொண்டு வெளியேறினாள்.. கிட்டத்தட்ட ஓடினாள்.

ஜீவிதாவுக்கும் சவிதாவுக்கும் ஒன்றுமே புரியவில்லை. பயமும் குழப்பமுமாய் அம்மா பின்னாலேயே ஓடினார்கள்.

''என்னம்மா.. என்னாச்சு?''



**திக்கெட்டும் தீபாவளி!**

ஒரிசாவில் தீபாவளிக்கு மறுநாளை 'எம தீபாவளி' என்கின்றனர்.



''பேசாம வாங்க.. ம்.. சீக்கிரம்..!''

''பரிமளா.. ஏய் பரிமளா.. உன்னைத்தான்!''

அந்தப் பெண்மணியால் அவ்வளவு வேகமாய் ஓடி வர முடியவில்லை. மூச்சு வாங்க.. தொலைவில் ஜனங்களுக்கு மத்தியில்.. இடித்துக் கொண்டு, தள்ளிக் கொண்டு ஓடிய அவர்களை ஆயாசமாகப் பார்த்தாள்.

''எதுக்கும்மா அவங்களைப் பார்த்துட்டு பயந்து ஓடறே?''

கேட்ட சவிதாவை முறைத்தாள்.

''கேள்வி கேக்காம இருக்க முடியாதா உன்னால? பேசாம வா!''

வெள்ளிக் காசுகளை இறைத்து விட்டு வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது முழு நிலவு. அதைத் தன் போர்வையால் மூடி களவாடிச் செல்ல மெல்ல ஊர்ந்து வந்தது மேகக் கூட்டம்.

சுற்றிக் கொண்டிருந்த ஹால் ஃபேனில் காற்றை விட கடக் கடக்கென்ற சப்தம்தான் அதிகம் வந்தது. கடந்து சென்ற காரின் பின்னே குரைத்துக் கொண்டே ஓடிய நாயின் குரல் எங்கிருந்தோ தேய்ந்து வந்தது.

சவிதா மடித்துத் தர, பரிமளா கவரில் போட்டுத் தர, ஜீவிதா இன்விடேஷன் ஓரங்களில் மஞ்சள் தடவினாள்.

''அம்மா..'' தயங்கியபடி அழைத்தாள் ஜீவிதா.

''ம்..''

''தப்பா எடுத்துக்காதேம்மா! கடையில அந்த லேடியைப் பார்த்து ஏன் பயந்து ஓடணும்? யார் அவங்க?''

கேள்வியே கேட்காத மகள் கேட்கவும் அதட்ட முடியவில்லை.

அவள் முகம் இருண்டு போனது. கலங்கிப் போனது.

''வேணாம் ஜீவிதா. அவ நல்லவ இல்லே. அவ்வளவுதான் சொல்ல முடியும். நான் பழசெல்லாம் நினைச்சு நொந்து அழணும்னு ஆசைப்பட்டா.. சொல்றேன். சொல்லவா?''

''ஐயோ.. வேணாம்மா. அந்த லேடியால நீ ரொம்ப பாதிக்கப்பட்டிருக்கே.. புரியுது.. நான் இதுக்கு மேலே எதையும் கேட்க மாட்டேம்மா!''

''சரி.. சரி.. இன்னும் பத்து நாள்தான் இருக்கு கல்யாணத்துக்கு! நாளைலேர்ந்து இன்விடேஷன் குடுக்க ஆரம்பிக்கணும். சீக்கிரம் வேலைய முடிங்க. சவி.. உன் ஃப்ரெண்ட்ஸ்க்குக் குடுக்க எத்தனை இன்விடேஷன் வேணுமோ எடுத்துக்க..''

''சரிம்மா.. ஒரு விஷயம்!''

''என்ன?''

''நமக்குனு சொந்தக்காரங்க யாருமில்லையாம்மா? உன் பக்கம், அப்பா பக்கம்னு.. ஒருத்தரும் நம்மளைப் பார்க்க வந்ததேயில்லே. அட்லீஸ்ட், அக்கா கல்யாணத்துக்காவது எல்லோரையும் கூப்பிடலாம்மா!''

''அது.. அது சரிப்பட்டு வராது! நமக்கு யாருமில்லேன்னு நினைச்சுக்க.. போதும்!''

சவிதா அம்மாவை விநோதமாய் பார்த்தாள்.

பரிமளா எழுந்து கிச்சனுக்குள் சென்று தண்ணீரைக் குடித்து ஆசுவாசமானாள்.

'நல்லவேளை.. அந்தக் கிராதகிகிட்டே மாட்டலை. இல்லேன்னா.. எல்லா உண்மையும் தெரிஞ்சிருக்கும். தெரிஞ்சிருந்தா.. என் பொண்ணுங்க என்னைப் பத்தி எவ்ளோ தப்பா நினைச்சிருப்பாங்க?' நடக்காத விஷயத்தை நினைத்து பயந்தாள்.

9

ஒருவழியாய் ஜீவிதா – குணாளன் திருமணம் நடந்தேறியது. பிரம்மாண்டமாய் இல்லாவிட்டாலும், எளிமையாகவும் இல்லாமல் சிறப்பாகவே நடத்தியிருந்தாள் பரிமளா. மாப்பிள்ளை வீட்டாரும் நல்லவர்கள் என்பதால், பரிமளாவின் நிலையறிந்து, குணமறிந்து அவளால் என்ன செய்ய முடியுமோ அதை மட்டும் செய்தால் போதும் என்று சொல்லி விட்டனர்.

ஜீவிதா மட்டுமல்ல.. சவிதா கூட எதிர்பார்க்காத விஷயம், ஜீவிதாவுக்கு இருபது பவுனும் மாப்பிள்ளைக்கு இரண்டு பவுனும் போட்டதுதான். அவ்வளவையும் சேர்க்க எவ்வளவு



பாடுபட்டிருப்பாள்! ஒரே வகையான சிம்பிளான உணவு தந்த சேமிப்பு என்பதும் புரிந்தது. அது மட்டுமல்ல.. திருமணத்தில் போட்டுக் கொள்ள சவிதாவுக்கும் பத்து பவுன் நகைவரை அணிவித்தாள்.

தற்போது வசித்து வரும் வீடு கிட்டத்தட்ட பத்து லட்சம் பெறுமானமுள்ளது. அது ஜீவிதா, சவிதாவுக்காக உயில் எழுதி.. அதையும் கொடுத்திருந்தாள். தன் காலத்துக்குப் பிறகு அதை அவர்கள் வசித்தோ, விற்றோ, எப்படி வேண்டுமானாலும் அனுபவிக்கலாம்.

ஜீவிதா, அம்மாவை விட்டுப் பிரிவதற்குத்தான் ரொம்பவே அழுதாள்.

அன்று ஒரு முக்கியமான டாகுமெண்ட் விஷயத்துக்காக, ஷாகுல் ஹமீது பரிமளாவையும் ரஞ்சிதத்தையும் கிழக்குக் கடற்கரை சாலையில் உள்ள தொழிலதிபர் வீட்டுக்குத் தன் காரில் அனுப்பி வைத்தார்.

''எப்படியோ.. ஒத்தை ஆளாய் நின்னு உன் பொண்ணு கல்யாணத்தை முடிச்சிட்டே! இனியாவது ஃப்ரீயா இரு!'' என்றாள் ரஞ்சிதம்.

''எப்படி நிம்மதியா இருக்க முடியும் ரஞ்சி? இன்னொரு பொண்ணைக் கரையேத்த வேணாமா? ஜீவிதாவுக்கு வளைகாப்பு, குழந்தை, சீர்னு எவ்வளவு இருக்கு? இந்த மிஷின் ஓடறதை நிறுத்த இன்னும் எட்டு வருஷமாவது ஆகும்!'' விரக்தியில் பெருமூச்சு விட்டாள்.

ஏதேதோ பேசிக் கொண்டேயிருக்க.. கார் அடையாறைத் தாண்டியது.

அப்போது.. எதிர் சாலையில்.. பைக்கில்.. ஒரு இளைஞனுடன் தன் மொத்த உடம்பையும் அழுத்தி அணைத்தபடி சென்ற பெண்ணைப் பார்த்து அதிர்ந்தாள் பரிமளா.

பைக் வேகமாய் சென்றது. முகம் தெளிவாய்த் தெரியவில்லை என்றாலும்.. அன்று காலை சவிதா அணிந்து சென்ற அதே ஸ்கை ப்ளூ கலர் சல்வார்தான் அந்தப் பெண்ணும் அணிந்திருந்தாள். ஒரு கணம் இப்படியும் அப்படியுமாய் தலையை ஆட்டிச் சிரித்தபோது.. சவிதாபோலவே இருந்தது.

திரும்பித் திரும்பிப் பார்த்தவளை.. ''என்னக்கா.. யாராவது தெரிஞ்சவங்க போறாங்களா?'' என்று கேட்டாள் ரஞ்சிதம்.

''அப்படித்தான் தெரிஞ்சது.. ஆனா அவங்க இல்லே. குடிக்கக் கொஞ்சம் தண்ணி குடேன்'' படபடப்பு

அதிகமானது.

'சவிதா தானா? இவ்வளவு நெருக்கமாய் ஒரு பையனுடன்! இல்லை.. இருக்காது. நான் அப்படி வளர்க்கவில்லையே! கொஞ்சம் துறுதுறுன்னு பேசுவாளேயொழிய.. ஜீவிதா மாதிரி அவளும் அடக்கமான பெண்தான்! ஆனால், அவள் மாதிரியே இருந்ததே! பேசாமல் படிப்பு முடிந்ததும் இவளுக்கும் கல்யாணம் முடித்து விட்டால் என்ன?

கொஞ்சம் கடன் வாங்கியாவது, இருப்பதை வைத்து முடித்து விடலாம். அவள் வேலைக்குப் போய் சம்பாதிக்கும்வரை காத்திருக்க வேண்டாம்!'

குழப்பத்தில் எந்த முடிவும் எடுக்கக் கூடாது. அவள்தான் என்று உறுதியாய் சொல்ல முடியாதபோது.. எதற்கிந்த யோசனை? அவள் உன் வளர்ப்பு! தப்பு செய்ய மாட்டாள்!'

டென்ஷனை அடக்க படாதபாடு பட்டாள்.

**ச**விதா கிச்சனில் காஃபி போட்டுக் கொண்டிருக்க, அவளுக்குப் பின் பக்கமிருந்து அணைத்தான் மித்ரன். வேகமாக விலகினாள் சவிதா. ஆனாலும் பிடியைத் தளர்த்தவில்லை மித்ரன்.

''இனிமே வீட்டுக்கு வர்றதைப் பத்தி ரொம்ப யோசிக்கணும்போலவே. ஏதோ முக்கியமான விஷயம், அதுவும் சீரியஸான விஷயம் பேசணும்னு சொன்னியேனு வந்தேன்.. என்ன அது?'' அவன் பிடியை விலக்கி, தெளிவாகப் பேசினாள்.

''சீரியஸான விஷயம்தான். ஆனா, உன்னைப் பார்த்தாலே மூடு மாறுது சவி! யார் யாரோ தப்புப் பண்றாங்க. நாம பண்றதுக்கென்ன?'' அவன் விரல்கள் விளையாடின.

''ஸாரி மித்ரு! கல்யாணமாகாம எதையும் அனுமதிக்க மாட்டேன்!''

''சரி.. வா.. ரிஜிஸ்டர் மேரேஜ் பண்ணிக்கலாம். எல்லாமே நியாயமா நடக்கட்டும். இன்னும் மூணு மாசப் படிப்புதானே? படிப்பு முடிஞ்சதும் இங்கே வந்துடு.''

''சீரியஸான விஷயத்தை ஜாலியாய்ப் பேசறே! முதல்ல ஏதோ சொல்லணும்னு சொன்னியே.. அதைச் சொல்லு!''

''உங்கம்மா எப்படிப்பட்டவங்க சவி?''



## திக்கெட்டும் தீபாவளி!

பீகாரில் தீபாவளி அன்று, வீட்டில் உள்ள துடைப்பத்தைக் கொளுத்தி வெளியே எறிகின்றனர். இப்படிச் செய்தால் மூதேவி ஓட விடுவாளாம்.



''கேள்வியே ஒருமாதிரியா இருக்கே?''

''உங்கம்மாவும் ஒருமாதிரிதான் சவி!''

''இதோ பார்.. நாம லவ் பண்றோம்ங்கிற உரிமையில எங்கம்மாவைப் பத்தித் தப்பாப் பேசறதை 'அலவ்' பண்ண மாட்டேன்!''

''கோபப்படாதே சவி! அவங்களை தப்பாப் பேசறதுல எனக்கு மட்டும் சந்தோஷமா என்ன? உங்கம்மா எங்கே வொர்க் பண்றாங்கனு சொன்னே?''

''பிராட்வேல..''

''அதுக்கப்புறம் பார்ட் டைமா எங்கே வேலைக்குப் போறாங்க?''

''திருவள்ளூர்ல..''

''என்ன வேலைன்னு தெரியுமா உனக்கு?''

''தெரியாது.. சொல்லலே!''

''எப்படிச் சொல்வாங்க?''

''.......?!''

''திருவள்ளூர்ல என் சித்தப்பா வீடு இருக்கு. ஏற்கனவே சொல்லியிருக்கேன்ல?''

''ம்..!''

''அதே தெருவுலதான்.. ஒரு வயசான ஆம்பளை தனியா இருக்கார். பொண்டாட்டி செத்து பத்து வருஷம் ஆகுது! அவர் வீட்டுக்குத்தான் உன் அம்மா தினமும் வந்துட்டுப் போறாங்க. யாருமில்லாத வீட்ல ஒரு ஆம்பளைகிட்ட டெய்லி வந்துட்டுப் போக வேண்டிய அவசியம் என்ன? அந்த ஆள் கொஞ்சம் வசதியானவன். ஒரு பையன் கனடாவுல இருக்கான். ஒரு பொண்ணு மதுரையில புருஷன் வீட்ல இருக்கா! உங்கம்மா எதுக்கு வந்துட்டுப் போறாங்கன்னு புரியுதா? உன் அக்காவுக்கு தாராளமா செலவு பண்ணி கல்யாணம் பண்ணாங்களே.. எப்படி வந்தது அவ்வளவு





பணம்?''

''நோ.. நீ யாரையோ பார்த்துட்டு என் அம்மானு..''

''நான்தான் உன் தெருவுக்கே வந்து உன் அம்மாவை வேலைக்குப் போறப்ப பார்த்திருக்கேனே! இது எந்தளவுக்கு உண்மைன்னு நீ தெரிஞ்சுக்கத்தான் செல்ஃபோன் கேமராவுல 'ஷூட்' பண்ணியிருக்கேன்.. நீயே பாரு!''

மித்ரன் தன் போனில் பதிவு செய்த வீடியோவைக் காண்பித்தான்.நிஜம்தான்! அதிலிருப்பது அம்மாதான். அவள் வாசலுக்கு வர.. லுங்கி கட்டிய வயதான நபர் கையசைத்து விடை தர..

சவிதாவுக்குக் கண்ணீர் பிரவாகமெடுத்தது.

'எந்த ஆஃபீஸில் லுங்கி – பனியனோடு வேலை செய்கிறார்கள். சே.. இவ்வளவு கேவலமான மனுஷியா நீ?'

வெறுப்பாய் இருந்தது. ஓவென்று அழ வேண்டும்போல் இருந்தது.

'எங்களுக்காகவே வாழ்வது போல் நீ போட்டதெல்லாம் வேஷமா? உன் உடல் பசியை தணித்துதான் எங்களை வளர்த்தாயா?'

உடம்பெல்லாம் கத்தியெடுத்து கீறிக் கொள்ள வேண்டும்போல் ஆவேசமாய் இருந்தது. கேவிக் கேவி அழுதாள்.

''ஏய்.. சவி.. நீயேன்டா அழறே.. இதோ பார்.. என்னால தாங்க முடியல.. அழறதை நிறுத்து''

''அசிங்கமாயிருக்கு மித்ரு. அம்மாவா.. அவங்களா.. இப்படி? ச்சே?''

சில நிமிடங்கள் அவள் அழுகை தொடர்ந்தது. பிறகு தன்னைத் தானே சமாதானப்படுத்திக் கொண்டவள், ''மித்ரு.. நாம கல்யாணம் பண்ணிக்கலாம். எல்லா ஏற்பாடுகளையும் பண்ணிடு!'' என்றாள் தீர்க்கமாக.

## 10

மகளை கவலையுடன் பார்த்தாள் பரிமளா.

உடம்பு சரியில்லை என்று ஒரு நாளும்

பெண்கள் இருவருமே லீவு போட்டதில்லை.

சவிதா நேற்றிரவிலிருந்தே சரியில்லை. முகம் வாடியிருந்தது. சப்பாத்தியை.. பெயருக்கு சாப்பிட்டதுபோல் இரண்டு விள்ளல் மட்டுமே சாப்பிட்டாள். காலையில், ''தலையை வலிக்கிறது. படுத்தால் தேவலை, நான் இன்னைக்கு லீவு போட்டுடலாம்னு இருக்கேன்'' என்ற மகளை வாத்சல்யத்துடன் பார்த்தாள்.

''ஏன் சவி.. என்ன பண்ணுது?''

''அதான் சொன்னேனே!'' எரிச்சலை அடக்கிக் கொண்டு.. கண்களை மூடிக் கொண்டு சொன்னாள்.

''தைலம் தேய்ச்சு விடவா?''

''வேணாம்.. எரியும்!''

''ரொம்ப முடியலியா?''

''ம்''

''சரி.. கிளம்பு! நானும் அரை நாள் லீவு சொல்லிக்கறேன். ஹாஸ்பிடல் போய் வரலாம்!''

''அதெல்லாம் வேணாம். மெடிக்கல் ஷாப்ல மாத்திரை மட்டும் வாங்கிக் குடுத்துடு. தலைவலிதானே? போட்டுக்கிட்டுப் படுத்து எந்திரிச்சா போதும்!''

பிடிவாதமாய்க் கூறவும் மேற்கொண்டு வற்புறுத்தத் தயக்கமாய் இருந்தது.

''சரி.. படுத்துக்க. சமைச்சு முடிச்சிட்டு மாத்திரை வாங்கிட்டு வந்திடறேன்!''

பரிமளா வேகமாய் வேலையில் இறங்கினாள். சமைத்து தனக்கு எடுத்துக் கொண்டு, மகளுக்காக ஹாட்பேகில் அடைத்து வைத்தாள். சேலை மாற்றித் தயாரானவள், இரண்டு தெரு தள்ளி இருந்த மெடிக்கல் ஷாப்புக்குச் சென்று மாத்திரை வாங்கி வந்தாள்.

டீ போட்டு ஃப்ளாஸ்க்கில் ஊற்றி டேபிள் மேல் வைத்தாள்.

''சவி.. நான் கிளம்பறேன். டிஃபன் சாப்பிட்டுட்டு மாத்திரை போட்டுக்க. டீ போட்டு வச்சிருக்கேன். குடிச்சிட்டுப் படு! தலைவலி விடலேன்னா, மதியம் ஒருவேளை மாத்திரை போடு. சாப்பிடாம போடாதே! ஹாட் பேக்ல சாம்பார் சாதமும் வெண்டைக்காய்ப் பொரியலும் வச்சிருக்கேன்!''



''சரி..!''

''பத்திரம்மா! கதவை சாத்திக்க. தாழ்ப்பாள் போட மறந்துடாதே!''

எரிச்சல் மண்டிக் கொண்டு வந்தது.

'போய்த் தொலையேன்' என்று கத்தியது மனசு.

''சர்ரீ!'' என்றாள் கட்டுப்படுத்திக் கொண்டு.

ஒருவழியாய் பரிமளா சென்று விட்டாள். சவிதாவுக்கு எண்ணங்கள் தறிகெட்டு ஓடின. முன்தினம் மித்ரன் மொபைலில் காட்டிய விஷுவல் திரும்ப.. திரும்பக் கண் முன் வந்து இம்சித்தது.

'எப்படி.. எப்படி உன்னால் முடிகிறது? அப்பாவோடு வாழ்ந்து மூன்று குழந்தைகள் பிறந்த பிறகு.. அது போதாதா எஞ்சியுள்ள வாழ்நாட்களை ஓட்ட? அசிங்கமாய் ஒரு நிழல் வாழ்க்கை!

மித்ரன் மீதான என் காதல்.. ஜென்ம ஜென்மமாய் அழியாதே! அவனோடு ஒரு நாளோ, ஒரு மாதமோ வாழ்ந்தாலும் போதும்.. அந்த நினைவுடனே வாழ்க்கையை வாழ்ந்து முடிப்பேன். ஆனால்.. அந்த அன்பும் வைராக்கியமும் கட்டுப்பாடும் உனக்கு மட்டும் ஏன் இல்லை?'

சவிதா மனம் தாளாமல் வாய் விட்டு அழுதாள். நேரம் கடக்க.. குளித்து விட்டு வந்தாள். டிஃபன் சாப்பிடப் பிடிக்கவில்லை. இட்லியை காகத்துக்கு வைத்து விட்டு, டீ மட்டும் குடித்தாள். மாத்திரைகளைத் தூக்கி எறிந்தாள்.

டி.வியை ஆன் செய்தவள்.. பார்க்கப் பிடிக்காமல் அணைத்தாள். இப்போது நிஜமாகவே தலையை வலிக்க ஆரம்பித்தது.

காலிங் பெல் அலறியது.

'யாரது? ஆஃபீஸுக்குப் போகாமல் திரும்ப வந்துடுச்சா முசுடு? சே.. காலேஜுக்கே போயிருக்கலாம்!'

ஆத்திரமாய் வர.. கதவைத் திறந்தாள்.

ஒரு பெண்மணி! எங்கேயோ பார்த்ததுபோல் நினைவு!

''யாரு நீங்க?''

''பரிமளா வீடுதானே இது?''

''ஆமா.. நீங்க?''

''அவ பொண்ணுதானே நீ?''

''ம்..'' என்றவளுக்கு ஞாபகம் வந்து விட்டது.

அன்று ஜவுளிக் கடையில் இவளைப் பார்த்து விட்டுத்தானே, அம்மா எங்களை இழுத்துக் கொண்டு ஓடினாள்.

''ஓ.. நீங்களா? என்ன வேணும்?''

''உள்ளே கூப்பிட மாட்டியா? உங்கம்மா வீட்ல இல்லியா?''

''இல்லே.. வாங்க!'' அரை மனதுடன் அழைத்தாள்.

''அம்மா எங்கே?''

''ஆஃபீஸ்க்கு!''

''யுகேந்திரன்?''

சவிதாவுக்கு வியப்பாய் இருந்தது.

குடும்பத்திலுள்ள அத்தனை பேரையும் தெரிந்து வைத்திருக்கிறாள்.. யாரிவள்?

''என்ன.. அப்படிப் பார்க்கிறே? நீ முழிக்கறதைப் பார்த்தா.. உன் அம்மா என்னைப் பத்தி எதுவும் சொல்லியிருக்க மாட்டாள்னு புரியுது. நான் உன் அத்தை. உங்கப்பாவோட கூடப் பொறந்த அக்கா.. யசோதா!''

''எ.. எ..ன்..ன?''

அவளால் ஆச்சர்யத்தையும், அதிர்ச்சியையும் தாங்க முடியவில்லை.

''என்ன சொல்றீங்க?''

''ஆமாண்டா.. உங்கப்பா ரமணனோட கூடப் பொறந்த ஒரே அக்கா நான். உங்கம்மா எங்களை விட்டுப் பிரிஞ்சப்ப.. நீ ரெண்டு மாசக் குழந்தை!'' என்று பேசியபடி கண்களால் வீட்டை அளந்தவள்.. ஹால் மூலையில் ஒரு ஃபோட்டோவுக்குப் போட்டிருந்த வாடிப் போன பூமாலையைப் பார்த்து, திடுக்கிட்டவளாய் அருகில் சென்றாள்.

''இது.. இது..''

''எங்கப்பா..''

''தெரியுது.. என் தம்பி ஃபோட்டாவுக்கு ஏன் மாலை போட்டிருக்கீங்க? ஐயோ! என்ன கொடுமையிது?'' அலறினாள்.

புரியாமல் பார்த்தாள் சவிதா.

''ஏன்? அப்பாதான் செத்துட்டாரே!''



**திக்கெட்டும் தீபாவளி!**

ஜப்பானியர்கள் தீபாவளியை 3 நாட்கள் கொண்டாடுகின்றனர்.



''ஐயோ.. ஐயோ.. எந்தப் பன்னாடை அப்படிச் சொன்னது? என் தம்பி உசுரோட ராஜா மாதிரி இருக்கறப்ப, செத்துட்டான்னு மாலை போட்டு திவசம் பண்றாளா அந்தப் பாவி? அவ்வளவு கல்நெஞ்சக்காரியா உன் அம்மா?''

''அ.. அப்பா.. உயிரோட.. எ.. என்ன சொல்றீங்க? எங்கப்பா உயிரோட இருக்காரா? எங்கே.. எங்கே.. இருக்கார் சொல்லுங்க?''

''என்னடி அநியாயம் இது? பெத்த தகப்பனை உசுரோட மறைச்சிட்டு, பிள்ளைங்களை தகப்பன் இல்லாத பிள்ளைங்களா வளர்த்திருக்காளா? அவ நல்லவளா இருந்தா.. இப்படி பண்ணியிருப்பாளா?''

''அவர் எங்கே இருக்கார்னு சொல்லுங்க?''

''மதுரையில..''

''அவர் ஏன் எங்களைப் பார்க்க வரலை?''

''நீங்க இருக்கிற எடம் யாருக்குத் தெரியும்? அவனும் தேடாத இடமில்லை. உங்களை ஜவுளிக் கடையில பார்க்கலேன்னா.. என்னால மட்டும் எப்படி கண்டுபிடிச்சிருக்க முடியும்? பத்தாயிரத்துக்கு மேலே ஜவுளி எடுத்தா.. குலுக்கல் மூலமா.. பரிசு தர்றதாச் சொல்லி அட்ரஸ் எழுதித் தரச் சொல்லுவாங்க இல்லே? நீங்களும் அப்படித்தான் எழுதி வச்சிட்டுப் போனதை.. உடனே பார்த்து எழுதிக்கிட்டேன்!''

''ஏன் அத்தை அப்பாவும் அம்மாவும் பிரிஞ்சிட்டாங்க?''

யசோதா அந்தக் கேள்விக்குப் பதில் சொல்லத் தயங்கினாள்.

''சொல்லுங்க. உயிரோட இருக்கிறவரை சாகடிச்சிட்டு வாழற அளவுக்கு என்ன நடந்துச்சு?''

''இல்லேம்மா! இத்தனை வருஷமா உங்கம்மாவை மனசுல உசரத்துல வச்சிருந்திருப்பீங்க. காரணத்தைச் சொல்லி அவளை வெறுக்கற மாதிரி செய்ய மனசு வரல. அதை நீங்க தெரிஞ்சுக்கவும் வேணாம். உங்கம்மாவைப் பார்த்தப்ப.. பழிசெல்லாம் மறந்து பாசமா பேசணும்னு தோணுச்சு. என்ன

இருந்தாலும் ஒத்தை ஆளா உங்களை எல்லாம் வளர்த்து ஆளாக்கியிருக்கா.''

''உங்கம்மாவை மட்டுமே குறை சொல்லி என்ன ஆகப் போகுது? உங்களை வளர்க்கறதுல என் தம்பியும் பங்கெடுத்திருக்கணும். நீ மட்டும் தப்பு செய்யலாம். நான் மட்டும் செய்யக் கூடாதானு தாம்பத்யத்துல போட்டி வந்துடக் கூடாது. கத்தி சாணைக் கல்லைத் தின்னுச்சு. சாணைக் கல் கத்தியைத் தின்னுச்சு. வேறென்ன சொல்ல?''

யசோதா பெருமூச்சு விட்டாள்.

சவிதாவோ.. திகைப்பின் உச்சத்தில் இருந்தாள்.

## 11

யசோதா சென்ற பிறகும்.. இயல்பு நிலைக்குத் திரும்ப முடியாமல் தவித்தாள் சவிதா.

'சீ.. இவளெல்லாம் ஒரு அம்மாவா? நினைக்கவே அருவருப்பாய் இருக்கிறதே! தாலி கட்டிய கணவன் உயிரோடிருக்க.. தாலியறுத்து, பொட்டைத் துறந்து, ஃபோட்டோவுக்கு மாலையிட்டு.. வருஷா வருஷம் திவசம் வேறு! இதையெல்லாம் செய்யத் துணிந்தவள் எப்படி குடும்பப் பெண்ணாய் இருக்க முடியும்? இவள் வயிற்றிலா நான் பிறக்க வேண்டும்? இந்த உண்மையை ஜீவிதாவிடம் சொல்லலாமா?

வேண்டாம்.. இப்போது வேண்டாம்! அப்பாவை எப்படியாவது சந்தித்து.. அவரை அழைத்துச் சென்று ஜீவிதா முன் நிறுத்த வேண்டும். அவளும் பெற்றவளின் வேஷத்தைப் புரிந்து கொள்ளட்டும், காறித் துப்பட்டும். அதுவரை.. எனக்குத் தெரிந்ததை இவர்களிடம் தெரியப்படுத்தி விடக் கூடாது.

அம்மா! எத்தனை கட்டுப்பாடுகள் விதித்தாய். அந்தந்த வயசுக்குரிய சந்தோஷங்களை அனுபவிக்க விடாமல் எவ்வளவு டார்ச்சர் கொடுத்தாய்? உனக்கு நான் தரக் கூடிய அடி.. மரண அடியாய் இருக்கும். உனக்கு புருஷன் வேண்டாம் எனில்.. அது உன் தனிப்பட்ட முடிவு. ஆனால், எங்களை தகப்பனில்லாப் பிள்ளைகளா வளர்க்க.. உனக்கு யார் அதிகாரம் கொடுத்தது? துடிக்க வைக்கிறேன். விதவைக் கோலத்துக்குள் வேறு வீடு தேடிப் போகும் உனக்கு.. தண்டனை தருகிறேன்.. வெகு



சீக்கிரம் உன்னைப் புழுப்போல் துடிக்க வைக்கிறேன்!'

தனிமையில் தனக்குத் தானே உருப் போட்டு, அம்மா மீது வெறியேற்றிக் கொண்டாள்.

இரவில் வீடு திரும்பிய பரிமளா, சவிதாவின் களையிழந்த முகத்தைப் பார்த்து அதிர்ந்தாள்.

''என்ன சவிம்மா.. இவ்ளோ டல்லாயிருக்கே? தலைவலி போய்டுச்சா?''

''ம்..''

''சாப்பிட்டியா?''

எங்கே? அவள் மேல் இருந்த மனக் கசப்பில் டிஃபனையும் சாப்பாட்டையும் காகத்துக்குத் தாரை வார்த்தது அவளுக்கு எப்படித் தெரியும்?

'ம்..''

பரிமளா அவளை ஏக்கத்துடன் பார்த்தாள்.

''இப்பல்லாம் நீ என்கிட்ட சரியாவே பேசறதில்லே தெரியுமா? ஏன்னு புரியாமலில்லே. உன் அக்காவைப் பிரிஞ்ச ஏக்கம். அதானே! கவலையே படாதே! வர்ற ஞாயிற்றுக்கிழமை ஜீவிதா மாப்பிள்ளையோட நம்ம வீட்டுக்கு வர்றா. அவளுக்கும் உன்னைப் பிரிஞ்ச ஏக்கம். உன்னைப் பார்க்கணும்னு ஆசையாயிருக்காம்!''

அந்தச் செய்தி சவிதாவுக்குக் கொஞ்சம் ஆறுதலாய் இருந்தது.

ஜீவிதாவைப் பிரிந்தது பெரிய கஷ்டமாய் இருந்தது. நினைத்தபோது 'கட்' அடித்து விட்டு, பார்த்து விட்டு வரலாமென்றால்.. அவள் அலுவலகத்துக்குச் சென்று விடுகிறாள். ஆஃபீஸுக்கெல்லாம் சென்று டிஸ்டர்ப் பண்ண முடியாது. மாமியார் வீடு குரோம்பேட்டையில்! 'திருமணத்துக்குப் பிறகும் பணிபுரிய வேண்டும்' என்பது, முன்பே விதிக்கப்பட்ட கண்டிஷன்.

'அம்மா சென்டிமென்ட்'டால் நல்ல வாழ்க்கையை இழந்த முட்டாள்!

அக்காவை நினைக்கும்போதெல்லாம் ஆதங்கமாய் இருக்கும்.

''நைட்டுக்கு சாப்பிட என்ன சமைக்கட்டும் சவி?''

வியப்பாய் இருந்தது. இத்தனை நாட்களாய்.. அம்மா என்ன நினைக்கிறாளோ, அதைத்தானே மூன்று வேளையும் சாப்பிட்டனர். இதென்ன புதுசா?

''எதுவாயிருந்தாலும்!''

''தோசையும், காரச் சட்னியும்?''

''ம்!''

பரிமளா வேலையில் ஈடுபட்டவாறே அவளிடம் பேசினாள்.

''ஜீவிதா இருந்தவரைக்கும் ஒண்ணும் தெரியலே. ஆனா, அவ கல்யாணமாகிப் போனதும் வீடே வெறிச்சுனு ஆய்டுச்சில்லே? என்ன, நீ ஒரு ரெண்டு வருஷமோ, மூணு வருஷமோ கூட இருப்பியா? நீயும் கல்யாணமாகி போய்ட்டா.. என் வாழ்க்கையே அர்த்தமில்லாம சவம்போல் ஆய்டும்!''

''....?!''

''என்ன சவிம்மா.. ஒண்ணுமே பேச மாட்டேங்கறே?''

''நீ ஏன் யுகேந்திரன் அண்ணனை உன்கூட வச்சுக்கக் கூடாது?''

வெகு காலத்துக்குப் பிறகு அவன் பெயர் அந்த வீட்டில் உச்சரிக்கப்பட.. பொறுக்க முடியாத பரிமளா, ரௌத்ரமாய்த் திரும்பினாள்.

''ஏய்.. என்ன சொன்னே?''

''என்ன தப்பா சொல்லிட்டேன்? வீட்டுக்கு வீடு நடக்கிற விஷயம்தானே? மனசுக்குப் பிடிச்ச பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்கறது தப்பா? எவ்ளோ பேர் புருஷன் பொண்டாட்டிக்கும், பொண்டாட்டி புருஷனுக்கும் துரோகம் பண்ணிக்கிட்டு கேவலமா வாழ்ந்துட்டு இருக்காங்க? இதெல்லாம் என்ன கலாச்சாரம்? நாகரிகம்? அண்ணன்.. அவருக்கு..''

''நிறுத்தறியா?'' ஆவேசமாய்க் கத்தினாள்.

''துரோகம் பண்ணினவனை மன்னிக்கவே முடியாது. ஒரு பிள்ளை செத்துப் போச்சுனு நான் எப்பவோ முடிவு பண்ணிட்டேன். காதலைப் பத்தி என்னடி தெரியும் உனக்கு? வக்காலத்து வாங்கறே! இனி அவனைப் பத்திப் பேசினே.. நான் மனுஷியாவே இருக்க மாட்டேன்!'' கத்தி விட்டு சமையலறைக்குள் சென்று மூச்சு வாங்கினாள்.

சவிதா அவளின் பேச்சால் சிறு சலனம்கூட



அடையவில்லை.

'ப்பா.. என்னா நடிப்பு? வயசான காலத்துல உனக்கு வந்தா அது நல்ல காதல்.. அண்ணனுக்கு வந்தா தப்பு! நீ மனுஷினு யார் சொன்னது? வக்கிரம் பிடிச்ச மிருகம். காதலைப் பத்தி என்கிட்டயேவா?'

சவிதா.. அம்மா மீது மேலும் மேலும் துவேஷம் வளர்த்துக் கொண்டாள். அதன் பிறகு இருவருமே எதையும் பேசிக் கொள்ளவில்லை. மௌனமாகவே சாப்பிட்டனர். உறங்கப் போயினர்.

காலையில் காலேஜுக்குக் கிளம்பியவள் முன் வந்து நின்றாள் பரிமளா. இரவெல்லாம் அழுதிருப்பாள் போலும். கண்கள் சிவந்து, வீங்கியிருந்தன.

''சவி.. லஞ்ச் பாக்ஸ் எடுத்துக்கிட்டியா?''

''ம்!''

''நைட்டு நான் கோவமா பேசிட்டேன் இல்ல? மன்னிச்சிடுடா! வாழ்க்கையில எனக்கு கிடைச்ச ஏமாற்றம், போராட்டம் மனசை ரணமாக்கிடுச்சு சவி! அதோட வெளிப்பாடுதான் என் கோபம்! என்னமோ தெரியல.. நீ என்னை விட்டு விலகிப் போற மாதிரி ஒரு உணர்வு, பயம்! அம்மாவைப் புரிஞ்சுக்க சவி!''

''சரி!''

''......?!''

''வர்றேன்!'' புறப்பட்டு விட்டாள்.

பரிமளாவுக்கு, இதயத்துக்குள் கம்பளிப் பூச்சி நுழைந்து விட்டதுபோல் இனம்புரியா இம்சை!

கவனித்தாள். சவிதா நேற்றிலிருந்து ஒரு வார்த்தைகூட அவளை 'அம்மா'வென்று அழைக்கவில்லை.

பட்டுப் புடவையில், அவன் வாங்கிக் கொடுத்த சில நகைகளில், தலை நிறைய மல்லிகைப் பூவுடன் எளிமையான மேக்கப்பில், புதுவித அழகுடன்.. இதுவரை பார்த்தேயிராத நிலவைப்போல் பிரகாசித்த சவிதாவை, ஆசையும் நேசமுமாய்ப் பார்த்தான் மித்ரன்.

கழுத்தில் அவன் கோயிலில் வைத்துக் கட்டிய மஞ்சள் கயிற்றில் கோர்க்கப்பட்ட தாலி!

''நம்பவே முடியலே சவி!''

காரில் பக்கத்தில் அமர்ந்திருந்தவளின் கைகளைப் பற்றி இருக்கினான்.

''எதை?''

''நவ்.. யூ ஆர் மை வொய்ஃப்''

''ஆமாயில்லே?'' அவன் தோளில் சாய்ந்து கொண்டாள்.

இன்னும் இரண்டு கார்களில் நண்பர்கள் பட்டாளம். சற்று முன்புதான் கோயிலில் வைத்து இருவருக்கும் திருமணம் நடந்தது.

இதோ.. திருமணத்தைப் பதிவு செய்ய ரிஜிஸ்டர் ஆஃபீஸ் நோக்கிப் போய்க் கொண்டிருக்கின்றனர்.

''சவி..''

''சொல்லுப்பா!''

'கல்யாணமானாலும் நீ மறுபடி உன் வீட்டுக்குப் போய்டுவேன்னு சொல்லிட்டே!''

''கொஞ்ச நாள்தானே? சீக்கிரம் நம்ம வீட்டுக்கு வந்துடுவேன்!''

''அப்ப நம்ம ஃபர்ஸ்ட் நைட் எப்ப?''

''காலம் நேரம் கூடி வரட்டும்!''

அவள் பேசும்போது குவிந்து விரிந்த உதடுகளை நெருக்கத்தில் பார்த்தபோது போதை ஏறியது மித்ரனுக்கு.

''ம்ஹூம்.. முடியாது! தொடர்ந்து ஒரு மனுஷன் பட்டினியோட இருந்தா திருடவும் துணிவான்..'' சிணுங்கினான்.

'சச்சீ.. போடா!'' வெட்கத்துடன் நெருங்கி அமர்ந்தாள்.

12

அதே நேரம்!

''இந்தச் சேலை உனக்கு ரொம்ப நல்லாயிருக்கு ரஞ்சிதம். உன் நிறத்துக்குப் பொருத்தமா, பாந்தமா.. என்ன மெட்டீரியல் இது?'' எனக் கேட்டாள் பரிமளா.

''கோரா காட்டன்க்கா.. ஆயிரத்து இருநூறு ரூபா.. நீ கூட இந்த மாதிரி சேலை கட்டினா அழகாயிருக்கும்க்கா!''



## திக்கெட்டும் தீபாவளி!

கும்பகோணம் ஒப்பிலியப்பன் கோயிலை அடுத்து அமைந்துள்ள அய்யாவாடி திருத்தலத்தில், புகழ் பெற்ற ஸ்ரீ பிரத்தியங்கரா தேவி ஆலயம் உள்ளது. இங்கு தீபாவளியன்று, கோயில் சார்பில் இனிப்பு யாகம் நடைபெறும்.

அன்று யாகத்தில் லட்டு, ஜிலேபி, மைசூர்பாகு ஆகியவற்றில் ஏதாவது ஒன்றைச் சேர்ப்பார்கள். இந்த யாகத்தில் எல்லோரும் கலந்து கொள்வார்கள்.



மெல்ல சிரித்துக் கொண்டாள்.

''எனக்கெதுக்கு ரஞ்சி..? சவிதாவுக்குத்தான் புடவை வாங்கி சேர்க்கணும். மாசம் ஒரு சேலை வாங்கலாம்னு இருக்கேன். நீ வாங்கின கடைக்குக் கூட்டிட்டுப் போறியா?''

''அதுக்கென்னக்கா.. தாராளமா போலாம். சவிதாவையும் கூட்டிட்டு வாக்கா!''

''அவ எதுக்கு?''

''அவளுக்குப் பிடிச்ச கலர், டிஸைனை அவ செலக்ட் பண்ணட்டுமே!''

''ப்ச்.. அவ வீம்பு பிடிப்பா, சேலை வேணாம் சுடிதார் எடுத்துக்கறேன்னு. ஜீவிதா அளவுக்கு இவ இல்லை. பொறுமை கிடையாது. நாம மட்டுமே போய்ட்டு வரலாம்!''

''சரிக்கா.. இந்தாங்க..'' ஒரு சின்ன ஸ்டீல் தூக்கை தந்தாள்.

''என்ன இது?''

''பால் கொழுக்கட்டை! என் புடவை நல்லாயிருக்குனு சொன்னீங்களே.. அதுக்காக..!''

''ஏய்.. என்ன விளையாடறியா? நான் இப்பத்தானே சொன்னேன்?''

''நீங்க சொல்வீங்கனு தெரிஞ்சுதான் முன்னமே செஞ்சு எடுத்துட்டு வந்தேன்!''

''சும்மா விளையாடாதே! என்ன விசேஷம்?''

''எதுவுமே இல்லே. என் பொண்ணுக்குப் பால்

கொழுக்கட்டைன்னா ரொம்ப இஷ்டம். அதான் செஞ்சேன். உங்களுக்குக்கூடப் பிடிக்கும்னு ஒரு முறை சொல்லியிருக்கீங்க.. சாப்பிடுங்க!''

''என் மேல பாசம் காட்ட நீ ஒருத்தியாவது இருக்கியேனு சந்தோஷமா இருக்கு ரஞ்சிதம். தப்பா எடுத்துக்கலேன்னா.. இதை சவிதாவுக்குக் குடுத்துட்டு வரட்டா? அவளுக்கும் பால் கொழுக்கட்டைன்னா உயிர். எனக்கு நேரமில்லைன்னு செய்யறதில்லை.''

''அடடா.. சொல்லியிருந்தா இன்னொரு பாக்ஸ்ல அவளுக்கு எடுத்துட்டு வந்திருப்பேனே.. சரிக்கா! எடுத்துட்டுப் போங்க.. என்ன டு அவர்ஸ் பர்மிஷனா?''

''வேற?'' பரிமளா மெல்லப் புன்னகைத்தாள். அதில் தாய்ப் பாசம் வழிந்தது.

சொல்லி விட்டு பரிமளா அலுவலகத்தை விட்டு வெளியில் வந்தாள். பண்டிகைக் காலம் என்று இல்லாவிட்டாலும் கூட, அந்த ஏரியாவுக்கே உரிய ஜனத் திரள், வேகமாய் நடக்க முடியாமல் சிரமத்தைத் தந்து, சலிப்பைத் தந்தாலும்.. இயல்பாகவே ஒருவித சுறுசுறுப்பு உடலில் ஒட்டிக் கொண்டது.

''ஆட்டோ..'' கடந்து சென்ற ஆட்டோவை அழைக்க சற்று தூரம் சென்று நின்றது.

மதிய உணவு இடைவேளைக்குள் சென்று விட வேண்டும் என்று.. கல்லூரியில் இல்லாத மகளுக்காய்ப் பரிமளா ஓட..

எதிரே.. லுங்கி கட்டிய இளைஞன் ஒருவனை போலீஸ்காரர் வேகமாய்த் துரத்திக் கொண்டு வர.. இளைஞன், பரிமளாவின் தோள்பட்டையில் மோதி.. கீழே விழப் போனவள் சுதாரிப்பதற்குள்.. கையிலிருந்த தூக்கு விழுந்து சிதறியது.

பால் கொழுக்கட்டை சிதறி, வழிந்தோடியது.. பரிமளாவின் ஆற்றாமையைப் போல!

சவிதாவுக்கு நல்ல நேரம்!

**நா**ட்கள் மெல்ல உருண்டன.

சவிதா அம்மாவிடம் ஒட்டாமலே இருந்தாள். கூடப் பிறந்தவளைப் பிரிந்த ஏக்கம் என்றெண்ணினாள்.

ஜீவிதா.. அவள் வீடு திரும்பும் முன்.. அவளால் முடிந்த



அளவு வேலைகளைச் செய்து விடுவாள். இவளோ படிக்கிறேன் பேர்வழி என்று புத்தகத்தைக் கையை விட்டு இறக்காமல் அமர்ந்திருக்க.. பரிமளாவுக்கு வேலைப் பளு அதிகமானது.

ஏனோ, முன்னைப் போல் சவிதாவைக் கோபமாய்ப் பேச முடியவில்லை. 'இதைச் செய், அதைச் செய்' என்று கட்டளையிட முடியவில்லை. மகள் முகத்தில் தெரிந்த ஒருவித அந்நியம்.. தாயின் வாயைக் கட்டிப் போட்டது.

ஓய்வில்லாத பணி, வயது, கவலை எல்லாமே சேர்ந்து பரிமளாவை சோர்ந்து போக வைத்தது.

அன்று பகல் சவிதாவுக்கு ஃபோன் செய்தாள் பரிமளா.

''சவிம்மா..''

''சொல்லு!''

''நைட்டு வர லேட்டாகும். மாவு இருக்கு, தோசை போட்டு சாப்பிட்டுக்கறியா?''

''சரி!'' என்றவளுக்கு சிந்தனை தாறுமாறாய் வேலை செய்தது.

'ஏன் லேட்டாகும்? அந்த வீட்ல கும்மாளம் போடறதுக்கா?'

அவள் கற்பனை.. அம்மா மீதிருந்த ஆத்திரத்தில் தீ வைத்து எரித்தது.

சொன்னது போலவே அன்றிரவு பத்தரை மணிக்கு வந்தாள்.

போட்டது போட்டபடி அவளுக்காகக் காத்திருந்தது வேலைகள்.

''சாப்பிட்டியா சவி?'' வழக்கம்போல் புத்தகத்துடன் அமர்ந்திருந்தவளிடம் கேட்டாள்.

''ம்!''

''பாத்திரமெல்லாம் அப்படியே கிடக்கு. கழுவி வைக்கக் கூடாதா?''

''.....?!''

''நீயும் சின்னப் பிள்ளை இல்லே சவி. வேலை செய்யக் கத்துக்க.''

''ஏன் லேட்டு?''

''ஜீவிதா வீட்டுக்குப் போய்ட்டு வந்தேன். கடவுள் புண்ணியத்தால அவ புகுந்த வீட்டு மனுஷங்க எல்லாரும்

நல்லவங்களா இருக்காங்க. உனக்கும் வீடு நிறைய மனுஷங்க இருக்கிற எடமா பார்த்துதான் கல்யாணம் பண்ணி வைப்பேன்!''

'அது சரி! உன் முகத்தைப் பார்த்தாலே தெரியுதே.. அசதிக்கு என்ன காரணம்னு! அந்நாள் வீட்ல கூத்தடிச்சிட்டு, ஜீவிதாவைப் பார்த்துட்டு வர்றேன்னு சப்பைக்கட்டு கட்டறியா?'

''என்ன சவி.. அப்படிப் பார்க்கிறே?''

''ஒண்ணுமில்லே!''

''நல்லா படிக்கிறேயில்லே? பொண்ணுங்களுக்குப் படிப்பு ரொம்ப முக்கியம்!''

''ம்.. படிக்கிறேன்!''

அடுத்து.. வீட்டு வேலையில் மூழ்கிப் போனாள். சாப்பிடப் பிடிக்கவில்லை. சம்பந்தி வீட்டில் சாப்பிட்ட டீயும் பிஸ்கட்டும் நெஞ்சுக்கு மேலே நின்று எட்டிப் பார்த்தது. தலையை சுவற்றில் இடித்துக் கொள்ளலாம்போல் வலித்தது. கண்களில் எரிச்சல்.. உள்ளுக்குள் உடம்பு கொதித்தது. நெஞ்சுப் பகுதி.. லேசாய் வலிக்க ஆரம்பித்தது.

இப்படி அடிக்கடி நெஞ்சு வலி வருவதைப் பார்த்து, ரஞ்சிதம் ஒருநாள் வலுக்கட்டாயமாக ஹாஸ்பிடலுக்கு அழைத்துச் சென்றாள்.

பலதரப்பட்ட டெஸ்ட்டையும் எடுத்துப் பார்த்து.. இதயப் பகுதியில் லேசாய் வீக்கம் இருப்பதை உறுதி செய்தார்கள். அதற்கான மாத்திரைகளை மெடிக்கல் ஷாப்பில் வாங்குமளவுக்கு அவள் பொருளாதாரம் உதவி செய்யவில்லை. அதனால் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்து.. அவர்கள் தந்த இலவச மாத்திரைகளை உட்கொள்ள ஆரம்பித்தாள்.

பிள்ளைகள் பயந்து விடுவார்கள் என்பதால், அதைச் சொல்லாமல் மறைத்து விட்டாள். சோர்வு அழுத்த.. அப்படியே சரிந்து பாயில் படுத்தாள்.

இருக்க இருக்க, காய்ச்சல் அதிகமானது. இதய வலியும் இம்சிக்க.. உள்ளறை ட்ராயரில் இருந்த மாத்திரைகளை யாராவது எடுத்துத் தந்தால் தேவலை என்றிருந்தது.

பன்னிரெண்டைத் தாண்டிய நள்ளிரவு. சவிதா செல்ஃபோனில் மித்ரனிடம் கிசுகிசுப்பாய்ப் பேசிக் கொண்டிருந்தாள். பரிமளாவால் நகர முடியவில்லை.



**திக்கெட்டும் தீபாவளி!**

முதன் முதலில் தீபாவளி கொண்டாடிய நாயகன் யார் தெரியுமா? நரகாசுரன் மகன் பகதத்தன். அவன் கொண்டாடிய தீபாவளிக்கு வந்த வி.வி.ஐ.பி கிருஷ்ண பகவான்!

''சவி.. சவிம்மா.. சவிதா..' முனகியபடி அழைத்தாள்.

பதிலில்லை.

''அம்மாடி.. சவி.. ம்மா.. முடியலியே.. சவிதா.. தூங்கிட்டியா?''

அம்மாவின் குரல் தெளிவாகவே காதில் விழுந்தாலும்.. அலட்சியப்படுத்தினாள் சவிதா.

வேறு வழியின்றி.. பரிமளா உட்கார்ந்தவாக்கிலேயே நகர்ந்து உள்ளறைக்குப் போனாள்.

**13**

**கா**லையில் ரொம்பவே சோர்ந்து போயிருந்தாள் பரிமளா.

''சவிதா..''

''ம்..''

''அம்மா நைட்டெல்லாம் உன்னை எழுப்பினேன்.''

''அப்படியா? படிச்சிட்டு லேட்டாத் தூங்கினேன். அதான் காதுல விழலை!''

''சரிடா.. அம்மாவுக்கு முடியல. டிஃபனும் லஞ்சும் வெளில சாப்பிட்டுக்கம்மா. இன்னைக்கு மட்டும்தான்! நைட்டுக்கு சமைச்சிடறேன். நான் இன்னைக்கு ஆஃபீஸ்க்குக் கூடப் போகலே!''

''அப்படியா.. சரி!''

அந்த பதில் பரிமளாவை வருத்தியது. 'உடம்புக்கு முடியலை' என்று சொல்லியும், ''என்ன உடம்புக்கு?'' என்று ஒரு வார்த்தை கேட்கத் தோணாதா? ஏன் இப்படி இருக்கிறாள்?

வருத்தமும் களைப்புமாய்.. மவுனமாய்க் கண் மூடி விட்டாள்.

சவிதா கல்லூரிக்குச் சென்று விட்டாள்.

அவள் சென்ற பத்தாவது நிமிடம் வாசலில் ஒரு கார் வந்து நின்றது.

படுத்திருந்த பரிமளாவுக்கு அந்த சப்தம் கேட்டாலும், 'நம் வீட்டுக்கு.. அதுவும் காரில் வருமளவுக்கு யார் இருக்கிறார்கள்? பக்கத்து வீட்டுக்காய் இருக்கும்' என்று நினைத்து முடிக்கவில்லை.. காலிங் பெல் அழைத்தது.

''யாரு?'' கேட்டபடி கதவைத் திறந்தவள், வாசலில் டிப்டாப்பாய், பெரிய மனிதத் தோரணையோடு மிடுக்காய் நின்றிருந்த அந்த நபரைப் பார்த்து நெற்றி சுருக்கினாள்.

கிட்டப் பார்வைக் கோளாறில் சிக்கியிருந்த பரிமளா, ''யாரு வேணும்?'' எனக் கேட்டாள்.

''என் பிள்ளைங்க!''

ஆணவத்துடன் வெளிப்பட்ட அந்த குரலைக் கேட்டு ஆடிப் போனாள். உற்றுப் பார்த்து மிரண்டாள்.

''நீ.. யா? உ... உனக்கெப்படி..? எங்கே வந்தே?''

''அதான் சொல்லிட்டேனே! என் பிள்ளைகளைப் பார்க்க வந்தேன். அ.... என்ன இப்படியாயிட்டே பரிமளா? சிக்னல்ல பிச்சை எடுக்கறவ மாதிரி..''

அந்த எகத்தாளமான கேலிப் பேச்சு நரம்பை சுண்டி இழுத்துப் போய் வலித்தது.

''வெளியே போ!''

''பின்னே? குடும்பம் நடத்தவா வந்தேன்? அந்தத் திமிர் இன்னும் உன்னை விட்டுப் போகல இல்லே? கூப்பிடு என் பிள்ளைங்களை..'' என்றபடி அவளைக் கடந்து உள்ளே நுழைந்தார்.

''இதோ பார்.. புதுசா சொந்தம் கொண்டாடிட்டு வந்தா.. அவங்க உன் பிள்ளைங்க ஆகிடுவாங்களா?''

''என்கூடப் படுத்துதானே பெத்தே?''

''ச்சீ..!''

''எனக்குத் தெரியாம என் பிள்ளைங்களைத் தூக்கிக்கிட்டு ஊரை விட்டு ஓடிப் போயிட்டே! தேடாத இடமில்லே! யுகா,



ஜீவிதா, சவிதா..'' அழைத்துக் கொண்டே கண்களைச் சுழல விட்டார்.

''மரியாதையாய் போயிடு! பிள்ளைகளை அப்ப நினைச்சுப் பார்த்திருந்தா.. பொம்பளைங்க பின்னாடி அலைஞ்சிருக்க மாட்டே! அவங்களை சொந்தம் கொண்டாட உனக்கெந்த உரிமையும் இல்லை. பாடுபட்டு வளர்த்தது நான்! புது மனைவி, புதுக் குடும்பம், குழந்தைகள்னு செட்டிலாயிட்ட பிறகு.. திடீர்னு என்ன பிள்ளைங்க பாசம்?''

''சினிமா டயலாக் எல்லாம் பேசாதே! என் குழந்தைங்க மேலே எனக்கு எப்பவும் பாசம் இருக்கவே செய்தது. நீதான்.. திருட்டுத்தனமா அதுங்களோட ஊரை விட்டு ஓடிட்டே!''

''நான் என் குழந்தைகளோட நிம்மதியா சந்தோஷமா இருக்கேன். நீ உன் குடும்பத்தோட சந்தோஷமா இரு! எதுக்கு இப்ப வந்து என் கூட்டுல கல்லெறியறே?''

''கல்லு மட்டுமா? தீயை வச்சு எரிக்கிறேன் பார்! கடைசியா என்ன சொல்லிட்டு வந்தே? 'நீ என் புருஷனே இல்லே! என் வாயால.. இந்த ஜென்மத்துல நீதான் என் புருஷன்னு சொல்லவே மாட்டேன். அப்படி சொன்னா நான் பத்தினியே இல்லே'ன்னு சொன்னேயில்லே? என் குழந்தைங்ககிட்டே அப்பன் செத்துட்டான்னு சொல்லிதான் வளர்த்திருக்கே! வருஷா வருஷம் திவசமும் பண்ணிட்டு வர்றே! கேள்விப்பட்டதிலேர்ந்து மனசுக்குள்ளே எரிஞ்சுக்கிட்டு இருக்கேன்டி. இந்த நெருப்புதான் உன் சந்தோஷத்துக்கு கொள்ளி வைக்கப் போகுது! பார்க்கறியா? என் குழந்தைகளை உன்கிட்டேர்ந்து பிரிக்கிறேன்..'' ஆவேசமும் ஆத்திரமுமாய் உறுமிய ரமணனின் கண்கள் சிவந்திருந்தன.

''நீ செஞ்ச துரோகத்துக்கு உன்னை எரிச்சிட்டு வந்திருக்கணும். விட்டுட்டு வந்தது தப்பு! உன்னால முடிஞ்சா செஞ்சு பார்! நான் அவங்களை அப்படி வளர்த்திருக்கேன். மரியாதையா வெளியே போ!''

''ஒன்னை யோசிக்க மறந்துட்டு என்கிட்டயே சவால் விடறியே! பிள்ளைங்களைப் பொறுத்தவரை நான் செத்தவன்! இதோ, இப்ப உயிரோட வந்து நிக்கறேன். அவங்ககிட்ட என்னை யார்னு சொல்லப் போறே?''

''.......?!''

அந்தக் கேள்வி அவளைத் தடுமாற வைத்து விட்டது.

'என்ன செய்யப் போகிறேன்?' மறுகி, மருண்டாள். ரமணன் சிம்மமாய் கர்ஜித்து, வார்த்தைகளை நெருப்பாய் அள்ளிக் கொட்டி விட்டுச் சென்றார்.

வீட்டில் செல்ஃபோனை மறந்து வைத்து விட்டுச் சென்ற சவிதா, அதை எடுப்பதற்காக வீட்டை நோக்கி வந்து கொண்டிருந்தாள்.

வீட்டுக்குள்ளிருந்து வெளிப்பட்ட ஒரு ஆண், வேகமாய் காரில் ஏறி, சர்ரென புறப்பட.. கால்கள் அதற்கு மேல் நடக்காமல் பின்னலிட்டது.

'யாரிது? லீவு போட்டு, வீட்டுக்கு வர வைத்துப் பேசுமளவுக்கு.. யாரிந்த நபர்? திருவள்ளூர் ஆளா?' குழப்பமும் வெறுப்புமாய், வீட்டுக்குச் செல்லாமல் மறுபடி வந்த வழியே நடக்க ஆரம்பித்தாள் சவிதா.

சவிதாவுக்கு எதிலுமே கவனம் செல்லவில்லை. அம்மா இந்த அளவு மட்டமான கேரக்டராய் இருப்பாள் என்பதை ஜீரணிக்க முடியவில்லை.

மித்ரனுக்கு ஃபோன் செய்து.. தன் செல்ஃபோனுக்கு ஃபோன் பண்ண வேண்டாம் என்று சொல்லி விட்டாள். அவளுக்கு அவன்தான் தினம் நூறு முறையாவது ஃபோன் பண்ணுவான். வீட்டில் இருக்கும் ஃபோனை சத்தம் கேட்டு அம்மா எடுத்து விடக் கூடும். மித்ரனைப் பற்றி இப்போது அவள் அறிந்து கொண்டு கேட்டாலும் தைரியமாக எதிர்கொள்வாள்தான். ஆனால், அவளுக்கு இன்னும் பெரிய வலியோடு தெரிவிக்க வேண்டும் என்று வன்மமாய் நினைத்தாள்.. அந்த நாளுக்காகக் காத்திருக்கிறாள்.

வகுப்பில் கவனம் சிதறியது. கசமுசாவென சிந்தனைக் குழப்பத்தின் நடுவே.. பணியாளர் ஒருவர், பாடம் நடத்திக் கொண்டிருந்த லெக்சரரிடம் தெரிவித்தார்.

''சவிதாவைப் பார்க்க.. அவங்க ஃபாதர் வந்திருக்கிறார். வெய்ட்டிங் ஹால்ல இருக்கார்!''

கேட்ட சவிதாவுக்கு, உடல் முழுக்க மின்சாரம் பரவியது. கை ரோமங்கள் குத்திட்டு நின்றன.

'அப்பாவா?'

வேகமாய் வெளியேறி தடதடவென ஓடினாள்.

'அப்பா.. என் அப்பா! எப்படி இருப்பார்? நான் இங்கே படிப்பது எப்படித் தெரியும்? யசோதா அத்தைதான் சொல்லியிருப்பாள்!''

வெய்ட்டிங் ஹாலில் உட்காராமல் அவள் வருகையை



**திக்கெட்டும் தீபாவளி!**

தீபாவளியின் வெவ்வேறு பெயர்கள்..
தாய்லாந்தில் - லாயகிரதோங், ஜப்பானில் - போநாநாகாக, பர்மாவில் - தாங்கிரி, ஸ்வீடனில் - லூசியா, சீனாவில் - நக்பீகீபர், இங்கிலாந்தில் - கையாக்ஸ்

எதிர்பார்த்து இங்குமங்கும் நடந்து கொண்டிருந்த அந்த மனிதரைப் பார்த்ததும்.. ஆச்சர்யத்தில் கண்கள் பிதுங்கின.

'இவரா? காலையில் வீட்டுக்கு வந்தவர் அப்பாவா?'

தன்னை நோக்கி வந்த பெண்ணை கேள்வியுடன் பார்த்தார் ரமணன்.

''சவிதா?''

''ம்'.. என்று தலையாட்டிய சவிதாவுக்கு, கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்தது.

''மகளே.. என் கண்ணே!'' கைகளை விரிக்க.. அது நாள் வரை பார்த்தேயிராத, ஒரு பருக்கைகூடத் தராத தகப்பன் மீது.. சேமித்து வைத்திருந்த பாசத்தை எல்லாம்.. அவர் நெஞ்சின் மீது சாய்ந்து கண்ணீராய்க் கொட்டினாள்.

''அப்பா.. அப்பா.. இத்தனை வருஷமா எங்கேப்பா இருந்தீங்க? அத்தை மூலமாத்தான் நீங்க உயிரோட இருக்கிற விஷயமே தெரியும். இப்ப.. இப்ப எனக்கு வானத்துல பறக்கணும் போலயிருக்குப்பா! ஏன்ப்பா எங்களை விட்டுட்டுப் போனீங்க?''

''நான் எங்கேம்மா விட்டுட்டுப் போனேன்? யாரையோ நம்பி, என் கண்ல மண்ணைத் தூவி, என்னை அனாதையாக்கிட்டு, என் குழந்தைங்களைத் தூக்கிட்டுப் போய்ட்டா! எத்தனை வருஷமா உங்களைத் தேடியிருப்பேன்?'' ரமணன் உடல் குலுங்க அழுதார்.

சவிதா இறுக்கத்துடன் அப்பாவைப் பார்த்தாள்.

**14**

''என்னை அவ புருஷன்னு ஏத்துக்க மாட்டாளாம். வாய் திறந்து சொல்ல மாட்டாளாம். ஏன்னு எனக்குத் தெரியும். ஆனா ஒரு புருஷன்காரனை பொண்டாட்டி என்ன

வேணாலும் பேசலாம். பழி போடலாம், ஆனா பொண்டாட்டி மேலே.. அது உண்மையா இருந்தாலும்கூட புருஷன்காரன் பேசக் கூடாது. அது தர்மமும் இல்ல..

ஆனா, ஆனா, என் புள்ளைங்ககிட்டேயே.. அப்பா செத்துட்டார்னு சொல்ல.. எவ்ளோ தைரியம் இருக்கணும். ஈவிரக்கம் இல்லாத ராட்சஷி குணம் உள்ளவங்களால மட்டும்தான் இப்படியெல்லாம் நடந்துக்க முடியும். அவளை விட்டுத் தள்ளு! மத்த ரெண்டு பேரையாவது ஓரளவு தூக்கிக் கொஞ்சியிருக்கேன். ஆனா, நீ ரெண்டு மாசக் குழந்தையா இருந்தப்பதான் இந்த அப்பன்கிட்டேர்ந்து பிரிச்சிட்டா பாதகி!

அக்கா வந்து சொன்னதுமே எவ்ளோ சந்தோஷப்பட்டேன் தெரியுமா? ஓடி வந்துட்டேன். உன்னைப் பத்தி, ஜீவிதா பத்தி, யுகேந்திரன் பத்தி விசாரிக்க ஆரம்பிச்சேன். எல்லாரையும் கண்டும் பிடிச்சேன்''

''நிஜமாவா.. இப்ப யுகா அண்ணன்..?!''

''அவன் குடும்பத்தோட திருச்சியில் இருக்கான்ம்மா! பார்த்தேன். சந்தோஷப்பட்டான். லவ் பண்றது அவ்ளோ பெரிய தப்பா? என் பிள்ளைய இப்படி ஒதுக்கி வச்சிருக்கா?''

''.....?!''

''ஜீவிதாவை தடால்னு போய் பார்த்து, 'நான்தான் உன் அப்பா'ன்னு சொல்லிட முடியாது. புகுந்த வீட்ல எப்படி எடுத்துப்பாங்கன்னு தெரியல. அடுத்த வாரம் பார்த்துக்கலாம்னு இருந்துட்டேன்.

அப்றம்.. மித்ரனைப் பத்தியும் விசாரிச்சிட்டேன். நல்ல பையன்தான்.. கவலைப்படாதே..! நான் உங்க கல்யாணத்தைப் பிரம்மாதமா நடத்தி வைக்கிறேன்.''

''அப்..பா! மி.. மித்ரனைப் பத்தி..''

''எல்லாமே தெரியும். லவ் பண்றது தப்பில்லை சவிதா! என் குழந்தைங்க மேலே எனக்கில்லாத அக்கறை வேற யாருக்கு? டிடெக்டிவ் ஏஜென்சி மூலமா தெரிஞ்சுக்கிட்டேன். ஆங்.. இன்னொண்ணு! உனக்கு ஒரு தங்கையும் தம்பியும் அம்மாவும் இருக்காங்க. அவங்கள்லாம் உங்க அத்தனை பேரையும் பார்க்க ஆசையா காத்துக்கிட்டிருக்காங்க. சீக்கிரமா நாமெல்லாம் ஒரே குடும்பமா ஆகணும் சவிம்மா!''

''அப்படியா.. சரிப்பா!''

''அப்பா வசதியா இருக்கேன். உன் கல்யாணத்தை



எப்படி நடத்தறேன் பாரு..!''

ரமணன் பேசப் பேச.. மெஸ்மரிசத்தில் ஆட்பட்டவள் போல் மயங்கிப் போனாள்.

அம்மாவின் மீதான வெறுப்பு உச்சத்துக்குப் போனது.

'எப்படி.. எப்படி அவனுக்குத் தெரிந்தது? வீட்டை எப்படி கண்டுபிடித்தான்? வீட்டைக் கண்டுபிடித்ததுபோல், ஜீவிதா புகுந்த வீட்டையும் சவிதா காலேஜையும் தெரிந்து கொண்டு, அவர்களைப் பார்த்து விடுவானோ? கடவுளே..!' பரிமளாவின் ரத்தம் உலையிலிட்ட நீராய்க் கொதித்தது.

'பிள்ளைகளைத் தன் பக்கம் ஈர்க்க, தப்புத் தப்பாய் என்னைப் பற்றிச் சொல்வானோ? அப்படியே சொன்னாலும்.. என் குழந்தைகள் நம்பப் போவதில்லை. என்னைப் பற்றி அறியாதவர்களா அவர்கள்?

ஆனால், பெற்றவன் செத்துப் போய் விட்டான் என்று நம்ப வைத்து, வருஷா வருஷம் திவசம் பண்ணியதை எப்படி எடுத்துக் கொள்வார்கள்? பார்ப்போம்.. எதுவாயிருந்தாலும் சொல்லிப் புரிய வைப்போம். அவர்களுக்குத் தெரியும்போது தெரியட்டும்.

அந்தச் சண்டாளன் மறுபடி இங்கு வருவானோ? சவிதா இருக்கும்போது வந்து விட்டால்? சும்மாவே அப்பாவை நினைத்து அழுபவள். நேரில் கண்டால்? எவ்வளவு சீக்கிரம் முடியுமோ, அவ்வளவு சீக்கிரம் இந்த வீட்டை விற்று, வேறு இடம் பார்த்து ஆவடி, அம்பத்தூர், பட்டாபிராம் என்று போய் விட வேண்டும்.' யோசித்து, யோசித்து மேலும் உடல் குன்றியது.

ஒரு வாரம் கடந்தது. அதுவரை ரமணன் வந்ததாய்த் தெரியவில்லை. ஒருவேளை.. வீடு பூட்டியிருப்பதைப் பார்த்து, போய் விட்டிருக்கலாம்.

சவிதா இயல்பாய் இருக்க முயற்சித்தாள். கடப்பாரையை விழுங்கிய வளைப்போல் வளைய வந்த அம்மாவைக் காண்கையில், ஆத்திரம் பொங்கி வந்தது. தினமும் ஒரு செம்பருத்திப் பூவை அப்பாவின் படத்துக்கு ஜீவிதா வைப்பது வழக்கம். அவள் திருமணமாகிச் சென்ற பிறகு, பரிமளா வைத்து வந்தாள். இப்போதும் அவள் அப்பாவின் ஃபோட்டோவுக்குப் பூ வைப்பதைக் கண்டு ரத்தம் கொதித்தது.

'இப்பேர்ப்பட்ட ராட்சஷியா நீ?'

கிச்சனில் சாம்பார் கொதிக்கும் வாசனை! பாத்ரூமில்

குளித்துக் கொண்டிருந்த பரிமளா குரல் கொடுத்தாள்.

''சவிதா.. சவி..''

'ம்.. என்ன?''

''சாம்பார்ல தாளிச்சுக் கொட்டி இறக்கி வச்சிடேன்''

''சரி!''

சின்ன கடாயை ஸ்டவ்வில் வைத்து எண்ணெய் ஊற்றினாள். காய்ந்ததும் கடுகு, சீரகத்தைப் போட்டவள்.. அது பொரிகிற வாசனைக்கு, குமட்டுவதுபோல் உணர்ந்தாள். கூட சாம்பார் வாசனை வேறு! என்றுமில்லாமல் அடிவயிறுவரை ஊடுருவி.. அங்கிருந்த அத்தனையும் தொண்டைக்கு சுமந்து வர.. ''உவ்வே..'' என்று பெரிய சத்தத்துடன் வாசலுக்கு ஓடி வந்தாள்.

செம்பருத்திச் செடியோரம்.. அத்தனையும் கடகடவெனக் கொட்டினாள். சப்தம் கேட்டுப் பதறிப் போன பரிமளா.. அரக்கப் பரக்க உடையை அணிந்து கொண்டு ஓடி வந்தாள்.

''சவிதா.. சவிதா என்னாச்சு?'' மகளின் தலையைப் பற்றிக் கொண்டாள்.

''என்னம்மா.. உடம்புக்கு முடியலையா? காய்ச்சல்கூட இல்லையே! தலை வலிக்குதா? இன்னும் டிஃபன்கூட சாப்பிடலையே! காலையில் குடிச்ச டீ மட்டும்தான் வந்திருக்கு.. இரு! தண்ணி எடுத்துட்டு வர்றேன்.''

ஓடிப் போய், சொம்பில் தண்ணீரை எடுத்து வந்த பரிமளாவுக்கு.. சின்னச் சின்னக் குழப்பங்கள் போட்டியிட்டன.

வீட்டுக்கு விலக்காகும் சமயங்களில் பெண்கள் இருவரும் எந்தப் பாத்திர பண்டத்தையும் தொடக் கூடாது. ஒதுங்கியே இருக்க வேண்டுமென்பது பரிமளாவின் கடுமையான உத்தரவு. 'மாதாமாதம் சரியாய் உட்கார்ந்து விடும் சவிதா.. இரண்டு மாதத்துக்கு மேலாகியும்..' நினைப்பே அவளை ஒரு புரட்டுப் புரட்ட.. அவளிடம் சொம்பை நீட்டினாள்.

முகம் வெளுத்து, கண்கள் சோர்ந்து, ஏதோ ஒரு ரகசியம் அவள் செயலில் ஒளிந்திருக்க..

தண்ணீரை குடித்து விட்டு உள்ளே வந்தாள் சவிதா.

''நில்லு!''



**திக்கெட்டும் தீபாவளி!**

நேபாளத்தில் தீபாவளியை உழவர் பண்டிகையாக ஐந்து நாட்கள் கொண்டாடுகிறார்கள்.

''.......?!''

''ஏன் வாந்தி எடுத்தே?''

''தெரியலே..''

''ரெண்டு மாசமா உனக்கு பீரியட்ஸ் ஆகவே இல்லே?''

''ஆமா!''

''ஏன்?''

''தெரியலை!'' அமர்த்தலாய் வந்தது குரல்.

''ஏய்.. உண்மையைச் சொல்.. எனக்குத் தெரியாம தப்பு ஏதும் பண்ணிட்டியா? ஏன் வாந்தி எடுத்தே?''

''டீயில பூச்சி கீச்சி விழுந்திருக்கும்!''

''டீயில பூச்சியா, இல்ல வயித்துல புள்ளையா?''

''அப்படிக்கூட இருக்கலாம்!'' அசராமல், ஆணவத்துடன் பதிலளித்தாள்.

அவள் காத்திருந்தது இப்படியொரு நாளுக்காகத்தானே?

அவள் பதிலில் வெளிப்பட்ட உண்மை, பரிமளாவை நடுங்க வைத்தது. பயமும் ஆத்திரமுமாய் வெறியேறியவள், சவிதாவை கண் மண் தெரியாமல் அடிக்க ஆரம்பித்தாள்.

''அடிப் பாவி.. எவ்ளோ திமிர் இருந்தா இப்பேர்ப்பட்ட காரியத்தைப் பண்ணியிருப்பே.. உன்னை.. சாகடிக்காம விட மாட்டேன். செத்து ஒழி.. செத்து ஒழி!''

அடியில் கன்னங்கள் பழுத்தது. நெறித்ததில் கழுத்து சிவந்தது. முறித்ததில் கைகள் வலித்தது.

ஒரு கட்டத்தில் பொறுக்க மாட்டாமல், சவிதா, அம்மாவின் கையைத் தடுத்து.. ஓங்கி அவள் கன்னத்தில் அறைந்தாள்.

**15**

சப்த நாடியும் ஒடுங்கிப் போனாள். ஒரே அடியில் தள்ளாடி சேரில் விழுந்தாள் பரிமளா. கண்கள் சிவக்க, கன்னத்தில்

வழியும் நீருடன் வெறியுடன் கத்தினாள் சவிதா.

''இதுக்கு மேலே.. ஒரு அடி.. ஒரே ஒரு அடி என் மேலே விழுந்துச்சோ.. பண்ணக் கூடாததையும் பண்ணுவேன்!''

''ச..வி..தா!''

''என்னை அடிக்க உனக்கு என்ன தகுதியிருக்கு? நெஞ்சுல கை வச்சு சொல்லு.. இருக்கா?''

''..........?!''

''உன்னைப் பத்தி எனக்கு எதுவும் தெரியாதுன்னு நினைச்சிட்டிருக்கியா? இத்தனை வருஷம் நீ போட்டது பத்தினி வேஷம்!''

''ச..வி..'' துடித்துப் போனாள்.

''இந்தக் குடும்பம் நடத்த முருங்கைக்காயை மட்டுமா வித்தே? உன் உடம்பையும்தானே?''

''ஐய்யோ..!''

''டிவியில் லவ் சாங்ஸ் பார்க்கக் கூடாது, ஃப்ரண்ட்ஸ்கிட்டே பேசக்கூடாது, நல்ல ட்ரஸ் உடுத்தக் கூடாது, யாரும் லவ் பண்ணக் கூடாது. ஆனா, இந்த வயசுலேயும் நீ காதலிக்கலாம்!''

''.....?!''

நெஞ்சடைத்தது.

''லவ் பண்ணி கல்யாணம் பண்ணிக்கிட்டான்ங்கற ஒரே காரணத்துக்காக எங்க அண்ணனை தலை முழுகினே? அப்ப நாங்க உன்னை என்ன செய்யறது?

எங்களுக்காகவே வாழ்ந்தா மாதிரி உலகத்துக்குக் காட்டிக்கிட்டே! தினமும் திருவள்ளூர்ல கள்ளக் காதலனோட கொஞ்சிட்டு வர்றியே.. அது என்ன வாழ்க்கை?''

கசக்கிப் பிழிந்த இதயத்தின் வலி தாளாமல் பரிமளாவின் கண்களில் நீர் பெருக்கோடியது. அவள் உடம்பிலிருந்த அத்தனை சக்தியையும் சவிதாவின் சம்மட்டி வார்த்தைகள் நொறுக்கிக் கொண்டிருந்தன.

''எல்லாத்துக்கும் மேலே.. எந்தப் பொம்பளையும் செய்யத் துணியாததையும் செய்தே! புருஷன் உயிரோடு இருக்கும்போதே.. விதவை வேஷம் போட்டே! இத்தனை



வருஷமா திவசம் பண்ணினே! பூவையும் பொட்டையும் தூக்கிப் போட்டே! அப்ப எவ்வளவு கல்நெஞ்சக்காரியா இருந்திருப்பே! எங்களையும் அப்பா இறந்துட்டார்னு நம்ப வச்சு, பாவத்தை சுமக்க வச்சிட்டியே!''

மகளின் ஆக்ரோஷத்தின் முன் தவிடுபொடியானாள் பரிமளா. வாழ்க்கையின் தான் பட்ட அடி! தன்னை முழுக்கவே தவறாகப் புரிந்து கொண்ட மகள்! இவளிடம் பேசி எதையும் புரிய வைக்க முடியாமல், அவமானத்தில் சிறுத்து மவுனமாய்க் கண்ணீர் வடித்தாள். அவளால் அந்த நேரத்தில் அதுதான் செய்ய முடிந்தது.

பேச வேண்டிய நிமிடங்களில் அமைதியாக இருந்து விட்டால், அமைதியான நிமிடங்களில் நிம்மதியாக இருக்க முடியாது.

தான் கண்டிப்பும் கறாருமாய் வளர்த்த பெண் கைநீட்டி அடித்ததை அந்தத் தாயால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. எவ்வளவு வெறுப்பிருந்தால்.. அடித்திருப்பாள்? மகளின் செயல் தாயை சவமாக்கி விட்டது. உணர்வுகள் உடலை விட்டு விலகிப் போனது போல்.. சலனமற்று, தொய்ந்து போயிருந்தாள்.

''நீ இஷ்டப்பட்ட வாழ்க்கையை வாழ, எங்களை அப்பா இல்லாம கஷ்டப்பட வச்சிட்டே! உன் கேரக்டர் எவ்வளவு மோசமானதுனு கொஞ்ச நாளாகவே எனக்குத் தெரியும். உன்னோட முழு வேஷமும் தெரிஞ்சது என் அப்பா சொல்லித்தான்!''

''.....?!''

பரிமளா அதிர்ந்து நொறுங்கினாள்.

''இதோ பார்.. இனி நான் உன்னோட இருக்க மாட்டேன். எனக்குன்னு ஒரு வாழ்க்கையை நான் தேடிக்கிட்டாச்சு. நான் ஒண்ணும் திமிரெடுத்து கர்ப்பமாகலே. நானும், நான் நேசிக்கிற மித்ரனும் மூணு மாசத்துக்கு முந்தியே ரிஜிஸ்டர் மேரேஜ் பண்ணிக்கிட்டோம்.''

''.......?!''

பெற்றவளால் அதற்கு மேல் அதிர்ச்சிகளைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. நெஞ்சில் ரணம் உற்பத்தியாக.. ரொம்பவே சோர்வுடன் சாய்ந்து கொண்டாள். கண்கள் மெல்ல மூடித் திறந்தன.

''என் அப்பா இனி எங்களைப் பார்த்துப்பார். உன் அசிங்கமான தயவு எனக்குத் தேவையில்லை.

யுகேந்திரனையும் என் அப்பா தேடிக் கண்டுபிடிச்சிட்டார். ஜீவிதா உன் மேல எவ்ளோ மரியாதை வச்சிருந்தா? உன்னைப் பத்தின உண்மைகள் தெரிஞ்சா காறித் துப்ப மாட்டா? அப்பா உயிரோட இருக்கிற ஒரு விஷயம் போதுமே! சொல்லத்தான் போறேன்..! உன்னை மாதிரி ஒருத்தி இந்த வீட்டுக்கு மட்டுமில்ல.. நாட்டுக்கே கேடு! ச்சீ..!''

அதுநாள்வரை அம்மா மீது சேர்த்து வைத்திருந்த அத்தனை வன்மங்களையும் கொட்டினாள். வேக வேகமாய் உடையணிந்து, அறையை விட்டு வெளியே வந்தாள். ஜீவிதாவுக்கு ஃபோனைப் போட்டாள்.

''ஜீவி.. நான்தான்! உன்கிட்டே அர்ஜன்ட்டா பேசணும்.. நேர்ல வர்றேன்.. ஒருநாள் லீவு போட்ரு!''

''......?!''

''பரவாயில்லே ஜீவி.. ஆஃபீஸை விடவும் முக்கியமான விஷயம்.. சரி.. வீட்டுக்கு வர்றேன்!''

சுவற்றை வெறித்துப் பார்த்து அமர்ந்திருந்த பரிமளாவை வெறுப்பாய் நோக்கி விட்டு.. வெளியேறினாள்.

அதேசமயம்.. அதுவரை அடங்கியிருந்த அழுகை, கேவலாய் வெளிப்பட்டு, ஓவென கதறலாய் மாறியது பரிமளாவிற்கு.

''**வா**.. உள்ளே வா சவி!''

திருமணமான பூரிப்பில், கன்னக் கதுப்புகள் செழுமை ஏறி, மேலும் அழகாகியிருந்தாள் ஜீவிதா.

''வீட்ல யாருமில்லையா?'' சுற்றுமுற்றும் பார்த்தாள்.

''அவர் கடைக்குப் போய்ட்டார். மத்த எல்லாருமே ஒரு கல்யாணத்துக்காக நேத்தே திருவண்ணாமலை போய்ட்டாங்க. நான் ஆஃபீஸ்க்குக் கிளம்பிட்டிருந்தேன். அப்பதான் உன் ஃபோன்.. அப்படியென்ன விஷயம்? முகமெல்லாம் ஒரு மாதிரியா இருக்கு.. சாப்ட்டியா?''

''இல்லே ஜீவி.. வீட்ல பிரச்னை!''

''என்னாச்சு?''


''அம்மா என்னை அடிச்சிட்டா!''

''அதென்ன மரியாதையில்லாம அடிச்சிட்டா



## திக்கெட்டும் தீபாவளி!

உத்தரப்பிரதேசத்தில் தீபாவளியை ஐந்து தினங்கள் கொண்டாடுகிறார்கள். தனத்ரயோதஷி, ரூப் சதுர்தஷி, லக்ஷ்மி பூஜை, கோவர்த்தன பூஜை, பய் ஃபோடா என்று ஒவ்வொரு நாளையும் சிறப்புடன் கொண்டாடுகிறார்கள்.



அப்படிங்கறே?'' சுர்ரெனக் கோபம் வந்தது.

''அவளுக்கெல்லாம் மரியாதை ஒரு கேடா?''

''சவிதா.. இது சரியில்லே!''

''அதை உன் அம்மாகிட்டே போய்ச் சொல்லு.. அம்மா நீ சரியில்லேன்னு..!''

''வேணாம்.. நிறுத்திக்க..!''

''நீயேன் என் மேலே கோப்படறே? இப்ப நான் சொல்லப் போற விஷயங்களைக் கேட்டா, அந்தப் பொம்பளைய உன் செருப்பால அடிச்சிட்டு வருவே!''

''சவிதா.. உன் லிமிட்டைத் தாண்டறே!'' கோபத்தில் ஜீவிதாவின் முகம் சிவந்தது.

''இப்ப நான் என்ன உங்கிட்ட சண்டை போடவா வந்தேன்? என் மேல கோபப்படறே? நமக்கு அந்தப் பொம்பளை துரோகம் பண்ணிடுச்சு.''

''.......?!''

''ஒரு விஷயம் சொன்னா வானத்துக்கும் பூமிக்கும் குதிப்பே ஜீவிக்கா. நம்ம அப்பா சாகலே. உயிரோடதான் இருக்கார்.''

''தெரியும்!'' என்றாள் வியக்காமல்.

அந்த பதிலில் அதிர்ந்தவள் சவிதாதான்.

''எ.. எப்படி.. எப்ப?''

''அப்புறம் சொல்றேன்.. மேலே சொல்லு!''

''அப்பா என்னை காலேஜ்ல வந்து பார்த்தார். நிறையப் பேசினார்.. நமக்கு விடிவு காலம் பிறந்திடுச்சு ஜீவி. அப்பா செத்துட்டார்னு இத்தனை வருஷம் திவசம் பண்ணியிருக்கா. எப்படி மனசு வரும்? வந்திருக்கே! கள்ளக் காதலன் மேலே உள்ள மோகம்.. என்ன வேணாலும் பண்ணுவா!''

''சவி!'' அதட்டினாள்.

''ஆமாங்க்கா! அவ நல்லவ இல்லே. திருவள்ளூர்ல பார்ட் டைமா வேலைக்குப் போறதா நம்பிட்டிருந்தோமே.. அவ போனது வேலைக்கு இல்லை.. வயசான ஒரு ஆளோட குடும்பம் நடத்திட்டிருக்கா. இதுக்கான வீடியோ ஆதாரம் என்கிட்ட இருக்கு!''

''அடிப் பாவி!''

## 16

''இப்படிப்பட்டவளுக்கு ஒரு அடி தர வேண்டாம்? கட்டுப்பாடு, கட்டுப்பாடுன்னு நம்மளோட சின்னச் சின்ன சந்தோஷத்தையெல்லாம் அனுபவிக்க விடாம கட்டுப் பொசுக்கி, தான் மட்டும் அயோக்கியத் தனமெல்லாம் பண்ணினவளோட மனசை சுட்டுப் பொசுக்க வேணாமா? அதனாலதான் மூணு மாசம் முன்னாடியே நானும் மித்ரனும் ரிஜிஸ்டர் மேரேஜ் பண்ணிக்கிட்டோம்..''

''ச..வி..தா!'' மூச்சு விடவும் மறந்து திகைத்தாள் ஜீவிதா.

''இப்ப.. நான் ப்ரக்னன்ட்டா இருக்கேன்!''

''ஐய்யோ..!''

''நீயேன் அலர்றே? அந்தப் பொம்பளை அலறணும்னுதான் நான் இப்படி ஆனதே! அதனால வந்த பிரச்சனையிலதான்.. என்னை அடிச்சிடுச்சு சனியன். ஆனா.. நான் சும்மா விட்ருவேனா?''

''எ.. என்ன பண்ணினே?''

''திருப்பி அடிச்சேன்.. நாக்கைப் பிடுங்கிக்கற மாதிரி எல்லாத்தையும் கேட்டுட்டுத்தான் வந்தேன்!''

''என்ன காரியம் பண்ணிட்டே? அம்மாவைப் போய்.. ஐய்யோ.. உனக்கென்ன பேயா பிடிச்சிருக்கு? நமக்காக மெழுகுவர்த்தியா கரைஞ்சு உருகுனவங்களை.. அவங்க மேல போய் அழுக்கைப் பூசிட்டு வந்திருக்கியே.. உருப்படுவியா.. உருப்படுவியா நீ?'' ஆத்திரம் தாளாமல் அழுது கொண்டே தங்கையை அறைந்து தள்ளினாள் ஜீவிதா.

அவள் கையைப் பிடித்து தள்ளி விட்டாள்.

''ஏய்.. நிறுத்து.. ஆளாளுக்கு அடிக்கறீங்க! பெத்தவளப் பத்திய உண்மையச் சொல்றேன்.. அவளைப் போய்க் கேள்வி கேக்காம என்னையே அடிக்கிறே?''

''எதுடி உண்மை? அம்மாவைப் பத்தி உனக்கென்னடி தெரியும்? எனக்குத் தெரியும்.. எல்லாமே தெரியும். புதுசா உரிமை கொண்டாடறியே அப்பான்னு! அந்த ஆள் என் முன்னாடி வந்தான்னா.. செருப்பாலயே அடிச்சி விரட்டுவேன்!''

''ஏ..ய்!''

''மித்ரன் படம் புடிச்சிக் காட்டிட்டானாம்.. இவளும் நம்பிட்டாளாம். எல்லாத்தையும் வெளியே இருந்து மட்டுமே பார்த்து எடை போட்றக் கூடாது. உள்ளே போய்ப் பார்! அம்மாவோட கடுமையான நடவடிக்கை மட்டும்தானே தெரியும்? அவங்க உள் மனசை நான் பார்த்தேன். ரத்தமும் சீழுமா புண்ணாகி.. நினைவுகளே சுமைகளாகி.. வாழ்ந்த வாழ்க்கை இருக்கே? அது தெரியுமா உனக்கு? அம்மாவுக்கு நல்லா கவிதை எழுதத் தெரியும். அது தெரியுமா உனக்கு? அந்த மாதிரி டைரி முழுக்க.. தன் வாழ்க்கையில் தான் பட்ட வலிகளை எழுதியிருந்தாங்க.

ஒருமுறை வீடு சுத்தம் பண்ணும்போது.. பரண்ல ஒரு பெட்டியில, புத்தகங்களோட மறைஞ்சிருந்த டைரிய அம்மாவுக்குத் தெரியாம படிச்சேன். அப்பத்தான் நமக்குத் தெரியாத ஒரு புது அம்மாவைப் பார்த்தேன். அதுக்குப் பிறகுதான் நான் அம்மாவுக்குப் பிடிக்காத காதலைக் கைவிட்டேன்.''

''என்ன சொல்றே.. புரியலே?!''

''சொல்றேன்.. எல்லாத்தையும்!''

தர்மபுரி மாவட்டத்திலுள்ள சின்ன கிராமமான ஏரியூரில் தன் ஒன்றுவிட்ட மாமா இறந்ததற்காக துக்கம் விசாரிக்க வந்திருந்த ரமணன்.. நான்கைந்து நாட்கள் அங்கேயே தங்கியிருந்தான். சென்னைவாசியான இருபத்தியிரண்டு வயது ரமணனுக்கு கிராமத்து வாசம் பிடிக்கவில்லை. முக்கியமாய், முகத்தில் எண்ணெய் வழிய, இறுக்கிப் பின்னலிட்டு களத்து மேட்டு வேலைக்குச் சென்ற இளங்குமரிகளை சுத்தமாய்ப் பிடிக்கவில்லை. அப்போது ரமணன் பிரஸிடென்ஸியில் பி.ஏ. இறுதியாண்டு படித்துக் கொண்டிருந்தான்.

போர் அடிக்கவே.. ஒரு மாற்றத்துக்காக பென்னாகரம் டவுனுக்கு வந்தான். சுற்றும் முற்றும் பார்த்தவன் ஒரு சிகரெட்டைப் பற்ற வைக்க.. ஒரு பேருந்து உறுமிக் கொண்டு இவனைக் கடந்து போக.. வழிவிட்டு ஒதுங்கியவன் காலடியில் ஒரு நோட்டு

வந்து விழுந்தது.

பஸ்ஸிலிருந்து யாரோ தவற விட்டிருக்கிறார்கள் என்பது புரிய.. எடுத்துக்கொண்டு பின்னாலேயே ஓடினான்.

'முதுகம்பட்டி' என்ற போர்டை மாட்டியிருந்த பஸ்.. வேகமெடுத்து, போயே போய் விட்டது. சும்மா புரட்டிப் பார்த்தான். அழகான கையெழுத்தில் பெண்ணின் பெயர் கண்ணில் அறைய.. சுவாரஸ்யமானான்.

பி.காம்!

இந்தப் பட்டிக்காட்டில் கல்லூரிக்குச் செல்லும் பாவையா? மேலும் புரட்ட.. நடுப் பக்கத்தில் நாலு வரிக் கவிதை ஈர்த்தது.

'உன்னிடம் பத்து விரல்கள் இருந்தும்
என் விரல்களையும் சேர்க்கிறாய்!
உன்னிடம் ஓர் இதயம் இருந்தும்
என்னிடம் இதயம் கேட்கிறாய்!''

''வாவ்'' மெலிதாய் விசிலடித்தான் ரமணன்!

அதன் பிறகு நடந்தவையெல்லாம்.. சுவாரஸ்யமானவை!

நோட்டுப் புத்தகத்துக்கு சொந்தக்காரியான பரிமளா, மறுநாள் தன் நோட்டை பஸ் நிலையத்தில் தேட.. அதை யூகித்து வந்திருந்த ரமணன்.. நோட்டைத் தர.. அவளின் பளிங்கு மாதிரியான அழகில் மயங்கினான்.

அப்போதே தீர்மானித்தும் விட்டான்.

'எப்படியாவது இவளை காதலித்து, ஊர், உறவுகளை எதிர்த்து கல்யாணமும் செய்ய வேண்டும்!'

''நன்றி'' சொன்ன பரிமளாவுக்கும் முதல் பார்வையிலேயே அவனைப் பிடித்துப் போக, நட்பு வளர்ந்தது. ரமணன் மெட்ராஸ்க்கு சென்ற பிறகும் பெண் பெயரில் கடிதம் எழுதினான். பரிமளா வீட்டில் அவளைத் தவிர படித்தவர்கள் வேறு யாரும் இல்லாததால்.. தடையில்லாமல் காதல் வளர்ந்தது. ரமணன் படிப்பை முடித்ததும் ஒரு வேலையில் அமர்ந்தான். அந்த தைரியம் பரிமளாவை அவனுடன் ஓட வைத்தது. இரு குடும்பத்தினரும் ஒதுக்கி வைத்து அவர்களை தலை முழுகினர்.



## திக்கெட்டும் தீபாவளி!

இமாசலப் பிரதேசத்தில் தீபாவளி அன்று வர்ணம் பூசப்பட்ட மண்பாண்டங்களை ஒருவருக்கொருவர் பரிசாகக் கொடுக்கிறார்கள்.

எதற்கும் கவலைப்படாத இருவரும் நண்பர்கள் உதவியோடு திருமணம் செய்து கொண்டனர். இன்பமே பொறாமைப்படும் அளவுக்கு இனிமையான வாழ்க்கை வாழ்ந்தனர். முதல் குழந்தை யுகேந்திரன் பிறந்த ஆறாவது மாதம், வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் தபால் அலுவலகத்தில் க்ளார்க் ஆக அரசாங்க வேலை கிடைத்தது பரிமளாவுக்கு. பக்கத்து வீட்டில் பரிவோடு பழகிய லட்சுமி என்கிற பெண்மணி, அவள் வேலைக்குப் போவதால் குழந்தையை கவனித்துக் கொண்டாள்.

ரமணன் மனைவியை இமைபோல் காத்தான். குழந்தை பிறந்த பிறகு பெற்றவர்கள் வராவிட்டாலும், அக்கா யசோதாவும் ரமணனின் ஒன்று விட்ட சித்தப்பா மகளான வனஜாவும் இவர்களை அடிக்கடி வந்து பார்த்தனர்.

ரமணனுக்கு எது தேவையோ இல்லையோ.. தினமும் பரிமளா வேண்டும். அதை எண்ணி சலித்துக் கொண்டாலும், கணவனின் நேசத்தை எண்ணி சந்தோஷப்பட்டாள். அதன் விளைவு அடிக்கடி கர்ப்பம்! அடிக்கடி அபார்ஷன்! அதிலிருந்து தப்பிப் பிறந்தவர்கள்தான் ஜீவிதாவும் சவிதாவும்.

ஜீவிதா பிறந்த பிறகு.. பரிமளாவின் உடல் தளர்ந்தது. அடிக்கடி அபார்ஷன் செய்ததால் உடல் பலமிழந்தது. பளபளத்த கன்னங்கள் வறண்டன. காற்றுப் போன வயிறு.. கொடியிடையைக் காணாமல் ஆக்கி உப்பலானது.

இப்போதெல்லாம் முன்புபோல் ரமணனுக்கு அவள் தேவையில்லாமல் போனாள். அவள் இல்லாமலே உறங்கினான். அலுவலக வேலைக்காக என்று வெளியூர் கிளம்பி, இரண்டு மூன்று நாட்கள் தங்கினான். தினசரி இரவு வீடு வர தாமதமாக்கினான். ஒரு வரியில் சொல்லப் போனால், படுப்பதற்கு மட்டுமே வீட்டுக்கு வந்தான்.

ஆரம்பத்தில் பரிமளாவின் காதல் உள்ளம் அவன் சொல்வதை எல்லாம் அப்பட்டமாக நம்பியது. தொட்டதற்கெல்லாம் சண்டை போட்டான்.

அப்போது சவிதா வயிற்றில் ஏழு மாதம்.

கணவனைப் பற்றித் தப்பு தப்பாய்க் காதில் விழ ஆரம்பித்தது. ரமணனுக்கு ஏகப்பட்ட பெண்கள் சகவாசம். கேட்டதற்கு மழுப்பினான். தவறை மறைக்க எரிந்து விழுந்தான். தம்பதியருக்குள்.. மனதின் நெருக்கம் குறைந்து இறுக்கம் அதிகமானது. நேச முயற்சிகள் செல்லுபடியாகாமல் தள்ளுபடியானது.

ஒருவரை நேசித்து விட்ட பிறகு, மற்றவரை எப்படி உடலளவிலும் மனதளவிலும் அனுமதிக்க முடியும்? அப்படியானால் என் மேல் ஏற்பட்டது காதல் இல்லையா? ஊரை எதிர்த்து இணைந்ததற்கு என்ன பெயர்?

பரிமளா தவித்துப் போனாள்.

கடைசியாக வந்த தகவலின்படி, ரமணன் ஒரு பணக்கார விதவையை மணந்து.. அவளுடனும் குடும்பம் நடத்துவதாக செய்தி!

கேள்விப்பட்ட பரிமளா தாங்க முடியாத வேதனையுடன் விடுப்பு எடுத்துக் கொண்டு வீட்டுக்கு வந்தபோது.. ஒரு மனைவி மட்டுமல்ல.. இந்த உலகமே பார்க்கக் கூடாத விஷயம், வீட்டுக்குள்ளே நடந்து கொண்டிருந்தது.

## 17

அவசர மோகத்தில் தாழிட மறந்து ரமணனுடன் இருந்தவள்.. இருந்தவள்.. ரமணனின் ஒன்றுவிட்ட சித்தப்பா மகள் வனஜா! தன்னை 'அண்ணி' என்றும் அவனை 'அண்ணா' என்றும் அழைப்பவள்.. திகைத்து நடுங்கிப் போனாள் பரிமளா!

'த்தூ! உடல் ஆசை இவ்வளவு கீழ்த்தரமானதா?' கூனிக் குறுகிப் போனது பரிமளாதான்! அந்தக் கீழ்த்தரமான காட்சியை, தன் கண்களாலேயே பார்த்து விட்டவளுக்குள்ளே எரிமலை வெடித்தது. இதை எதிர்பார்க்காத வனஜா ஓடிப்போய் விட்டாள்.

ரமணனோ, அதிர்ந்தாலும் தன்னைத் திமிருடன் காட்டிக் கொண்டான்.

''இவ்வளவு மோசமானவனா நீ? எனக்கு துரோகம் பண்றதே பெரிய பாவம்! அதிலேயும் தங்கை முறை கொண்டவளோட.. ச்சீச்சீ..!''

''ஏய்.. இதோ பார்.. இதையெல்லாம் கண்டுக்காதே!''



''கண்டுக்காதேன்னா..?''

''நான் அப்படித்தான் இருப்பேன். என்னடீ முறைக்கிறே? அட்ஜஸ்ட் பண்ணிக்கிட்டு இருக்கறதுன்னா இரு.. இல்லேன்னா.. உம்பிள்ளைங்களைத் தூக்கிக்கிட்டு, போய்ட்டே இரு!''

அவன் நடவடிக்கை தந்த அதிர்ச்சியை விட, அவன் பேசியது பெரிய அதிர்ச்சியைத் தரவில்லை. பரிமளா அதன்பின் வாயடைத்துப் போய் மவுனமானாள். அவனுடன் வாழ்ந்த வாழ்க்கையையே அசிங்கம் என்று கருதினாள். ரமணன் தெரிந்து விட்டதே என்கிற தெனாவட்டில் வீட்டுக்கு வருவதை நிறுத்தினான்.

பரிமளா தன் வேலையை வி.ஆர்.எஸ் எழுதிக் கொடுத்தாள். சவிதா பிறந்தாள். பிறந்து இரண்டாவது மாதம் ஓய்வு பெற்ற பணம் சில லட்சங்கள் வந்தது. வீடு விற்பனைக்கு என்று பேப்பரில் வந்த விளம்பரத்தைப் பார்த்து அரக்கோணத்தில் வீடு வாங்கினாள். ஒரு நாள் இரவு, தன் குழந்தைகளைத் தூக்கிக் கொண்டு, சொல்லாமல், கொள்ளாமல் வெளியேறினாள்.

பிராட்வேயில் வேலை தேடிக் கொண்டாள். நம்பிக்கையான, வயதான யாருமற்ற ஒரு மூதாட்டியை தன்னுடன் வைத்துக் கொண்டு, தன் குழந்தைகளின் பொறுப்பை அவளிடம் ஒப்படைத்தாள். கிட்டத்தட்ட ஐந்து வருடம் அந்த மூதாட்டி உயிரோடிருந்தாள். உடல் நலிவுற்று இறந்தவளை நல்ல முறையில் அடக்கம் பண்ணினாள்.

என்றைக்கு ரமணனை அந்தக் கோலத்தில் பார்த்தாளோ, அன்றைக்கே பூவையும் பொட்டையும் துறந்து விதவையானாள். காதலிப்பவர்களைக் கண்டாலே வெறுப்பு ஏற்பட்டது. அவளைப் பொறுத்தவரை திருமண சித்தாந்தம் இதுதான்!

ஆண்களைப் பொறுத்தவரை சீக்கிரம் திருப்தி அடைகிறவர்கள். தவிர, காதலிக்கும்போதே.. சின்னச் சின்ன சீண்டல்கள், முத்தங்கள், பேச்சுக்கள்.. வெகு நாட்கள் பழகிய திருப்தியைத் தந்து விடுகிறது. அதே காதலியை மணக்கும்போது.. மோகத்தின் ஆயுள் குறைந்து போய் விடுகிறது.

இதுவே, பெற்றோர் பார்த்து நடத்தும் திருமணம் என்றால்.. தம்பதிகள் புதிதாய் வாழ்க்கையைத் துவங்கும்போதுதான் காதலிக்கவே ஆரம்பிப்பார்கள். அதன் தவிப்பும் இனிமையும் சந்தோஷமும் ஆயுளும் நீண்டதாக இருக்கும்.

காதல் உண்மையானதல்ல! எக்காரணத்தை

முன்னிட்டும் என் பிள்ளைகள் காதலிக்கக் கூடாது. இந்த பயமே.. குழந்தைகளைப் பொத்தி வளர்க்க வைத்தது.

எதன் மேலும் ஆசை வந்துவிடக் கூடாது. உணவு, உடை என்று அனைத்திலும் எளிமைதான். சலனப்படக் கூடாதென்பதற்காக.. குறிப்பிட்ட சேனலைத் தவிர டி.வியில் மற்றதைப் பார்க்க அனுமதியில்லை. படிப்பில் மட்டுமே கவனத்தைச் செலுத்த வற்புறுத்தினாள்.

ரமணனின் உறவினர்களுடைய கண்களில் பட்டுவிடக் கூடாது என்பதற்காகவே.. புறநகர்ப் பகுதியில்.. படிப்பதற்கும் வேலைக்குச் செல்வதற்கும் தூரம் என்றாலும் அரக்கோணத்தில் வசித்தாள்.

அனைத்தையும் தங்கையிடம் சொல்லி முடித்தாள் ஜீவிதா.

ஸ்தம்பித்துப் போயிருந்தாள் ஜீவிதா.

''நிஜமாவா? நீ சொன்னதெல்லாம் உண்மையா? அப்பா இவ்வளவு மோசமானவரா? உவ்வே.. ச்சீ..''

''கேள்விப்படற நமக்கே இப்படி இருக்கே? வாழ்ந்து அனுபவப்பட்டு, காயப்பட்ட அம்மாவை நினைச்சிப் பார்.''

''எல்லாம் சரிதான். அவங்க காதல் மோசமானதா இருந்திருக்கலாம். அதுக்காக.. நம்மள இவ்வளவு கட்டுப்படுத்தறதா? அண்ணனுக்குக் குடுத்த தண்டனை எல்லாம் பெரிசு இல்லையா?''

''ஆனா, அவங்க அனுபவம் மோசமானதுடி! மனரீதியா பாதிக்கப்பட்டவங்ககிட்ட, இதுதான் சரினு புரிய வைக்க முடியாது. நாமதான் உலகம்னு வாழ்ந்தவங்க.. நமக்காக வாழ்ந்தவங்க. நாம அவங்க எண்ணத்துக்கு மாறா நடந்துக்கிட்டா, அவங்களால தாங்கிக்க முடியுமா? காதலுக்காக அவங்க செஞ்ச தியாகம் பெரிசு. அதுக்கு அர்த்தமில்லாமல் பண்ணிட்டார் அந்தாளு!

இன்னொரு விஷயம் சொன்னா ஆச்சர்யப்படுவே! அம்மா பூஜை பண்றப்ப எவ்வளவு அழகா சாமி பாட்டெல்லாம் பாடறாங்க? காயத்ரி மந்திரம், அஷ்டலக்ஷ்மி ஸ்தோத்திரம்னு வரி பிசகாம சொல்லுவாங்க இல்லையா? அவங்க உண்மையில யார் தெரியுமா? பர்வீன் பானு!''

''எ..ன்..ன..து?''

''ஆமாண்டி! அம்மா கன்சர்வேடிவ் முஸ்லிம் குலத்துல



## திக்கெட்டும் தீபாவளி!

கர்நாடகத்திலும் தீபாவளியை ஐந்து நாள் கொண்டாடுகிறார்கள். தீபாவளி தினத்தன்று கிராமத்து மக்கள், ஒருவர் மீது ஒருவர் சாணத்தை வீசி விளையாடி மகிழ்வார்கள்.

தொகுப்பு: எஸ்.விஜயலஷ்மி, சென்னை-88
லஷ்மி சிவம், சென்னை-7



பிறந்தவங்க. தன் காதலுக்காக பரிமளாவாக மாறி.. பிள்ளைகளுக்காகவும் அப்படியே வாழ்ந்திட்டு இருக்கிறவங்க!''

''ஓ!'' சங்கடத்துடன் தலையாட்டினாள். பிறகு, ''ஆனா.. அந்தத் திருவள்ளூர் வீடு..!''

''அதுவா?''

''காலேஜ் படிக்கிற பசங்ககிட்டே.. 'அம்மா ஒரு வீட்ல சமையல்காரியா வேலை செய்யறேன்'னு சொன்னா சங்கடப்படப் போறோமோன்னு, 'பார்ட் டைமா ஒரு ஆஃபீஸ்ல வொர்க் பண்றேன்'னு சொல்லி இருக்காங்க!''

''சமையல்காரியா?''

''ஆமாம்! அந்த வீட்ல ஜெகநாதன்னு பெரியவர் இருக்கார். வொய்ஃப் இறந்துட்டாங்க. நைட்டுக்கு மட்டும் சமைச்சு வச்சிட்டு வரணும். ரெண்டாயிரம் ரூபா சம்பளம். எல்லாமே நம்மளை கரையேத்தத்தான்.. அவங்க கரைஞ்சாங்க!''

''ச்சே.. நான் போய் அம்மாவை எப்படியெல்லாம்.. இந்தக் கையால அடிச்சிட்டேன்.. எப்பேர்ப்பட்ட பாவத்தைப் பண்ணிட்டு வந்து நிக்கறேன் பாரு ஜீவி!'' முகத்தில் அறைந்து கொண்டு அழுதாள்.

அவளை சில நிமிடங்கள் அழ விட்டாள்.

''சரி கிளம்பு!''

''எங்கே?''

''நம்ம வீட்டுக்குப் போகலாம்!''

''ஆமாம்.. முதல்ல நான் அம்மா கால்ல விழுந்து மன்னிப்பு கேக்கணும்!''

கிளம்பினர்.

தொடர்ச்சி 91-ம் பக்கத்தில்..

ஜி.எஸ்.எஸ்.

## பொது அறிவுப் போட்டி – 18

**ஒவ்வொரு கேள்விக்குமான சரியான விடையைத் தேர்ந்தெடுங்கள்.**

1. பாலைவனத் திருவிழா எந்த மாநிலத்தில் விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது?
அ) ராஜஸ்தான் ஆ) மத்தியபிரதேசம் இ) ஜார்கண்ட்

2. ஈஸ்டர் என்பது எதைக் குறிக்கும் தினம்?
அ) ஏசுநாதர் பிறந்த தினம் ஆ) ஏசுநாதர் முதன்முதலில் போதனை செய்த தினம்
இ) சிலுவையில் அறையப்பட்ட ஏசுநாதர் உயிர்த்தெழுந்த தினம்

3. கிருஷ்ணர் எந்த நட்சத்திரத்தில் அவதரித்தார்?
அ) கார்த்திகை ஆ) ரோகிணி இ) ரேவதி

4. விஜயதசமி எந்த தெய்வத்துக்கு உகந்த நாள்?
அ) மஞ்சமாதா ஆ) துர்கா இ) காத்யாயினி

5. புத்த பூர்ணிமா என எந்த தினம் கொண்டாடப்படுகிறது?
அ) புத்தர் பிறந்த தினம் ஆ) புத்தர் அரண்மனையை விட்டு நீங்கிய தினம் இ) புத்தர் போதி மரத்தடியில் ஞானம் பெற்ற தினம்

6. சத்ய நாராயணா விரதத்தின்போது சமையலில் தவிர்க்கப்படும் பொருள் எது?
அ) சர்க்கரை ஆ) மிளகு இ) உப்பு

7. ஹஜ் யாத்திரை என்பது எந்த நாட்டுக்கான பயணம்?
அ) ஈரான் ஆ) ஐக்கிய அரபுக் குடியரசுகள் இ) சௌதி அரேபியா

8. சூரசம்ஹாரம் எனும் திருவிழா எங்கு மிகப் பிரபலம்?
அ) பழனி ஆ) திருத்தணி இ) திருச்செந்தூர்

---

தமிழகக் கட்சிகள் தனித்தனியாக மோதும் உள்ளாட்சித் தேர்தல் பற்றி ஒரு பளிச் பஞ்ச்.

**வா**சக நெஞ்சங்களே! உங்கள் பொது அறிவை சோதிக்கும் இந்தக் கேள்விகளுக்கான சரியான விடையை டிக் செய்யுங்கள். சரியான விடைகளோடு சூப்பர் பஞ்ச்சும் எழுதி எங்களுக்கு அனுப்புகிற டாப் 10 வாசகர்களுக்கு திரிசக்தி பதிப்பகப் புத்தகம் பரிசாக அளிக்கப்படும்!

விடைகள் எங்களை அடைய வேண்டிய கடைசித் தேதி: 20-10-2011

**அனுப்ப வேண்டிய முகவரி:**

**தேவதையின் கொலுசு**
**திரிசக்தி குழுமம், கிரிகுஜா என்க்ளேவ், 56/21,**
**முதல் அவென்யூ, சாஸ்திரி நகர், அடையாறு, சென்னை-20.**



85-ம் பக்கத்தின் தொடர்ச்சி..

**வீ**டு பூட்டியிருந்தது. வழக்கமாய் வைக்கும் இடத்தில் கதவுக்கு மேலே.. ஓட்டுக் குழிக்குள் இருந்த சாவியை எடுத்து பூட்டைத் திறக்கும்போதே.. இதயம்.. சிறகாய்ப் படபடத்தது.

உள்ளே என்னவோ நடந்து முடிந்த அமைதி!

''எங்கேடி அம்மா?''

''தெ.. தெரியலியே!''

'ஒருவேளை என் பேச்சுக்களையும் அடியையும் தாங்காமல்.. ஏதாவது தப்பான.. முடிவுக்கு..

ஐய்யோ.. நினைக்காதே.. அப்படி நினைச்சிடாதே!'

பூஜையறை மாடத்தில் சட்டென அந்த வித்தியாசம் தெரிய.. நெருங்கிப் பார்த்தாள் ஜீவிதா.

சின்ன நகைப் பெட்டி.. ஒரு கடிதம்!

'சவிதா,

அம்மா எழுதுவது..

என்னென்னவோ நடந்து முடிந்து விட்டது. உன்னைப் பெற்றவனைப் பற்றி மறைத்து.. மாண்டு விட்டதாகச் சொன்னது.. என்வரையில் நியாயம்! பரிமளா என்கிற தனி மனுஷி வாழ்க்கையில் பட்ட அவலத்தின் வெளிப்பாடே அந்தக் கோபம்! என்னைத் தப்பானவளாக சித்தரித்து நீ நிறைய தவறுகளைச் செய்து விட்டாய். அத்தனையும் என்னை தண்டிப்பதற்காக நீ மேற்கொண்டது. தாங்கவில்லையம்மா!

சிறு குழந்தையாய்.. என் மார்பில் எட்டி விளையாடும்போது.. அந்தப் பாதங்களை முத்தமிட்டு மகிழ்ந்திருக்கிறேன். ஆனால் என் கன்னத்தில் நீ அடித்தபோது.. உயிரே போய் விட்டதம்மா! எந்தத் தாய்க்கும் கிடைக்கக் கூடாத தண்டனை இது!

இந்தப் பத்து பவுன் நகை உனக்காக இதுவரை சேர்த்து வைத்தது. எல்லாமே உண்மையாக, கஷ்டப்பட்டு உழைத்தது.

உன்னிடம் உண்மைகளை விளக்கிச் சொல்லி

வல்லமை தாராயோ இந்த
மா-நிலம் பயனுற வாழ்வதற்கே..

தேவதை
# கொலுசு

மணி: 2 இசை:6

நிறுவனர்
டாக்டர் திரிசக்தி சுந்தர்ராமன்

கிரிகுஜா பப்ளிகேஷன்ஸ் பி. லிமிடெட்டுக்காக, ராசி கிராஃபிக்ஸ் பி.லிட்., எண் 40, பீட்டர்ஸ் ரோடு, ராயப்பேட்டை, சென்னை - 14-ல் அச்சிட்டு,

வெளியிடுபவர்
எஸ்.மதன்சந்தர்

கௌரவ ஆசிரியர்
நளினி சுந்தர்ராமன்

ஆசிரியர்
தயாமலர்

பொறுப்பாசிரியர்
ரா.கோகுலவாச நவநீதன்

வடிவமைப்பு
கோவி.செந்தில்

எல்லாத் தொடர்புகளுக்கும்:
'தேவதையின் கொலுசு' மாத நாவல்,
திரிசக்தி குழுமம்,
எண்: 56/21, முதலாவது அவென்யூ,
சாஸ்திரி நகர், அடையாறு,
சென்னை-20.
தொ.பே. எண்: +91-44-4297 0800
சந்தா விபரங்களுக்கு: 9566112266
இ-மெயில்: kolusudesk@gmail.com
subscription.trisakti@gmail.com

✤ கதைகளில் இடம்பெறும் சம்பவங்களும் பெயர்களும் கற்பனையே! இதழில் வெளியாகும் விளம்பரங்களின் நம்பகத் தன்மைக்கு 'கொலுசு' நிர்வாகம் பொறுப்பல்ல!

✤ தேர்வாகாத படைப்புகளைத் திருப்பி அனுப்ப இயலாது. எனவே, படைப்புகள் அனுப்புவோர் தங்கள் வசம் ஒரு பிரதி வைத்துக் கொள்ளவும்.

## அழிப்பான் கதைகள்..

1. ஒற்றைக்கால் கருப்பனை தலைக்கு மேலே தூக்கிச் செல்கிறார்கள். அது என்ன?

2. வாயோரம் காதுகள் இருக்கும். அவன் யார்?

3. தஞ்சாவூர் பொம்மைக்கு தலையிலே ஓட்டையாம். அது என்ன?

4. சொன்னதைச் சொல்வான் கிளிப் பிள்ளை அல்ல.. சொல்லாமல் விட மாட்டான்.. போக்கிரியும் அல்ல.. அவன் யார்?

5. இடமொருவன் வலமொருவன் இருந்து நம்மை சுமப்பார்கள்.. இடம் மாறி நிற்க வைத்தால் இறுமாப்பாய் மறுப்பார்கள். அவர்கள் யார்?

6. சுழற்றினார்கள் சுழன்றான்.. சுட்டார்கள் வெந்தான்.. போட்டார்கள் செத்தான். அவன் யார்?

7. அவன் கைப்பட்டாலே இளமை திரும்பி விடும். அவன் யார்?

8. எட்டு கால் ஊன்றி, இரு கால் படமெடுத்து வட்டக் குடை பிடித்து வருகிறார் பண்ணையார். அவர் யார்?

9. உயிரில்லாதவன்; கயிற்றுக்கு மட்டும் ஆடுவான். அவன் யார்?

10. சேமித்து வைக்க முடியாத பெட்டி.. செமித்து விடும் பெட்டி. அது என்ன?

11. கங்கைக்குள் நீந்தும் கருவண்டு.. கரையை விட்டு மட்டும் வெளியே வராது. அது என்ன?

*- தஸ்மிலா, கீழக்கரை*

*விடைகள்: 96 -ம் பக்கத்தில்.*



என்னை நிரூபித்திருக்கலாம். முடியவில்லை. மனசு ரணமாய் வலிக்கிறது. நான் நேசித்த யாருமே என்னை நேசிக்கவில்லையே! ஜீவிதாவும் என்னைத் தவறாக நினைத்து வார்த்தைகளைக் கொட்டுவாள். உன்னைப் போல் அடிக்கவும் செய்யலாம். தாங்கிக் கொள்ள முடியாது கண்ணே! செய்யாத தவறுக்கு தண்டனையா?

உங்கள் முகம் பார்க்க இந்தத் தாய்க்கு தைரியமில்லை. போகிறேன். சாக மாட்டேன்.. ஆனால் தேட வேண்டாம்.

என் ஆசிர்வாதங்கள்!

இப்படிக்கு,
பரிமளா!

''ஐய்யோ.. அம்மா.. அம்மா!'' தலையில் அடித்துக் கொண்டு அழுதாள் ஜீவிதா.

ஏதோ விபரீதம் எனப் புரிந்தவளாய் சவிதாவும் அழ ஆரம்பித்தாள்.

## 18

''ஸ்ஸ்.. ஆ.. முடியலம்மா.. வலிக்குது!''

''அவ்வளவுதான்.. கொஞ்சம் பொறுத்துக்கம்மா.. இதோ எடுத்துட்டேன்!''

பாட்டியின் காலில் இருந்த வேலிகாத்தான் முள்ளை நாசூக்காய் எடுத்தாள் பரிமளா.

''ப்பா..'' ஆசுவாசமாய் சாய்ந்தமர்ந்தாள் தொண்ணூறு வயதுப் பாட்டி.

''எப்பவும் செருப்பில்லாம நடக்கக் கூடாதுனு சொல்லியிருக்கேனே.. பாருங்க.. ரத்தம் வர்ற அளவுக்குக் குத்தியிருக்கு!''

''வெறும் காலோட நடந்துதான் பழக்கம் கண்ணு!'' என்றவளுக்கு, பரிமளா ரத்தம் துடைத்து, மருந்து வைத்துக் கட்டுப் போட்டாள்.

''அம்மாடி..!'' எழுந்து சென்றவளை அழைத்தவள் ருக்மணி பாட்டி. கையில் புத்தகம்.

''சொல்லுங்கம்மா!''

''படிச்சுக் காட்டேன்!''

''இதுவரை பத்து முறை படிச்சு முடிச்சாச்சு. எத்தனை முறை படிக்கறது. போரடிக்கலையா?''

''எனக்கு சிவசங்கரிய ரொம்பப் பிடிக்கும் தாயி! அதுவும் இந்த 'நண்டு' கதைய.. கண்ல நல்லா பார்வை இருக்கறப்பவே நூறுவாட்டியாவது படிச்சிருப்பேன்.. படிச்சுக் காட்டும்மா..!''

''சரி.. மதியம் சாப்பிட்டு முடிச்சதும் படிச்சுக் காட்டறேன்.. சரியா?''

''மேடம்.. அம்மா கூப்பிடறாங்க!'' அலுவலகப் பெண் கிளாரா வந்தழைத்தாள்.

''வந்துட்டேன்!''

அலுவலக அறையை நோக்கி நடக்க ஆரம்பித்தாள் பரிமளா.

''துளிர்.. முதியோர் இல்லம்''

மூன்று பக்கத்திலும் வைக்கப்பட்டிருந்த போர்டு பளிச்சென்று கண்களில் விழுந்தது.

திருச்செந்தூரில் இயங்கிக் கொண்டிருந்த இந்த இல்லத்துக்கு, தொண்டு நிறுவனங்களும், தொழிலதிபர்களும் தாராளமாக உதவி செய்வதுடன், அதை நடத்தி வரும் ஞானமணி தன் சொத்துக்களை விற்று டெபாசிட்டும் செய்திருந்ததால், அந்தப் பணத்திலிருந்து வரும் வட்டித் தொகையையும் சேர்த்து.. ஆதரவற்ற அந்த முதியோர்களுக்கு உணவும் மருத்துவமும் இருப்பிடமும் தாமானதாய்த் தர முடிந்தது.

முதியோர்களில் ஆண்களை கவனிக்க ஆண் பணியாளர்களும், பெண்களை கவனிக்க பெண் பணியாளர்களும் இருந்தனர்.

பரிமளா இங்கு பணிக்கென்று சேர்ந்து நான்கு மாதங்களாகி விட்டது.

ஞானமணி, பரிமளாவுடன் படித்த கல்லூரித் தோழி! பரிமளா சம்பளமின்றிப் பணி புரிந்தாலும், அவளும் ஆதரவற்றவள்தானே!

ஞானமணி படிக்கும் காலத்திலிருந்தே நல்ல சிந்தனையும் உதவும் குணமும் கொண்டவளாய் இருந்தாள். அப்போதே.. 'இதுபோன்ற கருணை இல்லம் ஆரம்பித்து உதவ வேண்டும்' என்று சொல்லிக் கொண்டிருப்பாள். அதிர்ஷ்டமாய் அவளுக்கு அமைந்த கணவனும் சரி, பிள்ளைகளும் சரி.. ஏற்றாற்போல் இருந்தனர். கணவர் மட்டுமல்ல.. தங்கள் குடும்பம்,



வேலை நேரம் போக பிள்ளைகளும் துளிரில் பங்கெடுத்துக் கொள்வதுதான் சிறப்பு.

''வா.. பர்வீன்.. ஓ.. ஸாரி.. பரிமளா!''

''பரவாயில்லே.. சொல்லுப்பா!''

''இன்னும் ரெண்டு நாள்ல தீபாவளியாச்சே! நம்ம இல்லத்துல உள்ளவங்களுக்கு தீபாவளிக்கு மூணு வேளையும் விருந்து தர மூணு செலிப்ரிட்டீஸ் கேட்டிருக்காங்க. மொத்தம் எத்தனை பேர்னு ஒரு பட்டியல் போட்டுக் குடுத்துடுப்பா! அப்படியே மெனு பத்தியும் டீடெய்ல் குடுத்துடு.. வயசானவங்க பாரு.. இஷ்டத்துக்கு ஏகப்பட்ட மசாலா சேர்த்துக் குடுத்துடப் போறாங்க..!''

''அதுவும் சரிதான்!''

''அப்புறம்.. இந்தாப்பா.. இதை வச்சுக்க..!'' ஒரு கவரை நீட்டினாள் ஞானமணி.

''என்னப்பா?''

''சம்பளம்..''

''என்னப்பா நீ.. சம்பளத்துக்கா இங்கே வேலை செய்யறேன்? சொல்லப் போனா, நானும் இவங்கள்ல ஒருத்தி! என் உடம்புல தெம்பு இருக்கறவரைக்கும், திருப்தியா இவங்களுக்கு சேவை பண்றேன். சப்போஸ் எப்பவாவது எனக்கு ஏதாவது ஆச்சுன்னா.. ஜீவிதாவுக்குத் தகவல் சொல்லிடு. இஷ்டப்பட்டா என்னை எடுத்துப் போடட்டும்.''

''என்னப்பா இப்படியெல்லாம் பேசறே? பழசையே நினைச்சிட்டிருக்காதே! நான் இருக்கேன் உனக்கு. சரி.. போ!''

''வர்றேன்ப்பா!''

தனக்கென்று ஒதுக்கப்பட்ட சிறியதான அந்த அலுவலக அறையில் அமர்ந்து லெட்ஜரை எடுத்தாள். அதில் எப்போதும் வைத்திருக்கும் மூன்று ஃபோட்டோக்களும் சரிந்து கீழே விழுந்தன.

யுகேந்திரன், ஜீவிதா, சவிதா.

வெகுநேரம் அந்த ஃபோட்டோக்களையே பார்த்துக் கொண்டிருந்தவளின் கண்களில் தாரை தாரையாய்க் கண்ணீர்!

'நீங்கள் எல்லாரும் என்னை வெறுத்தாலும், மறந்தாலும்

நான் உங்களை நினைத்துக் கொண்டிருக்கிறேன். ஜீவிம்மா.. உனக்கு இது தலை தீபாவளி. ஆனால் எடுத்துச் செய்ய உன் அருகில் நானில்லை. நீ என்மீது நிறையவே மரியாதையும் அன்பும் வைத்திருந்தாய். அத்தனையும் போச்சில்லையா? சவிதா சொன்னதையெல்லாம் நம்பி என்னை வெறுத்திருப்பாய்..!'

அந்தத் தாயின் வலி மிகுந்த கண்ணீருக்கு எப்போது விடிவு வரும்?


அதே சமயம்.. ஜீவிதாவும் சவிதாவும் தங்கள் கணவர்களின் துணையோடு அம்மாவைத் தேடிக் கொண்டுதான் இருக்கிறார்கள். முதியோர் இல்லங்களையும் விட்டு வைக்கவில்லை. என்றாவது ஒருநாள் அவர்கள் திருச்செந்தூருக்கும் வரலாம்! துளிர் இல்லத்தில் வாடிப் போயிருக்கும் தாயையும் பார்க்கலாம்.

பரிமளாவின் துக்கங்கள் எல்லாம் கடவுளின் அரவை எந்திரத்தில் அரைபடட்டும்.

கடவுள் கொடுக்க நினைத்ததை யாராலும் தடுக்க முடியாது. அவர் தடுக்க நினைத்ததை யாராலும் கொடுக்க முடியாது.

(நிறைவடைந்தது.)

## அழிப்பான் கதை விடைகள்



1. குடை
2. பை
3. உண்டியல்
4. எதிரொலி
5. செருப்பு
6. பானை
7. இஸ்திரி பெட்டி
8. நண்டு
9. பம்பரம்
10. வயிறு
11. கண்ணின் கருவிழி







## கவிதைகள்

### அவசியம்

பணமோ, பாசமோ
சேமிப்பும் அவசியம்
செலவழிப்பும் அவசியம்
உரிய நேரத்தில்!

### சுலபம்

சில நேரங்களில்
பிரச்னை என்ன
என்று தெரிந்து
விட்டாலே..
பாதி பிரச்னை
தீர்ந்து விடும்
சுலபமாக!

- ஜி.சத்தியகலா,
பெரியகுளம்

### தாலிக்குப் பின்..

ஒருமுறையேனும்
கடற்கரை அழைத்துப்
போய்
உன் மடியில் என்னை
தலைசாய விடு!
ஒருமுறையேனும்
சினிமாவுக்கு அழைத்துப்
போய்
என்னை செல்லமாய்
சில்மிஷம் செய்!
ஒருமுறையேனும்
ஓட்டலுக்கு அழைத்துப் போய்
பிரகாரத்தில் அமர்ந்து
என்னோடு பேசு!
ஒருமுறையேனும்
கவிதை எழுதி
என்னிடம் படிக்கக் கொடு!
என் காதல் கணவனே..
கழுத்தில்
தாலி கட்டிய பிறகு
இதெல்லாம் கூடாதென்று
எந்த சம்பிரதாயமும் இல்லை!

- ரம்யா ராமகிருஷ்ணன்,
புதுக்கோட்டை